COMPLIMENTARY

OFFICE ... BOOKS
5th AUG 1942
MADRAS

# சக்தி

247
321
6-7



# கண்ணகி ஆரம்ப விழா!



## 1942 ௵

## ஆகஸ்ட் ௴

## 2௳ முதல்

## கீழ்க்கண்ட 9 இடங்களில் ஆரம்பம்

| | | |
|---|---|---|
| மதுரை | — | சிந்தாமணி டாக்கிஸ் |
| திருச்சினுப்பள்ளி | — | வெலிங்டன் டாக்கீஸ் |
| காரைக்குடி | — | நடராஜா டாக்கீஸ் |
| திருநெல்வேலி | — | ராயல் டாக்கீஸ் |
| சேலம் | — | ஸெண்ட்ரல் டாக்கீஸ் |
| பெங்களூர் | — | சிவாஜி டாக்கீஸ் |
| கும்பகோணம் | — | டைமண்ட் சினிமா |
| காஞ்சீவரம் | — | கண்ணன் டாக்கீஸ் |
| வேலூர் | -- | நியூ அபேரா டாக்கீஸ் |

ஜுபிடர் பிக்சர்ஸ் &
சேலம் ஷண்முகா பிலிம்ஸ்
தயாரிப்பு

டைரக்ஷன்
M. சோமசுந்தரம் & R. S. மணி

கதை, வசனம்
" இளங்கோவன் "

நடிகர்கள்
P. U. சின்னப்பா
N. S. கிருஷ்ணன்
P. கண்ணும்பா
T. A. மதுரம்
U. R. ஜீவரத்னம்

## சௌத் இந்தியா பிக்சர்ஸ் ரிலீஸ்

H. O. காரைக்குடி    Branches: பெங்களூர், கோயமுத்தூர், மதராஸ், பெஜவாடா



# "மஞ்சள் பூசா மேனி மங்கும்"

பழங்காலத்து சமாச்சாரம்
அது—இப்போதோ எழில்வாய்க்க
இன்னும் உறுதியான வழி உள்ளது.

பண்டு பண்டையிலிருந்தே தலைமுறை தலைமுறையாக பற்பல விசித்திரமான சௌந்தரிய முறைகள் பழக்க வழக்கத்தில் ஏற்பட்டுள்ளன. அதுகள் ஓரளவு கற்றறிவு—ஓரளவு கற்பிதம்—ஆகவே, பூர்ண பலன் அளித்து வரவில்லை. இக்காலத்தெல்லாம் நமக்காக அதியாச்சரியமான ரசாயன சாலைகளில் எத்தனையோ மேதாவிகளான விஞ்ஞானிகள் ஆரோக்கியத்தின் நுட்பங்களையும் அழகின் ரகசியங்களையும் கூர்ந்து ஆராய்ந்து வருகின்றனர். தற்பயனாக விளைந்தவையே பாண்ட்ஸ் க்ரீம்கள். மங்கையர் எழிலுக்கு விஞ்ஞான ஆராய்ச்சியின்படி எதெது இன்றியமையாததோ அந்த அம்சங்களெல்லாம் இந்த க்ரீம்களில் உள்ளன. உபயோகித்துப் பாருங்கள். உங்களுக்கே உண்மை விளங்கும்.

• பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம்: காலையிலும் மாலையிலும் முகத்தில் மெதுவாகத் தடவி, சொற்ப நிமிஷங்கள் அப்படியே வைத்திருந்து, பின்பு அழித்துக் களையுங்கள். அது மயிர்க் கண்களினூடை சென்று அங்குள்ள எண்ணெய் அழுக்குகளை கரைத்து போக்கி விடுவதோடு சருமத்திற்கு அவசியமான வளப்பத்தையும் அளிக்கிறது.

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்: எண்ணெய்ப் பொருள்கள் இல்லாததாகையால் பகல் நேரத்தில் தாராளமாய் உபயோகிக்கலாம். அது சருமத்திற்கு மேன்மையைக் கொடுத்து வெயில், காற்று முதலியவற்றிலிருந்து பாதுகாக்கிறது.




## பாண்ட்ஸ் க்ரீம்

# FREE! FREE! FREE!




லைசென்ஸ் இல்லை—ஆட்டோமாட்டிக் பிஸ்டல்

LONDON COMMERCIAL COMPANY,
Post Box No. 165, (S. M.) LAHORE, (India.)

தானே சுழன்று ஒன்றன் பின் ஒன்றாக வெடிப்பதால் திருடர்கள் அஞ்சி ஓடும்படிச் செய்கிறது. உண்மையான ரிவால்வரைப் போல் வெடிக்கும்போது பொறி பறந்து அதிர்ச்சியுடன் வெடிக்கிறது. அதன் சப்தம் காட்டு மிருகங்களையும், பறவைகளையும் நடுங்கி ஓடச்செய்யும். ஆபத்துக்கு ஒவ்வொரு வீட்டிலும் இது ஒன்று அவசியம் இருக்க வேண்டும். லைசென்ஸ் வேண்டாம்.

விலை :—நெ. 7777 ரூ. 4—8—0 (35 ரவைக் குண்டுகள் இனாம்.)

நெ. 8888 ரூ. 5-13—0 (45 ரவைக் குண்டுகள் இனாம்.)

நெ. 9999 ரூ. 6-12—0 (55 ரவைக் குண்டுகள் இனாம்.)

பிரத்தியேக 1000 ரவைக் குண்டுகளுக்கு ரூ. 3—0—0

பெல்டுடன் கூடிய கேஸ் 1-க்கு ரூ. 0-12—0

ரிவால்வர் எண்ணெய் 1-புட்டி ரூ. 1-12—0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

ஒவ்வொரு பிஸ்டலுடன் ஒரு தோலா எடையுள்ள எங்களது "பாரிஸ் ந்யூ கோல்டு" என்னும் தங்கமும் ஓர் அழகிய ம்யூட் கைக் கடிகாரமும் பரிசளிக்கப்படும். ஒரே தடவையில் 2 பிஸ்டல்கள் வாங்குகிறவர்களுக்கு 3 தோலா எடை "பாரிஸ் ந்யூ கோல்ட்" தங்கமும் 3 அழகிய கைக். கடிகாரங்களும் தபால் செலவு உள்பட இனாமாகக் கொடுக்கப்படும்.

---

# ரூ. 50,000 பெறுமானமுள்ள நகைகள் கொடுக்கப்படும்



"லண்டன் ந்யூ கோல்ட்" என்னும் தங்கம் எங்களால் புதிதாகக் கண்டுபிடித்த அழியாப் புகழுடையது. இதை உண்மையாக உலக அதிசயங்களில் எட்டாவதென்றே சொல்லலாம். ஆதலால், இதற்கு யாதொரு பீடிகையும் வேண்டுவதில்லை. இந்தியா முழுதும் ஏற்கனவே இதன் பிரஸித்தம் பரவி, ரஸாயனத் தங்கத்தில் இது ஒன்றுதான் யாதொரு குற்றமும் பழுதுமின்றி எப்பொழுதும் பளபளப்போடு இருக்கக்கூடியதென்றும், அதனால் அநேகவித நாகரீக நகைகள் செய்வதற்குத் தகுந்ததென்றும் பொதுஜனங்களாலும் பத்திரிகைகளாலும் கொண்டாடப்பட்டிருக்கிறது.

"லண்டன் ந்யூ கோல்ட்" என்னும் தங்கத்தை இன்னும் பிரஸித்தி யாக்குவதற்காக, தற்காலிகமாக ஒரு செட் மாதிரிக்கு "லண்டன் ந்யூ கோல்ட்" தங்கம் 3 தோலா எடையுள்ள 2 ஜதை அழகான வளையல்கள், 2 ஜதை காதணி தோடுகள், 2 மோதிரங்கள் அருமையான வேலைப்பாடுடன் கூடியவை படத்துடன் கூடிய காட்லாக்குடன், இப்பொழுது உடனே எழுதுகிறவர்க்கு அனுப்பப்படும். இந்த ஏற்பாடு ரத்தாகுமுன் இப்பொழுதே எழுதவும்.

**LONDON COMMERCIAL COMPANY,**
**Post Box 165, (S. M.) LAHORE, (India.)**

# சக்தி

## பொருள் அடக்கம்




பக்கம்

காந்தி வழி — 170

காலச் சுழல் — 171

சுதந்தரம் என்றால் என்ன?—வெ. சாமிநாத சர்மா — 172

அம்மைச்சி அகம்—மு. அருணாசலம் — 175

ஆண்டாள்—அ. சீனிவாசராகவன் — 177

நம் பெண்கள்—வ. வெ. சுப்ரமணிய ஐயர் — 180

கிர்ஜாலி (ருஷியக் கதை)—புஷ்கின் — 183

அண்டைவீட்டுப் பெண் (சிறு கதை)—வி. ஆர். ஸரோஜா — 185

ரஷ்யாவின் ரகஸ்யம்—'ஜேயார்' — 188

துரோகி (சிறு கதை)—ரெஜினால்ட் எ. ரெயினால்ட்ஸ் — 191

ஸுவாஸ் (கதை)—வி. ஸ. காண்டேகர் — 193

புத்தனும் கிறிஸ்துவும் (பாட்டு)—பெ. தூரன் — 197

காந்தி வாக்கு — 198

பறித்த பூக்கள் — 199

உடம்பும் மருந்தும் — 201

ராஜாஜிக்கு அழைப்பு—கே. எம். முன்ஷி — 202

நாகரிகம் கெட்ட கேடு—ரவீந்திரநாத தாகூர் — 204

புத்தக உலகம் — 206

வெள்ளி அங்குஸ்தான் (பாலர் கதை)—'நீலா' — 207

ஒலியும் ஒளியும் — 208



சந்தா விகிதம்

உள் நாடு

| | | | |
|---|---|---|---|
| வருடச் சந்தா | 4 | 8 | 0 |
| 6 மாதம் | 2 | 8 | 0 |
| தனிப்பிரதி | 0 | 6 | 0 |

மாதிரிப் பிரதி வேண்டுவோர் தபால் செலவு சேர்த்து அனுப்புதல் வேண்டும்.




134198

JL
N36
N42.6.7

மலர் 6
இதழ் 7

சித்திரபானு
- - ஆடி

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

# காந்தி வழி

"அஹிம்ஸை, அஹிம்ஸை என்று பேசிக்கொண் டிருக்கும் வரையில் உங்கள் நாடு உருப்படப் போவதில்லை" என்றாராம் ஒரு நண்பர். 'ஹிம்ஸை, ஹிம்ஸை' என்று சொல்லிக் கொண்டிருக்கும் வரையில், உலகமே உருப்படப் போவதில்லை என்பதை அவர் ஏனோ அறியவில்லை. ஹிம்ஸையைக் கைவிடாத உலகம் உருப்படாது என்பதைச் சரித்திரம் காட்டுகிறது; நம் கண்ணாரக் காண்கிறோம். உலகத்துக்கு உட்பட்ட ஒரு பிரிவுதான் நம் நாடு. மெய்யைப் பொய்யால் காப்பாற்றுவோம் என்பதும் தர்மத்தை அதர்மத்தால் நிலை நாட்டுவோம் என்பதும் அர்த்தமற்ற பேச்சு. அதேபோல் தான், மனித நாகரிகத்தையும் சுதந்தரத்தையும் ஹிம்ஸையால் காப்பாற்றுவதும். மனித நாகரிக லட்சியம் அஹிம்ஸைதான். அன்று அந்த லட்சியத்தைப் புத்தனும் ஏசுவும் உபதேசித்தார்கள்; இன்று காந்திஜி அதே லட்சியத்துக்கு உழைக்கிறார்.

மகாத்மா காந்தியின் அஹிம்ஸா தர்மக் கொள்கையைக் காங்கிரஸ் பரிபூர்ணமாக ஏற்கவில்லை. ஆயினும், இன்று மீண்டும் காங்கிரஸ் தீர்மானத்தால் அவர் தலைவராகிறார். பிரமாதமான சுதந்தர இயக்கம் ஒன்றை நடத்த, அவர் அதிகாரமும் பெறுகிறார்.

'இந்த நெருக்கடியிலா ஓர் இயக்கம்?' என்று பலர் பல வித உணர்ச்சிகளால் உந்தப் பட்டுச் சீறுகிறார்கள். தேசம் தாங்குமா? தேசத்தில் ஆதரவு கிடைக்குமா? பலிக்குமா?— இப்படியெல்லாம் அஞ்சுவோர் உண்டு. தியாகமும் வீரமும் சுக வாழ்விலே தோன்றமாட்டா. நெருக்கடியிலே, கோழைகளெல்லாம் வீரராகும் விந்தையைக் காண்போம். இருபது வருஷத்துக்கு மேலாகப் பண்படுத்தப்பட்ட மக்களின் மனம் மோசமாகவா போய் விடும்? தீயில் கருகிய கயிறு போல, கோழை உருவம் மட்டிலும் பெற்ற மனிதர்கள் இருக்கலாம். கிளர்ச்சி என்ற புயல் காற்றடித்தால், அந்த உருவம் பறந்து விடும்; உணர்ச்சி விரிந்து பரவும். இதைச் சர்க்காரும் சந்தேகிகளும் அறிய வேண்டும்.

போராட்டத்துக்காகக் காங்கிரஸ் இன்றுங்கூடத் தவித்துக்கொண் டிருக்கவில்லை. ராஜிக்கு மார்க்க முண்டானால், அதை அது கைநழுவ விடாது. மார்க்கமேயில்லாத நிலைக்கு அதைத் துரத்திய குற்றம் யாரைச் சேர்ந்தது? பிரிட்டனையே அல்லவா?

காங்கிரஸ் தீர்மானத்தைக் கண்டு ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், அமெரிக்காவை நோக்கி, 'வாருங்கள் உதவிக்கு' என்று கதறுகிறார். சீனாவை மெள்ள நிமிண்டி விடுகிறார். ஆத்திரம், ஏமாற்றம், அரைகுறை உண்மைகள் ஆகிய அனைத்தும் அவரது பேச்சிலே மலிந்து கிடக்கின்றன. ரூஸ்வெல்டின் மந்திரிகளைப் போல, வைஸிராய்க்கு இந்திய மந்திரிகளை அளிக்க, அவர் முன் வந்தாராம்; காங்கிரஸ் மறுத்து விட்டதாம்! ஆனால், ரூஸ்வெல்டா இந்திய வைஸிராய்? ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத் தலைவரா? "அடிமைத்தனத்தை விட அராஜகமே மேல்" என்கிறார் காந்திஜி. அதை "அராஜகம் ஒன்று தான் வழி" என்று காந்திஜி சொல்வதாக, ஸர் கிரிப்ஸ் வர்ணிப்பது நியாயமா?

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலே புரையோடிப் போன ஒரு புண் இந்தியா. அது கடுமையான நிலையை எட்டியதற்கு, பிரிட்டனே ஜவாப்தாரி. இந்த நேரத்திலாயினும் அதற்குப் பரிகாரம் காணுவதுதான் புத்திசாலித்தனம் ஆகும். ஆத்திரப்பட்டுச் சீறுவதில் எல்லாம் ஒரு பயனுமில்லை. அமெரிக்காவின் தூதராக வெண்டல் வில்கி இங்கே வரலாம் என்ற வதந்தி மறுக்கப்பட்டது நல்ல வேளை தான். கிரிப்ஸ் வந்துவிட்டுப் போனதுபோல, அவரும் வந்துவிட்டுப் போக வேண்டியதில்லை. இந்திய சுதந்தரம் என்பது ஏதோ சந்தைக்கடை வியாபாரமா? பேரம் எதற்கு? முழு உலகமும் எதிர்த்தாலும் இந்தியா சுதந்தரம் பெற்றே தீரும்; தீர வேண்டும். வழிகளைப் பற்றித் தருக்கம் செய்யலாம். ஆனால், காந்தி வழியே சரி என்று எண்ணும் மக்கள் தேசத்திலே மிக ஏராளமாயிருப்பதை மட்டும் யாரும் மறக்கலாகாது. அது இருபது வருஷமாய்த் திரண்ட செல்வாக்காகும்; தியாகத் தீயில் புடமிட்ட ஆயுதமாகும்.

# காலச் சுழல் 1942

## நல்ல காரியம்

'இந்த யுத்தம் ஜனங்களின் யுத்தம்' என்று இந்தியப் பொது உடைமை வாதிகள் கருதுகிறார்களாம். ஆகையால், அவர்கள் மீதிருந்த தடையை நீக்கி, அவர்களை விடுதலை செய்ய, இந்திய சர்க்கார் தீர்மானித்துள்ளார்கள். சிலர் விடுதலையும் அடைந்து வருகிறார்கள். நல்ல காரியம். ஆனால், இந்திய சுதந்தர மில்லாமல் எந்தப் பொது உடைமை வாதியும் யுத்த முயற்சிக்குப் பொது ஜனங்களின் மனப்பூர்வமான ஆதரவைப் பெற முடியுமென்று நமக்குத் தோன்றவில்லை. ஆகையால், பொது உடைமை வாதிகள், சுயராஜ்யத்தைக் கொண்டுவர வேண்டும். 'ஹிந்து' கூறுவதே போல, சுயராஜ்யத்தை யார் கொணர்ந்தாலும் நமக்குச் சம்மதம். குருடன் வேண்டுவது கண் தானே?

## அபேதவாதி அத்தாட்சி

நண்பர் மேஹர் ஆலி ஓர் அபேதவாதி. காந்திஜியை, சமயம் நேரிட்ட போதெல்லாம் குறை கூறுபவர். அவர் சொல்கிறார்: "சிடுமூஞ்சிகளும் சந்தேகப் பிராணிகளும் எவ்வளவு வேண்டுமானாலும் கத்தட்டும், கூச்சல் போடட்டும்; காந்திஜியை அனுபவ சாத்தியமற்ற, அபாயமான கனவு காண்பவர் என்று கண்டிக்கட்டும். இன்று தினம், அனுபவ சாத்தியமான விவேகமும் புத்திசாலித்தனமும் நிறைந்த ஜனத்தலைவர் காந்திஜி தான். ஒரு தீர்க்கதரிசியின் கனவும், ஒரு பெரும் புரட்சிக்காரனின் துணிவும் அவரிடமே நிரம்பியிருக்கின்றன." மற்ற அபேதவாதிகள் இதற்கு என்ன சொல்லுவார்களோ?

## ராஸ்டாவ் வீழ்ச்சி

ரஷியாவில் ராஸ்டாவ் வீழ்ந்துவிட்டது. மிக அரக்கத்தனமாகவே நாஜிகள் போரிடுகிறார்கள். அடுத்தபடி மாஸ்கோவா, காகஸா அல்லது இரண்டுமா— நாஜிகளின் தாக்குதல் எத்திசையில் இருக்கும் என்று சந்தேகமாயிருக்கிறது. ஆனால், எதிரி வரவர ரஷ்யாவுக்குள் புகுந்து, கண்ணியில் விழும் பட்சியைப்போல் சிக்கும் தருணம் பார்த்து, பிரிட்டனும் அதன் நேச நாடுகளும் இரண்டாவது போர் முனையைச் சிருஷ்டித்தல் நலம். அப்படி அவை செய்யுமா? அதுதான் தெரியவில்லை.



பிரபல விஞ்ஞான சாஸ்திரியான ஸர் ஸி. வி. ராமனுடைய சேவைகளைப் பாராட்டி, அமெரிக்காவிலுள்ள பிராங்கிளின் இன்ஸ்டிட்யூட் என்ற விஞ்ஞான சாஸ்திர ஸ்தாபனம், 'பிராங்கிளின் மெடல்' என்ற மிக உயர்ந்த கௌரவப் பதக்கத்தை வழங்கத் தீர்மானித்தது. ஆனால், யுத்த காலமானதால், அவர் அமெரிக்காவுக்குச் சென்று நேரில் அதைப் பெற இயலவில்லை. ஆகையால், பதக்கம் இந்தியாவுக்கு வந்தது. சென்னை கவர்னர் ஸர் ஆர்த்தர் ஹோப் நேரே சென்று, ஸர் ராமனுக்கு அந்தப் பதக்கத்தைச் சில தினங்களுக்கு முன் வழங்கினார். ஸர் ஸி. வி. ராமன் ஒளியின் நுட்பமொன்றை ஏற்கனவே கண்டுபிடித்தார். அதற்கு 'ராமன் ரேடியேஷன்' என்று பெயர் வழங்குகிறது. இதைக் கண்டு பிடித்ததற்காக ஏற்கனவே நோபல் பரிசும் வாங்கியிருக்கிறார். ராமன் சிறந்த விஞ்ஞான சாஸ்திரி மட்டுமல்ல; மகாத்மா காந்தியிடம் அளவற்ற மதிப்பு உடையவர். அடக்கமான குணம் உள்ளவர். உலகத்திலுள்ள மிக உன்னதமான விஞ்ஞான மேதைகளில் ஒருவராக உலகமே இன்று அவரை மதிப்பது, நம் நாட்டுக்கே ஒரு பெரிய கௌரவமாகும்.

## ராஜாஜி ராஜினாமா

ராஜாஜி காங்கிரஸிலிருந்தே ராஜினாமாச் செய்து விட்டார். சட்ட சபைக் காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவியையும் துறந்துவிட்டார். தமிழ்நாடு காங்கிரஸ் அதிகாரிகளின் நடவடிக்கைகள் தான் காரணம். இதில் எவர் காரியங்களையும் குணதோஷங்கள் கூற நாம் விரும்பவில்லை. ஆனால், ராஜாஜி விலக நேர்ந்தது, தமிழ்நாடு காங்கிரஸின் துரதிர்ஷ்டம் என்று மட்டில் நாம் வருந்தாதிருக்க இயலவில்லை. நாட்டுக்கு ராஜாஜி செய்த சேவை இணையற்றதாகும். அவர் ஒருமுறை ராஷ்டிரபதி மகுடம் சூடிப் பார்க்க வேண்டும் என்ற ஆவல்கூட எத்தனையோ பேருக்கு உண்டு; அல்லது இருந்தது. அவர் இப்படியா விலகுவது? புதிய இயக்கம் ஆரம்பிக்க விருக்கும் மகாத்மாஜியை ராஜாஜி நேரில் சந்தித்துப் பேசியுள்ளார். அதன் பயனாக மனம்மாறி, மீண்டும் மாகாணத்தைத் தலைமை வகித்து நடத்திச் செல்ல ராஜாஜி முன்வர வேண்டும் என்பதே நமது ஆசை; பலரும் அதையே விரும்புவார்கள்.

## புதிய விளக்கு

பர்மா வீழ்ச்சியடைந்ததால், மண்ணெண்ணெய்ப் பஞ்சம் இந்தியாவுக்கு வந்ததில் ஆச்சரியமில்லை. 5 கோடி டாலர் மதிப்புள்ள மண்ணெண்ணெயை இந்தியா இறக்குமதி செய்து வந்தது. பிரகாசமாய் எரியும் மண்ணெண்ணெய் விளக்குகளும் ஏராளமாய் வந்தன. அந்த விளக்குகள் இப்போது வறட்சியடைய வேண்டியதாயிருக்கிறது. கடலை, தேங்காய் முதலிய எந்த விதமான எண்ணெய்களையும் கொண்டு எரியக்கூடிய புதிய தினுசான விளக்குகளை, அகில இந்தியக் கிராமாபிவிருத்திச் சங்கத்தார் ஆராய்ச்சி புரிந்து செய்திருக்கிறார்களாம். கூடிய சீக்கிரம் இவை மார்க்கட்டுக்கு வரலாம். யுத்த காலத்தில் இம்மாதிரி முயற்சிகள் பெரிதும் பாராட்டி, ஆதரிக்கத் தக்கவையாகும்.

# சுதந்தரம் என்றால் என்ன?

வெ. சாமிநாத சர்மா

நாசமாய்ப் போகிற ஜப்பானியர் வந்து பிடிக்குமுன் வரையில், ரங்கூனிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த 'ஜோதி' என்ற அற்புதமான தமிழ் மாதப் பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ சர்மா அரசியலில் தீவிரமான, நுட்பமான கருத்துக்களை, ஆவேசமான, தெளிந்த நடையில், எழுதுவதில் வல்லவர். சுதந்தரம் யாசகப் பொருளா என்ன? சுதந்தரத்தைப் பற்றிச் சிலர் கொண்டுள்ள பல தவறான கருத்துக்களை, அவர் தகர்த்தெறிகிறார்.

சுதந்தரம் என்பது சுலபமான ஒரு வார்த்தை யல்ல; கடினமான ஒரு சக்தி. அதை உச்சரிப்பது எளிது; அடைவது அரிது. அரிது என்றால், முடியாது என்பது அர்த்தமல்ல; முடியும். யாருக்கு? அதனைச் சாதாரண ஒரு சொல்லாகக் கருதாதவர்களுக்கு; அதனைப்பற்றிச் சதா சர்வகாலமும் சிந்தித்திருப்போர்க்கு.

சிந்தனையிலிருந்து செயல் பிறக்கிறது. சிந்தை செய்வது கஷ்டம்; செயலாற்றுவது சுலபம். கஷ்டப்பட்டால்தான் சுகம் கிட்டும். வேதனையின்றிச் சாந்தி உண்டாகாது. அதேபோல், சுதந்தரத்தைப்பற்றிச் சிந்தனை செய்வதாகிற கஷ்டமான காரியத்தில் ஈடுபட்டவர்கள்தான், அந்தச் சுதந்தரத்தை அடைவதாகிற இன்பத்தை அனுபவிக்க முடியும். இல்லாவிட்டால், "உலகத்தில் மிகக் கஷ்டமான காரியம் எது? சிந்தனை செய்வது" என்று எமர்ஸன் என்ற அறிஞன் துணிந்து கூறுவானா? பிரஞ்சுப் புரட்சிக்குத் தூண்டுகோல் போட்ட வால்ட்டேர் என்னும் மேதாவி, "ஒரு தேசம் சிந்திக்கத் தொடங்கி விடுமானால், அதன் வேகத்தை நிறுத்த யாராலும் முடியாது" என்று அறுதியிட்டுச் சொல்லுவானா? இந்த இரண்டு வாசகங்களிலும் எவ்வளவோ அர்த்தபுஷ்டி இருக்கிறது.

நமது நாட்டிலே அரசியலைப்பற்றிப் பேசுகிற பலரும், சுதந்தரம் என்றால், அது பிறரால் கொடுக்கப்பட வேண்டிய பொருள் என்று கருதியே பேசுகிறார்கள். "என்ன ஐயா, இன்னமும் பிரிட்டிஷார் நமக்குச் சுதந்தரம் கொடுக்க வில்லையே!—வேறு அந்நியர் யாரேனும் வந்தால் அவர்கள் எந்த மாதிரி சுதந்தரம் கொடுப்பார்கள்?"—இந்த விதமான பேச்சுக்கள், நம் காதில் அடிக்கடி விழுகின்றன. ஒருவர் கொடுத்து மற்றொருவர் வாங்கிக் கொள்வது சுதந்தரமாகாது. சுதந்தரம் ஒரு நன்கொடைப் பொருள் அல்ல. நம்முடைய முயற்சி, உழைப்பு, தியாகம் ஆகிய இவற்றின் பரிணாமமாக, அது நம்மை வந்து அடைய வேண்டும். அப்பொழுதுதான் அது நம்மிடத்தில் நீடித்து நிலைக்கும்; அதனை வைத்துக் காப்பாற்றும் ஆற்றலும் நமக்கு உண்டாகும். அப்படிக்கின்றி, பிறருடைய தயவினால் கிட்டுகிற சுதந்தரம் நம்மிடத்தில் நிலைக்குமா? அந்தத் தயவு இருக்கிறவரையில், அது நம்மிடத்தில் இருக்கலாம். அது மாறிவிட்டால்—? பிறருடைய தயவில் வாழ்கிற வாழ்வு உண்மையான வாழ்வாகாது; அது சுதந்தர வாழ்க்கையும் அல்ல.

பக்குவம் அடைந்த பழந்தான் தின்பதற்கு லாயக்கானது. தகுதியுடைய மாணாக்கனுக்குத்தான் குருவினுடைய அருள் கிட்டுகிறது. அதைப்போலவே, எந்த ஜாதி அல்லது சமுதாயம், இடைவிடாத தன் சுயமுயற்சியினாலும், தளரா உழைப்பினாலும், மகத்தான தியாகத்தினாலும், சுதந்தரம் பெறுவதற்குத் தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்ளுகிறதோ, அந்த ஜாதி அல்லது சமுதாயந்தான் சுதந்தரம் அடைகிறது. ஜி. ஜி. கௌல்ட்டன் என்ற ஒரு மேனாட்டு அறிஞன் கூறுகிறான்:— "சுதந்தரமானது, ஜனங்களிடத்தில் இறங்கி வராது. ஜனங்கள்தான் அந்தச் சுதந்தரத்தை நோக்கி மேலேறிச் செல்ல வேண்டும். சுதந்தர இன்பத்தை நாம் நுகர்வதற்கு முன், அதனை நாம் முயன்று சம்பாதிக்க வேண்டும்." தவிர, உலகத்தில் யாருமே, தாங்கள் அநுபவித்துவரும் சுதந்தரத்தை, மனமொப்பி, தாங்களே வலியப் பராதீனப்படுத்திக் கொடுக்கமாட்டார்கள். அப்படி எதிர்பார்ப்பது, மனித சுபாவத்தை அறிந்து கொள்ளாததே யாகும். ஏனென்றால், எந்த ஒரு ஜாதி, மற்றொரு ஜாதியின் சுதந்தரத்தைப் பறிமுதல் செய்து, பின்னர் அதனை அடிமைப்படுத்திக்கொண்டு அதன் மீது ஆதிக்கம் செலுத்துகிறதோ அது, அப்படி ஆதிக்கம் செலுத்துவதனால் அநேக சாதகங்களைப் பெறுகிறது. அந்தச் சாதகங்களை அது மனமொப்பி இழந்துவிடச் சம்மதப்படுமா? சாதுவான பசுவும்கூட, தானே, வலிய, தன் பாலைச் சுரந்து கொட்டுவதில்லையே!

மனிதனோடு ஒட்டியது சுதந்தரம். அதாவது, மனிதன் பிறக்கிறபோது, சுதந்தரத்தோடுதான் பிறக்கிறான். பின்னரே அவன் அநேகம் கட்டுகளுக்கு உட்பட்டு, சங்கடப்படுகிறான். இந்தக் கட்டுகளுக்கு உட்பட்டதன் காரணமாக, மனித நிலையினின்று கீழ் நிலைக்கு அவன் இறங்கிவிடுகிறான். அப்பொழுது மனமும் மானமும் இழந்தவனாய், ஒழுக்கஹீனனாய், தனது அடிமைத்தனத்தையே இன்ப நிலையெனக் கருதி மயங்கிக் கிடக்கிறான். சுதந்தர உணர்ச்சியே அவனுக்கு இல்லாமல் போய்விடுகிறது. அப்படிப்பட்டவனை, மனிதத் தன்மையுள்ள ஒரு மனிதன் என்று அழைக்க முடியுமா? முடியாது. மனித வடிவம் தாங்கிய ஒரு ஜடவஸ்து என்றுதான் கூறவேண்டும். பட்சிகள், மிருகங்கள் முதலிய இனங்களுக்கும் அவன் கீழானவன். ஏனென்றால், ஊர்வன, பறப்பன, நடப்பன முதலிய பகுத்தறிவில்லாத பிராணி வர்க்கங்கள் கூட, சுதந்தர வாழ்வையே விரும்பிநிற்கின்றன. அவைகளைப் பொன்னான கூட்டில் அடைத்து வைத்து, இனிமையான தின்பண்டங்களைக் கொடுத்து, அன்பான வார்த்தைகள் பேசி வளர்த்துப் பாருங்கள்; அந்தக் கூட்டைவிட்டு வெளியே செல்லத்தான் அவை முயன்றுகொண்டிருக்குமே தவிர, அந்தக் கூட்டிலேயே அமைதியாக இருக்க ஆசைப்படமாட்டா. அடிமைத்தனத்திலே உள்ள அமைதியைக் காட்டிலும், சுதந்தரத்திலே உள்ள போராட்டத்தையே ஒவ்வொரு ஜீவஜந்துவும் விழைகிறதென்பது இதனால் பெறப்படுகிற

தல்லவா ? அப்படியிருக்க, பகுத்தறிவுள்ள மனிதன், அடிமைத்தனத்திலே யுள்ள அமைதியில் இன்பம் நுகர்ந்து கொண்டிருக்கலாமா ?

தவிர, சுதந்தரத்துக்காகப் போராடுகிறோம் என்கிறபோது, அதிலே ஓர் இன்பம் இருக்கிறது. கார்ல் மார்க்ஸ் கூறுகிற மாதிரி, போராட்டத்தில்தான் இன்பம் உண்டு. அடிமைத்தனத்தினால் உண்டாகிற அமைதி இருக்கிறதே அது, மனிதனுடைய பூரண வளர்ச்சியிலிருந்து, அவனிடத்தில் தங்கி யிருக்கும் சக்தியிலிருந்து, சுய கட்டுப்பாட்டுக்கு வாழ்க்கையை உட்படுத்திக்கொண்டு வாழ்கிற ஒழுங்கான வாழ்விலிருந்து பிறக்கிற அமைதியல்ல ; நிர்க்கதியான நிலைமையில், செயலாற்றும் சக்தி யில்லாமல் போகிறபோது ஏற்படுகிற அமைதி. இந்த மாதிரி அமைதியோடு கூடிய வாழ்க்கை உண்மையான வாழ்க்கையாகாது. 'இறவாமல் இருத்தல்' என்று இதனைச் சொல்ல வேண்டும். இறவாமல் இருத்தல் வேறே ; இருந்து வாழ்தல் வேறே. வாழ்வு என்று சொன்னாலே சலனந்தான் ; எப்பொழுதும் ஜீவகளையோடு துடித்துக் கொண்டிருப்பதுதான். அப்படிக்கின்றி, அடிமைத்தனம் காரணமாகப் பிண்டம்போல் சோபையிழந்தும், சோர்வுற்றும் சும்மா கிடப்பது அமைதியாகாது. மரம் மௌனமாய் இருக்கிறது, சுவர் சாதுவா யிருக்கிறது என்று சொன்னால் என்ன அர்த்தமோ அந்த அர்த்தத்தில்தான் ஓர் அடிமையும் அமைதியான வாழ்க்கையை நடத்துகிறான் என்று சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட வாழ்க்கையில் இன்பம் ஏது ?

சுதந்தரம் என்பது இயற்கை ; அடிமைத்தனம் என்பது செயற்கை. மனிதன், சுதந்தரமாய் இருக்கிறபோதுதான், அதாவது இயற்கையான நிலையில் இருக்கிறபோதுதான், அவனிடத்திலேயுள்ள நல்ல தன்மைகளெல்லாம் வெளியாகின்றன. பிரகாசிக்கவும் செய்கின்றன. செயற்கையான அடிமை நிலையில் இருக்கிறபோது, அவன் இழிவடைந்துபோகிறான். அடிமை வாழ்வு நடத்துகிறவன், புழுப்போல் நெளிந்து கொடுக்கிறானே தவிர, மனிதனைப்போல் நடப்பதில்லை. அவனுடைய எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும், - ஏன், சாதாரண ஸ்தூலப்பார்வையிலுங்கூட - ஒருவிதச் சோர்வைக் காணலாம். அவனிடத்தில் தன்னம்பிக்கை என்பது இல்லாமலே போய்விடுகிறது. சுதந்தரமாயுள்ள ஒரு ஜாதியைச் சேர்ந்தவன் - அவனுடைய நாடு எவ்வளவு குறுகிய விஸ்தீரண முடையதாய் இருந்தபோதிலும், அவனுடைய ஜாதியினர் எவ்வளவு சிறு தொகையினராய் இருந்தபோதிலும் - எப்படி நடந்து கொள்ளுகிறான் என்பதைக் கவனியுங்கள். அவனது பார்வையிலே ஒரு பிரகாசம்! பேச்சிலே ஓர் அழுத்தம்! நடையிலே ஒரு மிடுக்கு!

சுதந்தரமாய் இருக்க வேண்டும் என்று ஆவல் கொள்ளவும், அதன் பிரகாரம் இயற்கை வாழ்வு அதாவது சுதந்தர வாழ்வு நடத்தவும் ஒவ்வொரு மனிதனுக்கும் பூரண உரிமை உண்டு. இந்த உரிமை அவனோடு கூடவே பிறக்கிறது. "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை" என்று லோகமான்ய திலகர் கூறியது இந்த மாதிரியான ஒரு கருத்தை மனத்தில் வைத்துக் கொண்டுதான். இந்த உரிமை, தன்னிடமிருந்து விலகிக் கொள்ளாதபடி பார்த்துக் கொள்வது ஒவ்வொரு மனிதனுடையவும் முதல் கடமையாகும். இந்தக் கடமையை நிறைவேற்றுகிற விஷயத்தில், அவனுக்குப் பலவிதமான சோதனைகள் ஏற்படுவது சகஜம். எவனொருவன் இந்தச் சோதனைகளுக்குப் பயந்து ஓடுகிறானோ, அவனைக் கண்டு சுதந்தரமும் ஓடிப்போய்விடும். ஒரு பிரஞ்சுப் புலவன் கூறுகிறமாதிரி, 'எந்த ஒரு ஜாதி தன் சுதந்தரத்துக்காக இறக்கத் தயாராய் இல்லையோ, அந்த ஜாதி, வெகு சீக்கிரத்தில் தன் சுதந்தரத்தை இழந்து விடுகிறது.'

மனிதன், இயற்கைக்கு விரோதமான நிலைமையில் இருக்கிற காலத்தில், அதாவது சுதந்தரமாய் இல்லாத காலத்தில், அவனிடத்திலேயுள்ள கெட்ட சுபாவங்களெல்லாம் தலைதூக்கி ஆடத் தொடங்குகின்றன. அநேக நிர்ப்பந்தங்கள் சூழ்ந்து கொண்டு, அவனை வளர்ச்சியடைய வொட்டாதபடி தகைந்து விடுகின்றன. இவற்றினின்றும் விடுதலை பெற முயற்சி செய்வது அவனுடைய இரண்டாவது கடமை. ஸர் ராதா கிருஷ்ணன் ஓரிடத்தில் கூறுகிறார்: "சுதந்தர வாழ்க்கையில் தான், ஆணாகட்டும் பெண்ணாகட்டும் தங்களிடத்திலே யுள்ள சிறந்த திறனை யெல்லாம் வெளியிடுகிறார்கள்; அடிமை வாழ்க்கையில் அவர்கள் இழிவடைந்து போகிறார்கள். ஒரு சாதாரண மனிதனை, அகத்திலும் புறத்திலுமாக அநேக நிர்ப்பந்தங்கள் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. இதனால் அவனுடைய சுபாவம் மாறுபட்டுப் போகிறது. இப்படிப்பட்ட நிலைமையிலிருந்து அவனை விடுதலை செய்விப்பதுதான் சுதந்தரத்தின் நோக்கமாய் இருந்து வந்திருக்கிறது.........இயற்கைக்கு விரோதமாக உள்ள நிலைமையை மாற்றப் போராடுவது ஒருவனுடைய புனிதமான கடமையாகும்."

சுதந்தரம் என்று சொன்னால், மனிதனிடத்திலேயுள்ள மேலான தன்மைகளெல்லாம் பரிமளித்துப் பிரகாசிக்கக் கூடிய ஒரு நிலை என்று சொல்லலாம். இந்த நிலையில் மனிதனின் அறிவு, இதயம், ஆத்மா முதலியன எல்லாம் எவ்விதக் கட்டுப்பாடும் இல்லாமல் வளர்ச்சி அடைகின்றன. அவன் ஒழுக்கசீலனாகவும், அஞ்சாமைக்கு அணிகலனாகவும், சமுதாயநலனுக்காகத் தன்னுடைய க்ஷேமத்தை அர்ப்பணஞ் செய்யக்கூடிய ஆற்றலுடையவனாகவும் விளங்குகிறான். அவன், தன் விருப்பப்படி வாழ்க்கையை நடத்துகிறான். எண்ணுவதிலும், எழுதுவதிலும், பேசுவதிலும், பொதுவாக அவனுடைய வாழ்க்கைப் போக்குகள் அனைத்திலும், அவனுக்கு எவ்விதத் தடைகளும் இருப்பதில்லை. ஆனால், இப்படி எண்ணுகிறபோதும், எழுதுகிறபோதும், பேசுகிறபோதும், இஷ்டப்படி வாழ்க்கையை நடத்துகிறபோதும், மற்றவர்களுக்கு எவ்விதத் தீங்கும் உண்டாகாதபடி அவன் பார்த்துக் கொள்ளவேண்டும். எவ்விதக் கட்டாயத்துக்கும் அல்லது நிர்ப்பந்தத்துக்கும் அல்லது பலாத்காரத்துக்கும் அவன் உட்படுவதில்லை ; பிறரை உட்படுத்தவும் கூடாது. அவன் ஆசைகள் யாவும், பிறருக்குத் தீங்கு உண்டாகாதபடி பூர்த்தியடையவேண்டும். இந்தமாதிரியான ஒரு சுதந்தர நிலையில் இருக்கிற அதாவது சுதந்தர வாழ்வை நடத்துகிற மனிதனிடத்தில், பொறாமை, பகைமை, சுயநலம் பிறரைச் சுரண்டி வாழவேண்டுமென்ற எண்ணம் முதலிய தீய தன்மைகள் இடம் பெறுவதில்லை. இடம்பெறுவதற்கு மேற்படி சுத

தர நிலை அல்லது வாழ்வு இடங் கொடுப்பதேயில்லை. அமெரிக்கக் குடியரசின் தலைவனாய் இருந்த **அப்ரஹாம் லிங்கன்** என்பவன், சுதந்தரம் என்பதற்குப் பின்வருமாறு வியாக்கியானம் கூறுகிறான்:—

“ஒவ்வொரு மனிதனும், தன்னிச்சைப்படி விவகாரங்களை நடத்தவும், தான் உழைத்த உழைப்பின் பலனை அனுபவிக்கவும் உரிமையுடையவனாய் இருக்க வேண்டும். ஆனால், அவன் அப்படி விவகாரங்களை நடத்துவதும், உழைப்பின் பலனை அநுபவிப்பதும் பிறருடைய உரிமைகளுக்குப் பாதகம் உண்டாக்காமல் இருக்க வேண்டும். இவ்விதமே ஒவ்வொரு சமுதாயமும், ராஜ்யம் என்ற தோரணையில், மற்றொரு ராஜ்யத்தின் உரிமைகளில் தலையிடாதபடி, தன்னிஷ்டப் பிரகாரம் காரியங்களைச் செய்யும் உரிமை பெற வேண்டும்.”

எனவே, ஒரு மனிதனை மற்றொரு மனிதன் அடிமை கொள்வதும், ஒரு ஜாதி அல்லது நாடு மற்றொரு ஜாதியை அல்லது நாட்டை ஆள்வதும் சுதந்தரத்துக்கு விரோதம். இதைப்போல் ஓர் ஆளும் ஜாதி, மற்றோர் ஆளப்படும் ஜாதிக்குச் சுதந்தரம் கொடுப்பதாகச் சொல்வது போலித்தனம். எப்பொழுதுமே, ஆளும் ஜாதி மேலான அந்தஸ்து உடையதாகவும், ஆளப்படும் ஜாதி கீழான அந்தஸ்து உடையதாகவும் முறையே இருக்கின்றன. முன்னது கட்டளை இடுகிறது; பின்னது கட்டளைப்படி நடக்கிறது. கட்டளை இடுகிறவனுடைய சக்தி, செல்வாக்கு எல்லாம் உயர்ந்திருப்பதும், அந்தக் கட்டளைக்கிணங்க நடக்கிறவனுடைய சக்தி செல்வாக்கு எல்லாம் தாழ்ந்திருப்பதும் அநுபவத்தில் கண்ட உண்மை. அப்படியிருக்க, ஆளும் ஜாதி தன் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்கும் மற்றொரு ஜாதிக்குச் சுதந்தரத்தைக் கொடுத்து விடுகிறதென்று சொன்னால், அந்த ஆளும் ஜாதி, தன் உயர்ந்த ஸ்தானத்திலிருந்து இறங்கிவிடுகிறது என்று அர்த்தம். அப்பொழுது ஆளும் ஜாதி என்ற பெயர் அதற்குப் பொருந்தாது. அப்படியே ஆளப்படும் ஜாதி, சுதந்தரம் பெற்றுவிட்டவுடனே ஆளும் ஜாதியினுடைய ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைகிறது. அதன் காரணமாக அதற்கு ஏற்கனவே இருந்த கீழான அந்தஸ்து போய் விடுகிறது. அதாவது இரண்டு ஜாதிகளும் சம அந்தஸ்தை அடைகின்றன. அதனால் சம உரிமைகள் அவைகளுக்கு ஏற்படுகின்றன. முறையே அடக்குவதும் அடங்குவதும் என்ற நிலை இல்லாமல் போய், இரண்டும் நேசப்பான்மையில் நடந்துகொள்ளுகின்றன.

எனவே, ஓர் ஆளும் ஜாதி, மற்றொரு ஜாதியைத் தன்னதிக்கத்தில் இருத்தி வைத்துக்கொண்டே அதற்குச் சுதந்தரம் கொடுப்பதாகச் சொல்வது அர்த்தமில்லாத வார்த்தை. அப்படிக் கொடுக்கப்படுவது சுதந்தர மல்ல; அதிகார விநியோகம் என்று வேண்டுமானால் சொல்லலாம். சுதந்தரம் என்பது, பண்டமாற்றுப் பொருளைப்போல் கைநீட்டிக் கொடுக்கப்படுவதுமில்லை; கைநீட்டி வாங்கப்படுவதுமில்லை. அது அவரவர் முயற்சியினாலும், உழைப்பினாலும், தியாகத்தினாலும் அடையவேண்டிய ஒரு சித்தி. அப்படி அடைவது, ஒவ்வொரு மனிதனுடையவும் அல்லது ஒவ்வொரு ஜாதியினுடையவும் உரிமை மட்டுமல்ல; கடமையுங்கூட.

## புள்ளிக் கணக்கு

ஐக்கிய அமெரிக்காவின் தொழில் மந்திரியுடைய காரியதரிசியான மிஸ் பிரான்ஸிஸ் பெர்க்கின் என்ற பெண்மணி இந்தக் கதையைக் கூறுகிறாள்:

“என் தாத்தா 104-வயது வாழ்ந்தார். 99-வயதாய் இருக்கும் போது, ஜோடு தைப்பவனிடம் அவர் ஏதோ சண்டையிட்டார்.

“அவன் கேட்டான்: ‘ஏன் ஐயா? உமக்கோ 99-வயது ஆகிறது. இந்த ஜோடு தேய்ந்துபோகிற வரையில் நீர் வாழ்வது ரொம்ப நிச்சயமா? இதை ஏன் பழுது கூறுகிறீர்?’

“அவனை என் தாத்தா கடுமையாக நோக்கி, ‘99-வயதில் எத்தனை பேர் அப்பா செத்திருக்கிறார்கள்? அந்த வயதில் செத்தவர் ரொம்பச் சிலர்தான். சர்க்கார் புள்ளி விபரங்களைப் பார். இது தெரியும்’ என்று கம்பீரமாய்ச் சொன்னார்!”

* * *

“உன்னை நீ உறுதியாகப் பிடி; ஒருகாலும் அபிநயிக்காதே; உனக்கு இயல்பாயுள்ள புலமையால், நீ இயற்றியதே நலமாகும். உன்னைப் படைத்தவனே உனக்கு ஆசான். ஷேக்ஸ்பியருக்கு எந்த ஆசான் கற்பித்தான்? பிராங்கிளின், வாஷிங்டன், பேகன், நியூட்டன் முதலியோருக்கு எந்த ஆசான் கற்பித்தான்? ஒவ்வொரு பெரிய மனிதனும் தானே தான். உன்னைத் தவிர, யாரும் உனக்கு அமைதி தர முடியாது. நீயே உன் சாந்தம்.”

—எமர்ஸன்.

★

## ஞானி என்ன சொன்னார்?

ஒரு ஞானியைக் காட்டு வேடர்கள் ஏதோ கோபங்கொண்டு பிடித்துவிட்டார்கள். அவருக்கு மரண தண்டனையும் விதித்தார்கள். ஆனால், மரண தண்டனையை நிறைவேற்றுவதில் அவர்களிடம் ஒரு சம்பிரதாயம் இருந்து வந்தது. குற்றவாளியை ஏதாவது ஒரு வசனம் சொல்லும்படி கேட்பார்கள்: அந்த வசனத்தில் கண்ட விஷயம் உண்மையாய் இருந்தால், விஷ அம்பெறிந்து கொல்லுவார்கள்; வசனப் பொருள் பொய்யாய் இருந்தால், தீக்குழியில் தள்ளிக் கொல்லுவார்கள். ஞானிக்கு இந்த ரகசியம் தெரியும். ஆகையால், அவரை ஒரு வசனம் கேட்டதும், யுக்தியாய் ஒன்று சொன்னார். அது பொய்யா, நிஜமா என்று நிர்ணயிக்க முடியாமல், ஞானியை வேடர்கள் விட்டு விட்டார்கள். ஞானி என்ன சொல்லியிருக்கக் கூடும்? உங்களால் ஊகிக்க முடியுமா?

★

ஞானி சொன்னது இது தான்: “நான் தீக்குழியில் சாவேன்.” இது பொய் ஆக வேண்டுமானால், அவரைத் தீயில் தள்ளிக் கொல்லமுடியாது; கொன்றால் வசனம் உண்மையாகி விடும். நிஜம் என்றால், நிஜம் சொன்னவரை அம்பால் கொல்ல வேண்டும். அப்போது வசனம் பொய்யாகி விடும். எனவே தான், இந்தத் தொல்லையெல்லாம் வேண்டாமென்று, அவரை வேடர்கள் விட்டு விட்டார்கள்.

# அம்மைச்சி அகம்

மு. அருணாசலம்

தெருவிலே தேர். வேண்டாதவர் வந்து வீட்டை இடிக்கிறார்கள். அப்போது அவளுக்குச் சிரிப்புத்தான் வருகிறது. பாடுகிறாள், பரிகாசமாக. விரோதிகள் நாணித் தலைகவிழ்கிறார்கள். அவள் வெற்றியும் பெறுகிறாள். இப்படி ஒரு பழம் கவி இருந்திருக்கிறாள் தமிழ்நாட்டில். அவளுடைய ரஸமான வரலாறு இது.

எங்களூரில் சதுரமாக நான்கு வீதிகள் உண்டு. தெற்கு வீதியின் கீழ் கோடியிலே தனித்த ஒரு வீடு இருக்கிறது. அந்த வீட்டுக்காரர் கொஞ்சம் முரட்டுச் சுபாவம் உடையவர். பிறர் வார்த்தையைக் கேட்க மாட்டார். கருமித்தனமும் அவரிடத்தில் சிறிது உண்டு.

அவர் வீட்டின் எதிரடியில் வீதியோரமாக ஒரு முருங்கை மரம் இருந்தது. எக்காலத்திலும் அது சடைசடையாகக் காய்த்திருக்கும். பல தடவைகளில், காயின் கனம் தாங்காமல் கிளைகள் முறிந்து விழுவதுண்டு. விழுந்தால், அந்த வீட்டுக்காரர், ஒரு காய் கூட அயல் வீட்டாருக்குக் கொடுக்க மாட்டார். காலணாவுக்கு இத்தனை காய் என்று கணக்குப் பண்ணி விலைக்கு விற்பாரே யொழிய, நம் மூரார் தானே என்று அவர் ஒரு காய் இனாம் யாருக்கும் கொடுத்தது கிடையாது.

இவ்வாறாக, அவர் வீட்டு முருங்கை சதா காலமும் ஏராளமாகக் காய்த்திருந்தது பலருடைய கண்ணை உறுத்திற்று. அவருடைய கருமித்தனத்தால், அவர்களுடைய பொறாமை கோபமாக மாறிற்று. எப்படியாவது, தங்கள்மேல் குற்றம் ஏற்படாத வழியிலே, அந்த முருங்கை மரத்தை ஒழித்துவிட வேண்டுமென்று அவர்கள் கங்கணம் கட்டிக் கொண்டார்கள். இதற்கு அனுகூலமான ஒரு சமயத்தை எதிர்பார்த்து வந்தார்கள்.

ஊரிலுள்ள மாரியம்மன் கோவில் உற்சவம் வந்தது. பத்துநாள் திருவிழா. பத்தாம் நாள் காலையில் தேர். தேரானது கீழவீதியில் புறப்பட்டு, நான்கு வீதிகளிலும் வலமாக வந்து, மாலையில் மறுபடியும் கீழ வீதியில் தன் நிலையை அடைந்து நிற்கும். மேற் சொன்ன நண்பர்கள் தங்கள் கருத்தை முடிக்க, இந்தத் தேர்த் திருவிழாவைப் பயன்படுத்திக் கொள்ளத் தீர்மானித்தார்கள்.

தேர் வடம் பிடித்தவுடனே, இவர்களில் இருவர் முட்டுக் கட்டையை எடுத்துப் பக்குவமாகப் போட்டு, இடத்துக்கு ஏற்றமாதிரி தேர்ச் சக்கரத்தைத் திருப்பிவிட்டுக்கொண்டு வந்தார்கள். கீழ வீதி கடந்து தெற்கு வீதியின் கோடியில் வந்ததும், அவர்கள் முட்டுக் கட்டையைத் தந்திரமாக உபயோகித்து, பாதி தோட்டத்திலும் பாதி வீதியிலுமாக நின்ற முருங்கை மரத்தில் தேர் போய் முட்டும்படியாகச் செய்து விட்டார்கள். தேர்ச் சீலை முதலியன வெல்லாம் முருங்கைக் கிளைகளில் சிக்கிக் கொண்டன. தேர் நின்றது. எல்லோரும் கூடி விட்டார்கள். மரத்தை வெட்டாமல் தேர் நகர முடியாது என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஊரார் எல்லோருக்கும் பொதுவான திருவிழாவானமையால், மரத்துக் குடையவர் ஒன்றும் ஆட்சேபிக்க முடியவில்லை.



தேர் ஏதோ தற்செயலாக அந்தப் பக்கம் திரும்பிற்று என்றே எல்லோரும் நினைத்தார்கள். மரத்தை வெட்டி வழி யுண்டாக்கியபின் தேர் மேலே சென்றது.

இது இயல்பாகவே நடந்ததென்று பெரும்பாலோர் எண்ணிய போதிலும், விரோதிகளுடைய விஷமந்தான் என்பது நம் கிருபண சிகாமணிக்கு நன்றாய்த் தெரியும்.

இந்த நிகழ்ச்சி உண்மையிலேயே சில ஆண்டுகளுக்கு முன் எங்களூரில் நடந்தது. இதே போன்ற ஒரு நிகழ்ச்சி பல நூற்றாண்டுகளுக்கு முன் நடந்ததென்று இலக்கிய வாயிலாக நமக்குத் தெரியவரும்போது, அதையறிய ஆவலுண்டாகிறது. மேலே சொன்ன நிகழ்ச்சியோ, வெறும் பொறாமை காரணமாக ஏற்பட்டது. ஆனால், இனிச் சொல்லப்போவது, 'புலமைக் காய்ச்சல்' காரணமாக நேரிட்டது.

பெண் மக்கள் நமது நாட்டில் சிறந்த கல்வி யுடையவர்களாகவும் பெரும் புலமை யுடையவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். ஔவையாரை நாமெல்லோரும் அறிவோம். அந்த அம்மையாரைப் போலவே, **அம்மைச்சி** என்ற ஓர் அம்மையார் கல்வியிலும் புலமையிலும் சிறந்தவராகக் காஞ்சிபுரத்திலே 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார். புலமை இருந்தாலே எப்படியோ ஒரு செருக்கு வந்துவிடுகிறது; இது காரணமாகவோ என்னவோ, மற்றவர்களுக்கு ஒரு பொறாமையும் தானாக ஏற்பட்டு விடுகிறது. இந்த அம்மையாரிடத்தில், காஞ்சி நகரிலுள்ள பண்டிதர்களனைவரும், முக்கியமாக வரதராசப் பெருமாள் ஆலய சேவையிலீடுபட்ட அந்தணரனைவரும்

பகைமை கொண்டிருந்தார்கள். ஆனல், அதை வெளிக் காட்ட முடியவில்லை. பக்குவமாக அம்மையாருக்குத் தீங்கிழைக்க, அவர்கள் தருணம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அம்மையாரிடத்தில் பலரும் பகைமை பூண்டதற்குக் காரணமும் இல்லாமலில்லை. அக்காலத்திலே தமிழ் நாட்டில் பெரும் புகழ் பெற்றிருந்த அந்தகக் கவி - வீரராகவ முதலியார் ஒரு சமயம் காஞ்சிக்கு வந்தார். அனந்தை என்ற ஊரிலே வாழ்ந்த சந்திரவாணன் என்னும் பெயருடைய வள்ள லொருவன் இவரைப் பெரிதும் போற்றி ஆதரித்திருக்கிறன். அவனைச் சிறப்பித்து, 'சந்திரவாணன் கோவை' என்ற பிரபந்தத்தைப் புலவர் முன்னமே பாடி யிருந்தார். இதை அரங்கேற்றவே அவர் தம் மாணவர்களோடு இப்போது காஞ்சிக்கு வந்தார்.

சந்திரவாணன், கோவை யரங்கேற்றத்துக்காகச் சபை கூட்டி யிருக்கிறன். பண்டிதர்களும் புலவர்களும் அறிவாளிகளு மாகச் சபையில் நிறைந்திருக்கிறர்கள். பிரசங்கம் கேட்பது புண்ணியம் என்றெண்ணிக் கொண்டு, சில பெண்களும் ஒரு மூலையில் வந்து நின்று கேட்டுக் கொண்டிருக்கிறர்கள்.

அரங்கேற்றம் முறையாக நடைபெற்று வருகிறது. மாணவ னெருவன் ஒரு செய்யுளை ஏட்டிலிருந்து படிக்கிறன். கவிராயர் அதற்கு விரிவாக வியாக்கியானஞ் செய்கிறர்; சபைக்கு நாயகமாக வீற்றிருக்கிற சந்திரவாணனுடைய புகழைப் பலபடப் பாராட்டி யுரைக்கிறர். சபையிலுள்ளார் அனைவரும் மகிழ்ச்சியினல் ஆரவாரிக்கிறர்கள். இவ்வாறு சில பாடல்கள் ஆயின.

அடுத்தாற் போல் 'பெருநயப் புரைத்தல்' என்னும் துறை. அதாவது, நாயகன் தன் நாயகியின் நலத்தை யெல்லாம் பலவாருகப் புகழ்ந்து கூறுதல். இந்தத் துறைக் குரிய பாடலை மாணவன் படித்து நிறுத்தினன். கவிராயர் உரை சொல்லுகிறர்: "நாயகியின் மேனி யெங்கும் கரும்பு போன்றது. ஆனல், சாதாரணக் கரும்பல்ல; எத்தகைய சிறப்புப் பொருந்திய கரும்பு? பாலேரியிலிருந்து பாலே நீராகப் பாய்ந்தது; மழைக்குப் பதிலாகத் தேன்மாரி பெய்தது; பாகும் கற்கண்டுமே கரும்புப் பயிர் வளர்வதற்கு எருவாக அமைந்தன; வயலோ, முப்பழச் சேற்றினலான அமுத வயல்; இதில் விளைந்த கரும்பே நாயகியினுடைய மேனி என நாயகன் எண்ணுகிறன்" என்று கவிராயர் சொல்லிக் கொண்டு போகிறர்.

'முப்பழச் **சேற்றின்** அமுத வயல்' என்ற சொற்களை அவர் சொல்லியவுடன், பெண்கள் அமர்ந்திருந்த இடத்திலிருந்து, "கவிராயருக்குக் கண் தான் கெட்டது, மதியுங் கெட்டதோ" என்று ஒரு குரல் கேட்டது. அதைக் கேட்ட கவிராயர் சிறிது திகைத்தார்; பின் சற்றுச் சிந்தித்தார். ஒன்றும் புலப்படவில்லை. அவருக்குக் கண்ணில்லாமையால், அந்த வார்த்தைகளைச் சொன்னவர் யார் என்று நேரே பார்த்து அறிந்து கொள்ள இயலவில்லை. ஆயினும், அம்மைச்சியின் கல்வியையும் புலமைத் திறத்தையும் பற்றி அவர் கேள்வியுற்றிருந்ததனல், ஆட்சேபித்த பெண் மணி அம்மைச்சியாகத் தான் இருக்க வேண்டும் என்று யூகித்தார்.

இதற்குள், கவிராயர் ஒன்றும் புலப்படாமல் விழிப்பதைக் கண்ட அம்மைச்சி, "ஐயா, கரும்பு புன்செய்ப் பயிராயிற்றே. சேற்றில் விளைந்த கரும்பு என்று சொன்னீர்களே. கரும்பு நன்செயில் விளையுமா? தங்கள் வாக்குப் பொருந்துமா?" என்று கேட்டாள். அப்போது தான் கவிராயருக்குத் தம் பிழை விளங்கிற்று. உடனே, மாணவனை நோக்கி "கொம்பை வெட்டிக் கால் கொடும்" என்றார். அவனும், 'சேறு' என்பதிலுள்ள கொம்பை அடித்து விட்டு, பக்கத்திலே ஒரு கால் சேர்த்து, ஏட்டிலுள்ள பாடத்தைச் 'சாறு' என்ருக்கி, "முப்பழச் **சாற்றின்**" என்று திருத்தி வாசித்தான். சபையோர் எல்லோரும் அம்மைச்சியின் புலமையையும் கவிராயரின் புத்தி சாதுரியத்தையும் வியந்து பாராட்டினர்கள்.

அன்றையப் பிரசங்கம் முடிந்தவுடன், கவிராயர் அம்மைச்சியின் இல்லத்துக்குச் சென்று, அவருடைய அறிவைப் பெரிதும் பாராட்டி அவருடன் நட்புப் பூண்டார். அம்மைச்சியைப் புகழ்ந்து சில பாடல்களும் பாடினர். முன்னமேயே பெரும் புகழ் படைத்திருந்த அம்மைச்சியின் புகழானது, இப்போது அவர் கவிராயருடைய நன்மதிப்பைப் பெற்றமையால், முன்னிலும் அதிகரித்தது. இதுவே மேற்சொன்னபடி அந்தணரும் பண்டிதரும் அவர் மீது பகைமை கொள்ளுவதற்குக் காரணமா யிருந்தது.

இதற் கிடையிலே, காஞ்சித் தேப்பெருமாளுக்குத் திருத் தேர் விழா நாள் வந்தது. தேர் வடம் பிடித்து அன்பர்கள் இழுத்துக் கொண்டு வருகிறர்கள். அம்மைச்சி வாழ்ந்த தெரு வழியாகத் தேர் போக வேண்டும். அவரிடத்தில் பகைமை பூண்ட அந்தணர், அதுவே அவ் வம்மையாருக்குத் தீங்கு விளைவிக்கத் தக்க தருணம் என்று கருதினர்கள். தேர் சற்றுத் தூரத்தில் வரும்போதே பக்குவமாக முட்டுக் கட்டையைக் கொடுத்து, அம்மைச்சியின் வீட்டை நோக்கித் தேரைச் செலுத்தி விட்டார்கள். இழுத்த வேகத்தில் தேர் வந்து அவ்வம்மையாரின் வீட்டில் முட்டி நின்றது.

அவருடைய விரோதிகளுக்கு வேண்டியதும் அவ்வளவு தானே! உடனே, தேர் செல்ல வேண்டி, வீட்டை இடிக்க முற்பட்டார்கள்.

அம்மையார், தம் வீட்டின் வெளியிலே பெருமாள் தேரில் வரும் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கையில், தேர் வந்ததையும், வீட்டில் மோதி அது நின்றதையும் கவனித்தார். இயல்பாக அது அப்படி வரவில்லை யென்பதும், தம் விரோதிகளின் விஷமத்தாலேயே அப்படி விலகி வந்தது என்பதும் அவருக்குப் புலப்பட்டன. அதோடு கூட, சுற்றி வந்த குழாத்தினர் முகத்திலே, தேர் முட்டி நின்று விட்டதே என்ற கவலைக் குறி காணப்படுவதற்குப் பதிலாக, ஓர் எக்களிப்புத் தோற்றியதையும் கண்டார். என்ன செய்வார் அம்மையார்!

கவியுள்ளம் படைத்தவரான மையால், அக்காட்சி அவருக்கு வேறென்றை நினைவூட்டிற்று.

இலங்கையில், இராவணனுடைய கோட்டை மதில்களின் எதிரில் யுத்த சன்னத்தராக இராமனும் அவனுடைய வானர சைன்யங்களும் வந்து நின்ற ஒரு தோற்றம் அவர் கண் முன் வந்தது. தேப் பெருமாளின் பரிவாரத்தினர் முகத்தில் வெளிப்பட்ட உற்சாகம் அந்த வானர சைன்யங்களிடையே தான் காணப்பட்டது.

இந்த உணர்ச்சியை அவ்வம்மையார் சிறிது ஹாஸ்ய பாவத்தோடு வெளியிட்டார். தம் வீட்டுக்கு நேரவிருந்த கேட்டை யெண்ணி அவருக்கு உண்டான கோபம் பாட்டில் எப்படி வெளிப்படுகிற தென்பதையும் காணலாம்.

பார்ப்பார் குரங்காய்ப்
படையெடுத்து வந்தாரோ?
தேப்பெருமாளேகச்சிச்
செல்வரே!—

ஆனல், "வானரப் படைகள் திரண்டு வருமாறு இங்கு இலங்கைக் கோட்டையும் சிங்காரமான மாளிகையும் இல்லையே! கேவலம் அம்மைச்சி வாழும்படியான வீடு தானே இது? இதன் மேல் ஏன் இவ்வளவு சீற்றம்?" என்று கச்சிச் செல்வரான தேப் பெருமாளைக் கேட்கிற பாவத்தில் அம்மையார் செய்யுளை முடித்தார்:

பார்ப்பார் குரங்காய்ப்
படையெடுத்து வந்தாரோ?
தேப்பெருமாளேகச்சிச்
செல்வரே!—கோப்பான
கொம்மைச்சிங் காரலங்கைக்
கோட்டைஎன்று கொண்டீர்ச(து)
அம்மைச்சி வாழும்
அகம்.

[கோப்பான - கட்டுக் கோப்பான; கொம்மை - அழகு.]

அம்மையாரின் பாடலைக்கேட்ட பண்டிதரும் அந்தணரும் வெட்கிப் போனர்கள். பாடலிலுள்ள ஹாஸ்ய பாவத்தை அவர்கள் பாராட்டாமலிருக்க முடியவில்லை. பிறகு வீட்டை இடிப்பதில் அவர்களுக்கு மனம்செல்லவில்லை. அவர்கள் பராமுகமாய் இருக்கவே, பிற பரிவாரத்தினருக்கும் அதில் ஊக்கம் பிறக்கவில்லை. தேரை எப்படியோ சற்று அப்புறமாகத் திருப்பி, அம்மைச்சி வீட்டுக்கு ஊறு செய்யாதபடி கொண்டு போய் விட்டார்கள்.

ஆரம்பத்திலே சொன்ன பொருமையையும் அதன் விளைவான அற்பக் காய்ச்சலையும் இலக்கியத்திலே பார்க்கும்போது, மிக்க ரசமாய்த்தான் இருக்கின்றன.

[இந்தப் பாடலைக் கவிராயர் பாடியதாகச் சொல்வதும் உண்டு.]



# ஆண்டாள்

அ. சீனிவாசராகவன்

நண்பர் சீனிவாசராகவன், தமிழ் வளர்ச்சியில் பேரார்வங்கொண்டவர். தனவணிக நாட்டில், அவரை அறியாதவர் இரார். ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமைமிக்க அவர், ஆண்டாளின் கவிதை அழகை, திருச்சி அகில இந்திய ரேடியோவில் 8-6-42-ஆம் தேதி நிகழ்த்திய பிரசங்கத்தில், பரவசமூட்டும்படி விளக்குகிறார். 'கற்பனை உலக'க் கட்டுரைகள் சிலவற்றைத் தொடர்ச்சியாக அடுத்த மாதமிருந்து 'சக்தி'யில் எழுதிவர, அவர் இசைந்திருக்கிறார் என்ற சந்தோஷச் செய்தியையும் இங்கே அறிவிக்க விரும்புகிறோம்.

பாரதியார் பாடியது உங்களுக்கு ஞாபகமிருக்கும்:

காக்கைச் சிறகினிலே நந்தலாலா - உன்
கரிய நிறம் தோன்றுதடா நந்தலாலா.

காக்கைச் சிறகில் கண்ணனுடைய நிறத்தையும், பார்க்கும் இடமெல்லாம் அவனது மரகத வடிவையும், கேட்கும் ஒலிகளில் அவனது கீதத்தையும் தெளிவது சிலருக்குத் தான் முடியும். கவிஞனுக்கு அது முடிந்தது:

பார்க்கும் இடங்களெல்லாம்
நந்தலாலா-உன்
பச்சை நிறம் தோன்றுதடா நந்தலாலா.
கேட்கும் ஒலியில் எல்லாம்
நந்தலாலா-உன்
கீதம் இசைக்குதடா நந்தலாலா.

இதைவிட அபூர்வமான அனுபவத்தையும் பாரதி வெளியிடுகிறார்:

தீக்குள் விரலை வைத்தால்
நந்தலாலா-உன்னைத்
தீண்டுமின்பம் தோன்றுதடா
நந்தலாலா.

வேதனையிலே - அது தீயினல் ஏற்பட்டால் என்ன, துக்கத்தால் ஏற்பட்டால் என்ன - எந்த விதமான வேதனையிலும், வேதனையில் மட்டுமா, எந்த அனுபவத்திலும், கடவுளைத் தீண்டும் இன்பம், பக்தியில் அழுந்திய உள்ளத்துக்குத்தான் கிட்டும்.

இதை ஆண்டாள் என்ற வைஷ்ணவ பக்தையின் வாழ்க்கையில் காண்கிறோம். அவளுடைய வாழ்க்கையைப் பற்றிச் சரித்திர பூர்வமான செய்தி நமக்குக் கிடைக்கவில்லை. சுமார் 5,000 வருஷங்களுக்கு முன், ஸ்ரீ வில்லிப்புத்தூரில் இருந்தாள் என்று வைஷ்ணவ குரு பரம்பரைச் சரித்திரம் சொல்கிறது. வேறு ஆதாரம் இல்லாத நிலையில், இதை நாம் நம்பாமல் இருக்கலாம். ஸ்ரீவில்லிபுத்தூரில், நந்தவனத்தில் அயோனிஜையாய் அவள் இருக்க, பெரியாழ்வார் என்ற பக்தர் கண்டெடுத்து வளர்த்ததாயும், விவாகப் பருவம் வந்ததும் "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்-சர்வேசுவரனுக்குத்தான் நான் உரியவள்" என்று ஆண்டாள் சொன்னதாயும், பிறகு திருவரங்கப் பெருமானை மணந்து அவனது திருமேனியில் கலந்து விட்டதாயும் கர்ண பரம்பரைக் கதை. சரித்திர ஆராய்ச்சிக் கண்ணுக்கு இதெல்லாம் வெறும் கற்பனையாகத்தான் படும்.

ஆனல், 'நாச்சியார் திருமொழி' என்று வழங்கப்படும் ஆண்டாளுடைய கவி மலர்களின் வனப்பையும், வாசத்தையும் உணர்ந்தால், பழைய கதை உண்மைதான் என்று அறுதியிட்டுச் சொல்லத் தோன்றும். உண்மை என்பது கேவலம் நிகழ்ச்சிகளாலான கோவை யன்று. இங்கே பிறந்தாள், அங்கே இருந்தாள் என்பன போன்ற செய்திகள் மட்டும் உண்மையைத் தந்துவிட முடியாது. நிகழ்ச்சிகளுக்கு அடிப்படையான மனநிலை, ஆத்ம பக்குவம் இவற்றை உணர்வதே உண்மையை அறிவது. கவிதை என்பது ஆத்மாவின் மொழிபெயர்ப்பு; ஆகவே ஆண்டாளது கவிதையின் மூலமாக அவளுடைய வாழ்க்கையின் உண்மைத் தத்துவத்தை, அதன் தனிப் பண்பை அறிய முடியும். எப்படி என்று பார்க்கலாம்.

மார்கழி மாதம். விடியற் காலம். பனி வெள்ளத்தில் உலகம் முழுகிக் கிடக்கிறது. பனிப் படலத்தின் உள்ளே எங்கிருந்தோ 'கீசு கீசென்று ஆனைச்சாத்தன்' பேசுகிறது. தூரத்தில் குமுறுகிற கோயிற் சங்கு கட்டியம்கூற, கீழ் வானத்தில் ஒளி பவனி வருகிறது.

கழியும் பனி மூட்டத்தினூடே, தெரிந்தும் தெரியாதுமாய், எருமைகள் மேய்ச்சல் காட்டை நோக்கி ஊர்ந்து செல்கின்றன. இதையெல்லாம் ஆண்டாள் காண்கிறாள். உறக்கத்தில் அழுந்தியுள்ள தன் நெஞ்சையும், உலகத்தையும் தட்டி எழுப்புகிறாள் :

இனித்தான் எழுந்திராய்,
 ஈதென்ன பேருறக்கம்!
அனைத் தில்லத்தாரும்
 அறிந்தேலோ ரெம்பாவாய்!

உண்மைதானே? கடவுளை அறிய முற்படாமல் மாயப் பெருந்துயிலில் உலகம் அழுந்திக் கிடக்கிறது. தூக்கத்தை விட்டு எழுந்து செய்வதென்ன? எதற்காக எழவேண்டும்? ஆண்டாள் சொல்கிறாள் :

மாயனை மன்னு
 வடமதுரை மைந்தனை,
தூய பெருநீர்
 யமுனைத் துறைவனை
.............................................
தூயோமாய் வந்து நாம்
 தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி
 மனத்தினால் சிந்திக்க,
போய பிழையும்
 புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும்
 செப்பே லோரெம்பாவாய்...

இந்தப் பாட்டு, 'திருப்பாவை' என்ற நூலின் முப்பது பாட்டுக்களில் ஒன்று. 'தைநீராடல்' என்ற பழைய தமிழ் வழக்கத்தை ஒட்டிய பக்திச் சித்திரமாக இந்த நூல் அமைந்திருக்கிறது. கலியாணம் ஆகாத பெண்கள் மார்கழி மாதத்திலே நோன்பு நோற்று, பௌர்ணமி வைகறையில் சுனையிலே நீராடி நோன்பை முடிப்பது பழைய வழக்கம். நோன்பைப் பற்றிய பல செய்திகள் திருப்பாவையில் உள்ளன. தன்னையும், உலகத்தவரையும் மார்கழி நோன்பு நோற்கும் சிறுமியராகக் கருதி, மற்றப் பெண்களை வீடு வீடாய்ச் சென்று தானே துயிலெழுப்புவதாகக் கற்பனை. இதோ ஒருத்தி தூங்குகிறாள்; ஆண்டாள் அவளை எழுப்புகிறாள் :

தூமணி மாடத்துச்
 சுற்றும் விளக்கெரிய,
தூபம் கமழத்
 துயிலணை மேல் கண்வளரும்
மாமான் மகளே,
 மணிக்கதவம் தாள் திறவாய்!

தமிழ் நாட்டுப் பழக்க வழக்கங்கள் மட்டுமல்ல, தமிழ் நாட்டு வளமும், இயற்கைக் காட்சிகளும் பாட்டில் உருப் பெறுகின்றன. மார்கழிப் பனிக்கு முன், வடகிழக்கிலிருந்து, நமது நாட்டை நோக்கி மழை அதிர்ந்து வருவதைப் பாருங்கள் :

ஆழி மழைக்கண்ணா!
 ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு
 முகந்து கொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன்
 உருவம்போல்மெய் கறுத்து,
பாழியந் தோளுடைப்
 பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி
 வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சாரங்கம்
 உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில்
 பெய்திடாய்.

மழையிலே மலர்ந்த இயற்கை வளத்தைப் பார்ப்போம் :

ஓங்கு பெருஞ் செந்நெ
 லூடு கயல் உகள,
பூங்குவ ளைப் போதில்
 பொறிவண்டு கண்படுப்ப,
தேங்காதே புக்கிருந்து
 சீர்த்த மடிபற்றி
வாங்க, குடம் நிறைக்கும்
 வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம்
 நிறைந்தேலோ ரெம்பாவாய்!

இயற்கை வளத்தைப் பற்றி நிறைந்த உள்ளத்தோடும், தெளிந்த பார்வையோடும் ஆண்டாள் பேசிய போதிலும் அவளுடைய கருத்தை முழுதும் கவிந்து நிற்பது கடவுளை அடையவேண்டும் என்ற பேராவல்தான். கடவுளைப் பற்றிய நினைவே யில்லாமல், சுகதுக்கத் தூக்கத்தில் ஆழ்ந்த நம்மை, யாரோ ஒரு பெண்ணைப் பரிகாசம் செய்வதுபோல், பரிகசிக்கிறாள் :

.......பண்டு ஒரு நாள்
கூற்றத்தின் வாய்
 வீழ்ந்த கும்பகருணனும்
தோற்றும் உனக்கே
 பெருந்துயில்தான் தந்தானே!

மார்கழி நோன்பைப் போலவே, மன்மதனை வழிபடும் பழைய வழக்கமும், தன் பக்திப் பரவசத்தை வெளியிட ஆண்டாளுக்கு உதவுகிறது. நெல்லும், கரும்பும், அவலும், அரிசியும் படைத்து மன்மதனை வணங்குகிறாள், அவனை வேண்டுகிறாள் :

கருவுடைமுகில் வண்ணன்
 காயா வண்ணன்
கருவிளைபோல் வண்ணன்
 கமல வண்ணத்
திருவுடை முகத்தை
 என் இரு கண்களால்
திருந்தவே நோக்கெனக்
 கருள் கண்டாய்.

ஆனால், அந்தப் பாக்கியம் கிட்டவில்லை. பக்கத்திலே மாந்தோப்பில் குயில் கூவுகிறது. அதனிடம் பேசுகிறாள் :

வெள்ளை விளி சங்கு
 இடக்கையில் கொண்ட
விமலன் எனக்கு உருக்
 காட்டான்
உள்ளம் புகுந்து என்னை
 நைவித்து நாளும்
உயிர்பெய்து கூத்தாட்டுக்
 காணும்
கள்ளவிழ் சண்பகப்
 பூ மலர் கோதிக்
களித்திசை பாடும்
 குயிலே
மெள்ள விருந்து
 மிழற்றி மிழற்றாது என்
வேங்கடவன் வரக்
 கூவாய்

'என்ன வெல்லாமோ புலம்புகிறாயே, என் வேதனையை நீ உணரவில்லையா? ஒன்று, அவனைக் கூவி அழைத்து வந்துவிடு; இல்லையென்றால் அவன் திருடிச் சென்ற என் நெஞ்சையாவது என்னிடம் திரும்பக் கொணர்ந்துவிடு. இரண்டில் ஒன்று சாதிக்காவிட்டால், உன்னைத் துரத்தி விடுவேன்' என்று சீறுகிறாள்.

பிறகு,

என்றும் இக்காவில் இருந்து
 என்னைத் ததைத்தாதே நீயும் குயிலே'

என்று கெஞ்சுகிறாள். மாறி மாறி வரும் குலவலும் கோபமும், கெஞ்சலும் பரிவும், ஆண்டாளின் மனது, உணர்ச்சி வசப்பட்டு நிலை தடுமாறித் தத்தளிப்பதைக் காட்டிவிடுகின்றன. கிளர்ந் தெழுகிற மழை மேகங்களைத் தன் காதலனுக்குத் தூதாக அனுப்புகிறாள் :

கார்காலத் தெழுகின்ற
 கார்முகில்காள்! வேங்கடத்துப்
போர்காலத் தெழுந்தருளிப்
 பொருதவனார் பேர்சொல்லி
நீர்காலத்து எருக்கிலம்
 பழ இலைபோல் வீழ்வேனை
வார்காலத்து ஒருநாள் தம்
 வாசகம் தந்தருளாரே?

காட்டிலே, காயா மலர்கள் நீல இதழ்களைப் பரக்க விழித்து அசைக்கின்றன. கேட்கிறாள் :

கருவிளை யொண் மலர்காள்!
 காயா மலர்காள்! திருமால்
உருவொளி காட்டுகின்றீர் எனக்கு
 உய்வழக்கொன்றுரையீர்

இதன்பின், எங்கே பார்த்தாலும் இறைவனின் திருவுருவம் உதயமாகிறது. யாரை எங்கே தூது அனுப்புவது? கண் முன்னே அவன் எங்கும் தோன்றுகிறான்- குயிலின் பாட்டில், மயிலின் அற்புத நடனத்தில், வண்டின் புலப்பத்தில், சுனையில், தாமரையில், கொன்றையின் பொன் மலரில், காலையில் கரிய குருவிக் கணங்களின் ஆரவாரத்தில். கூட்டிலிருந்து அவள் செல்வமாக வளர்க்கும் கிளி,

ருஷியக் கதை :

# கிர்ஜாலி

புஷ்கின்

ருஷியாவின் தலை சிறந்த கதாசிரியர்களில் ஒருவர் புஷ்கின். அவருடைய கதைத் தொகுதி ஒன்று 'சக்தி' மலராகத் தயாராகி வருகிறது. சின்னஞ் சிறிய இந்தக் கதை அந்தத் தொகுதியில் உள்ள பல கதைகளில் ஒன்ருகும்.

கிர்ஜாலி என்பவன் பல்கேரியா தேசத்தில் பிறந்தவன். துருக்கி பாஷையில், கிர்ஜாலி என்ற வார்த்தைக்கு '**அஞ்சா நெஞ்சன்**' என்று பொருள். அவனுடைய உண்மைப் பெயர் எனக்குத் தெரியாது.

தீவட்டிக் கொள்ளை யடிப்பதையே முக்கியத் தொழிலாக இவன் கைக் கொண்டு வாழ்ந்தான். ஆகையால், இவனைப்பற்றி அங்குள்ள ஜனங்களுக்கெல்லாம் எப்போதும் பயம்.

ஒரு நாள் இரவில் இவனும் மற்றும் சிலரும் ஒரு கிராமத்துக்குச் சென்ருர்கள். தெருவின் இரண்டு கோடியிலும் தீ மூட்டினர்கள். வீடு வீடாய் நுழைந்தார்கள். எதிர்ப்பட்டவர்களை யெல்லாம் வெட்டித் தள்ளினர்கள். அகப்பட்ட சொத்துக்களை யெல்லாம் கொள்ளை யடித்தார்கள். 'கிர்ஜாலி! கிர் ஜாலி!!' என்று கோஷித்துக் கொண்டேதான், இதை யெல்லாம் அவர்கள் செய்தார்கள். அது கேட்டுக் கிராமத்து ஜனங்களெல்லாம் ஓடி ஒளிந்தார்கள்.

முன்னெரு காலத்தில் ஓர் அரசன் ஒரு பெரிய சேனையைத் திரட்டினன். கிரேக்கர்களைத் துருக்கியின் ஆளுகையினின்றும் விடுவிக்க எத்தனித்தான். அச்சமயம் கிர்ஜாலி, திரள் திரளான ஜனங்களை ஒன்று சேர்த்துக் கொடுத்தான். தானும் துருக்கி தேசத்தில் புகுந்து, அதன் அளவு கடந்த செல்வத்தைச் சூறையிட்டான்.

இன்னும் இதைப் போலவே கிர்ஜாலி சம்பந்தப்படாத பெரிய காரியம் எதுவுமே அந்தக் காலத்தின் ஐரோப்பிய சரித்திரத்தில் கிடையாது. ஒரு சமயம் ஹிடேரிஸ்டுகள் என்ற வகுப்பினரைத் துருக்கி தேசத்தினர் தாக்கினர்கள். சண்டை மும்முரமாய் நடந்தது. ஆயுதங்கள் ஒன்ருேடு ஒன்று முட்டி ஒலித்தன ; 'படார் படார்' என்று வெடிகள் முழங்கின. துருக்கியர் வெற்றி அடைந்தார்கள். மால்டேவியா என்ற பிரதேசத்தில் இருந்த கொள்ளைக்காரர்களைத் துரத்தினர்கள். ருஷியாவில் ஒளிந்திருந்த கிர்ஜாலியும் பிடிபட்டான். உடனே அவனைக் கைதியாக்கி, துருக்கி பாதுஷாமுன் கொண்டு போய் நிறுத்தினர்கள். தானே கிர்ஜாலி என்று அவன் ஒப்புக் கொண்டான். தன் வாழ்க்கை எப்படி இருந்தாலும், அவன் அநாவசியமாய்ப் பொய் சொல்லுவதே யில்லை.

அப்பொழுது அவனுக்கு முப்பது வயது இருக்கும். ஆளோ வாட்ட சாட்டமாய் இருப்பான். இடுப்பில் ஒரு கச்சையும் தலையில் பெரிய தலைப்பாகையும் கட்டியிருந்தான். மௌனமாக இருந்தாலும், பார்வைக்குக் கம்பீரமானவன். கை விலங்குகளுடன் சிறையில் வசித்தான். பாவம்! இருந்தாலும், அவன் தைரியத்தைக் கைவிடவில்லை. அதுதானே வீரனுக்கு அழகு? தண்டனை அடைந்து சிறையும் புகுந்தான்.

ஜஸ்ஸி ஜயிலில் இருக்கும்போது பாதுஷா அவனைத் தூக்கிலிடும்படி உத்திரவு பிறப்பித்தார். அதை நிறைவேற்ற, ஒரு நாளும் நிச்சயித்திருந்தார்கள். அது குடிகளின் விடுமுறை நாள். அதுவரையில் சிறையில் இவன் சும்மா இருந்தான். ஏழு துருக்கி வீரர்கள் அவனை இரவும் பகலும் காத்தார்கள். சிறிது காலத்தில் அவர்களுடைய அன்பைக் கிர்ஜாலி பெற்ருன். **அவர்களுக்குக் கதைகள்** சொல்லிக் களிப்பூட்டுவான். நல்ல வாய்ச் சாலகன். கேட்போர் வியக்கும்படி அபூர்வ சம்பவங்களை சொல்லுவான்.

சிறையில் இருப்பவர்களைப் பார்த்து ஒரு நாள் "சகோதரர்களே! என் ஆயுள் முடியப் போகிறது. விதியை வெல்ல யாரால் ஆகும்? நானே உங்களை விட்டுப் பிரியப் போகிறேன். என் காலம் குறுகி விட்டது. ஆனல், என் ஞாபகார்த்தமாக ஏதாவது ஒரு பொருளை உங்களுக்கு வைத்து விட்டுப் போகலாம் என்று ஆசைப்படுகிறேன். கடவுளின் சித்தம் எப்படியோ!" என்ருன்.

துருக்கிச் சிப்பாய்கள் குதூகலம் அடைந்து, "அது என்ன பொருள்?" என்று ஆவலோடு கேட்டார்கள்.

"சகோதரர்களே! மூன்று வருஷங்களுக்கு முன் ஒரு கிராமத்தைக் கொள்ளை யடித்தேன். சதுப்பு நிலப் பிராந்தியம். இங்கிருந்து அதிக தூரமில்லை; அதிக ஸமீபமுமில்லை. அங்கே ஏராளமாய்த் தங்க நாணயங்கள் கிடைத்தன. அவற்றைத் தூக்க முடியாததால், அந்த நாணயங்களை அங்கேயே ஒரு பெரிய கொப்பரையில் போட்டுப் புதைத்து வைத்து, அதன் மேல் ஒரு பெரிய பாறையையும் அடையாளமாய் மூடினேன். அது இனி எனக்குப் பிரயோஜனப்படாது. உங்களுக்குள் சண்டையிடாமல் அதை எடுத்துக் கொண்டு அனுபவியுங்கள்" என்ருன் கிர்ஜாலி.

பணம் என்றவுடனே, சிப்பாய்களுக்கு மனம் மயங்கியது. அது எந்த இடமாய் இருக்கும் என்று பலவிதமாய் யோசித்தார்கள். எப்படிக் கண்டு பிடிப்பது? கிர்ஜாலியோ சாகப் போகிருன். அதிக நாட்கள் இல்லை. அவன் இல்லாமல் அந்தப் புதையலை எப்

### தெய்வ வாழ்வு

தேவர்களுடன் வாழ். ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் ஈசுவரனின் அம்சம் குடிகொண்டிருக்கிறது. அதுவே உள்ளிருந்து நமக்கு அறிவூட்டி வழிகாட்டி எப்பொழுதும் நம்மைக் காத்து வருகிறது. வாழ்வில் தான் பெற்றதைத் திருப்தியுடன் ஏற்றுக்கொண்டு எல்லாக் காரியங்களிலும் உள்ளத்திலுள்ள தெய்வம் காட்டும் வழியில் நடப்பதே, மனிதன் வானவர்களுடன் வாழ்வதாகும்.

—மார்க்ஸ் ஒளரேலியஸ்.

படிக் கண்டு பிடிப்பது? அவனையே அந்த ஸ்தலத்துக்குக் கூட்டிப் போனால் என்ன? இவ் விதமெல்லாம் ஆலோசித்தார்கள்.

இரவு வந்தது. கிர்ஜாலியின் விலங்குகள் அகற்றப் பட்டன. கைகளைக் கயிற்றினால் கட்டி இரவோடு இரவாக அவன் சொன்ன இடத்தைத் தேடி எல்லோரும் சென்றார்கள். கிர்ஜாலி, வழி காட்டியாக முன்னே சென்றான். மேடு பள்ளங்களையெல்லாம் மூச்சு விடாமல் கடந்து சென்றார்கள். வெகு நேரம் யாவரும் நடந்தார்கள். கடைசியாக, கிர்ஜாலி ஒரு பெரிய பாராங்கல்லைக் கண்டான். அங்கே நின்றான். அதிலிருந்து பத்தடி தெற்கே நடந்தான். "இந்த இடம் தான்; இதோ இருக்கிறது புதையல், வெட்டி எடுங்கள்" என்றான்.

துருக்கியர் ஆவலுடன் வெட்டினார்கள். மண்ணை வெட்டிப் போட்டுக் கொண்டேயிருந்தார்கள். மூன்று பேர்கள் பாராக் கொடுத்தார்கள். வெகு ஜரூராக வேலை நடந்தது. கிர்ஜாலி கல்லின் மேல் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன! இன்னும் அகப்படவில்லையா? கொப்பரை தென்பட்டதா, இல்லையா?" என்று மற்றவர்களை அதிகார தோரணையில் கேட்டான்.

"இன்னும் தென்பட வில்லையே" என்றார்கள் சிப்பாய்கள். அவர்களுக்கு வியர்வை கொட்டுகிறது; பெருமூச்சு வாங்குகிறது. கிர்ஜாலி "இது என்ன விபத்தாய் இருக்கிறது!" என்று சொல்லி, ஏதோ யோசிப்பவன் போல் பாவனை செய்தான்.

"சகோதரர்களே! வெட்டுவதற்குக் கூடவா தெரியாது? என்ன ஆச்சரியம்? நானாயிருந்தால் அரை நாழிகையில் வேலையை முடித்திருப்பேனே!" என்றான் கடைசியிலே கிர்ஜாலி. "எங்கே, செய் பார்ப்போம்" என்றார்கள் அவர்கள். "இதோ தயார். தயவு செய்து கைக்கட்டுகளை அவிழ்த்து விடுங்கள். ஒரு நொடியில் புதையலை எடுத்துத் தருகிறேன்" என்று கிர்ஜாலி சொன்னதும், துருக்கியர் கொஞ்சம் யோசித்தார்கள். "அதனால் இடைஞ்சல் ஒன்றும் வராது" என்று நினைத்து, "அவன் ஒருவன்; நாமோ ஏழு பேர்கள் இருக்கிறோம்" என்று சொல்லிக்கொண்டார்கள்.

கிர்ஜாலியின் கட்டுக்களை அவிழ்த்தார்கள். மண் வெட்டி கொண்டு அவன் வெட்டினான்; பிக்காசி கொண்டு கற்களை எடுத்தான். அவனது நினைவு மாத்திரம் எங்கேயோ இருந்தது. சிறிது நேரம் ஆயிற்று. கிர்ஜாலி திடீரென்று ஒரு சிப்பாயின் தலையில் கடப்பாரையினால் ஓங்கி அடித்தான். அவனிடம் இருந்த இரண்டு கைத் துப்பாக்கிகளையும் உடனே கைப்பற்றிக் கொண்டான். மற்ற ஆறு பேர்களுக்கும் இரண்டு துப்பாக்கிகள் இருக்கத்தான் இருந்தன. இருந்தாலும், கிர்ஜாலியின் வேலை கண்டு அவர்கள் அனைவரும் ஓட்டம் பிடித்து விட்டார்கள்.

ஜஸ்ஸி என்ற இடத்தில் கிர்ஜாலி சுகமாய் இருக்கிறான். சமீபத்தில் கவர்னருக்கு ஒரு கடிதம் எழுதினான். என்ன எழுதியிருந்தான்? கடிதம் கண்டதும் 5000 பவுன்கள் இன்ன இடத்துக்கு அனுப்பித் தீர வேண்டும், இல்லையேல் ஊரையே சுட்டுக் கொளுத்துவதோடு, கவர்னரையும் நேரில் வந்து தாக்குவதாகத் தான் எழுதியிருந்தான். பாவம்! கவர்னர் செய்வது என்ன! வேறு வழியில்லை. குறித்த பணம் நேரில் கிர்ஜாலிக்குப் பட்டுவாடா செய்யப்பட்டது.

கிர்ஜாலியின் சங்கதி இது தான்.

---

## மனைவியே காரணம்

பிரிட்ஜ் என்ற சீட்டாட்டத்தில் உலகப் பிரசித்தி பெற்றவர் எலி கல்பர்ட்ஸன். இவருடைய பிரிட்ஜ் கட்டுரைகள் உலகெங்கும் பல பத்திரிகைகளில் (நமது 'ஹிந்து' உள்பட) வெளிவருகின்றன. 1922-ஆம் ஆண்டு இவர் அமெரிக்காவுக்குச் சென்றார். சமூக சாஸ்திர போதகர் வேலைக்கு முயன்றார்; பலிக்கவில்லை. நிலக்கரி விற்றார்; லாபமில்லை. காப்பி வியாபாரத்தில் நுழைந்தார்; தோல்விதான்.

அந்தக் காலத்திலேயே பிரிட்ஜ் ஆடுவதுண்டு. ஆனால், அவ்வளவு திறமையாக ஆடமாட்டார். அது மட்டுமல்ல; தன்னோடு சேர்ந்த கட்சிக்காரனை, "இதை ஏன் போட்டாய்? அதை ஏன் ஆடினாய்?" என்று வதைத்துவிடுவார். ஆகையால், எவரும் இவர் கட்சியில் உட்கார விரும்புவதில்லை.

★

பிரிட்ஜ் ஆட்ட உபாத்தியாயினியான ஜோஸபைன் டில்லான் என்ற பெண் மட்டில் இவருடைய மேதையைக் கண்டுகொண்டாள். சீட்டுக்களை எவ்வளவு அழகாகவும் பூரணமாகவும் இவர் அலசி ஆராய்கிறார் என்பதைக் கவனித்து, அவள் பாராட்டினாள். இவரையே மணந்துகொண்டாள். பிரிட்ஜ் ஆட்டத்தில் இவருக்கு ஊக்கமும் அளித்தாள். "பிரிட்ஜ் ஆட்டத்தையே ஒரு தொழிலாக நான் கைக்கொண்டதற்குக் காரணம் என் மனைவியே" என்று, இன்று கல்பர்ட்ஸன் நன்றி கனியச் சொல்கிறார்.

## எந்த மதம் நல்லது?

சீக்கிய வீரர்களில் சிறந்த ஒருவரான ரஞ்சித் சிங்குக்கு, பக்கிரி அஜீஸ் உத்தீன் என்ற முஸ்லிம், அயல்நாட்டு மந்திரியாய் இருந்தார்.

★

அவரை ஒரு நாள் ரஞ்சித் சிங் இவ்வாறு கேட்டார்: "எது உமக்கு அதிகமாகப் பிடிக்கிறது—ஹிந்து மதமா, அல்லது முஸ்லிம் மதமா?"

அஜீஸ் உத்தீன் அளித்த பதிலாவது: "ஆற்றிலே வெள்ளம் பொங்கி ஓடுகிறது. அந்த வெள்ளத்திலே அகப்பட்டுக்கொண்ட ஒருவனைப்போல் நான் இருக்கிறேன். கரை தென்படாதா என்று என் கண்கள் ஏங்கித் தேடுகின்றன. அது இந்தக் கரையாயிருந்தால் என்ன? அந்தக் கரையாயிருந்தால் என்ன? எனக்கொன்றும் அதிலே வித்தியாசமில்லை."

# "சருமத்தை பாதுகாற்பது வெகு எளிது"

## என்று ஹஸ்னு பானு சொல்லுகிருர்






"சினிமா நடி தன்னுடைய சருமத்தை சுத்தமாக வும், மிருதுவாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். ஆகையினுல் நானும் சருமத்தைப் பாதுகாற்க வேண்டும். லக்ஸ் டாய்லெட் சோப்பினுல் இதைச் செய்கிறேன்."

மேலும் இந்த அழகிய இள நடி சொல்லுகிருர் "லக்ஸ் டாய்லெட் சோப்பினுல் சருமத்தை அழகாகவும், சுத்தமாகவும், வைத்துக் கொள்வது எளிது. என் சருமத்துக்கு இந்த சோப்பு மிகவும் தகுந்தது. எல்லா பெண்மணிகளும் இதை உபயோகிக்கலாமென்று நினைக்கிறேன். சருமத்தை சுத்தமாகவும், வழவழப்பாகவும், மிருதுவாகவும் செய்கிறது. அதன் நறுமணம் உங்களுக்கு இன்பம் அளிக்கும்.

சினிமா நடிகளின் சுந்திர சோப்

## லக்ஸ் டாய்லெட் சோப்

LEVER BROTHERS (INDIA) LIMITED

LTS. 50-90 TM.

★ வீட்டு முனையை பாதுகாருங்கள்

# ஹிந்துஸ்தான்

இன்று வாழ்க்கை நிச்சயமற்றதாயுள்ளதைப்போல் எப்பொழுதும் இருந்ததில்லை. இப்பொழுதைப் போல் இன்ஷ்யூரன்ஸின் அவசியம் எப்பொழுதும் இருந்ததில்லை. உங்களை நம்பியுள்ளவர்களுக்கு பாதுகாப்பளிக்க சிறந்த வழி இந்தமுறை பாலிஸிதாரர்களுக்கு அளிக்கும் மனச்சாந்தி வேறு எவ்வகையிலும் கிடைக்காது.

## கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொஸைடி லிமிடெட் ★

இந்த அவசர சமயத்தில், ஆயுள் சம்பந்தமான சகலவித பாதுகாப்பையும் அளிக்கின்றது. இன்ஷ்யூரன்ஸ், அதிக இன்ஷ்யூரன்ஸ் செய்ய இதுவே காலம். இப்பொழுதே கவனியுங்கள்.

தலைமை ஆபீஸ் :

6-A, சுரேந்திரநாந் பானர்ஜி ரோட்,
கல்கத்தா

மதராஸ் பிராஞ்சு :

7/67, ஜெயில் ரோட்
கோயமுத்தூர்




"ஸி. ஏ. க்யூ." இது ஒன்றேதான். அதைத் தயாரிப்பது ஸ்பென்ஸர் கம்பெனியார்தான்

# ஸி. ஏ. க்யூ.

## உங்களுக்கு எப்போதும் பாதுகாப்பளிக்க

நோய்கள் நம்மை அணுகாமல் தடுப்பதில் ஸி. ஏ. க்யூ. எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதைச் சென்ற 30 வருஷங்களுக்கு மேலாக இதற்கு இருந்துவரும் பிராபல்யம் நிரூபிக்கிறது. இன்ப்ளூயன்ஸா, டிங்கி ஜுரம், ஜலதோஷம், மார்ச்சளி முதலிய உபாதைகளைக் குணமாக்குவதில் இன்று ஸி. ஏ. க்யூ. தலைசிறந்து விளங்குகிறது. இதில் ஒரு டோஸ் சாப்பிட்டதுமே குணமளிக்கும் மருந்தென்று இதைச் சிபார்சு செய்கிறார்கள். ஜலதோஷம், மார்ச்சளி, இன்ப்ளூயன்ஸா முதலியவைகளைத் தடுப்பதில் ஸ்பென்ஸர் கம்பெனியாரின் ஸி. ஏ. க்யூ. நிகரற்றது.

ஒரு புட்டி விலை ரூ. 1

மாத்திரைகள் ஒரு டப்பா அணா 14

## ஸ்பென்ஸர் & கோ. லிமி.

சென்னை

மருந்து வியாபாரிகள்

ஈ211, N36,S
N42·6·7
134198
சென்னை-600 008

சிறு கதை:

# அண்டை வீட்டுப்பெண்

ஸி. ஆர். ஸரோஜா

அவனுக்குச் சபலம் தட்டியது. வேறு பெண்ணை மனத்திலே எண்ணினுன். மனேவியிடமும் சொல்லிவிட்டான். அவள் என்ன செய்யலாம்? சீறி விழலாம்; கண்ணீர் விடலாம்; இன்னும் என்னென்னவோ செய்யலாம். யோசித்து முடிவு செய்யுங்கள். பிறகு படித்துப்பாருங்கள்.

சுவாமிநாதனும் மீனுட்சியும் வெளியே உலாவப் போய்விட்டு வந்தபோது, மணி ஏழுக்குமேல் ஆகிவிட்டது. வீட்டை அடைந்தவுடன் மீனுட்சியைப் பார்த்து, "பக்கத்து வீட்டுக்கு யாரோ குடி வந்திருக்கிருர்கள் போல் இருக்கிறதே" என்று அவன் கேட்டான்.

"ஆமாம், நேற்றுத்தான் வந்தார்கள்" என்ருள் மீனுட்சி.

"குழந்தைகள் அதிகம் இல்லைப் போல் இருக்கிறது. சந்தடியைக் காணுமே" என்று மறுபடியும் கேட்டான் அவன்.

"என்னவோ, எனக்குத் தெரியாதே" என்ருள் மீனுட்சி. அதோடு சம்பாஷணை முடிந்தது.

மீனுட்சி கிராமாந்தரத்துப் பெண். ஐந்தாவது வகுப்பு வரையில் படித்திருக்கிருள். அதிக நாகரிகம் இல்லாமல், சுத்தப் பட்டிக்காடாகவும் இல்லாமல் சாதாரணமாய் இருந்து வந்தாள். ஒல்லியான உடம்பு, கரு கரு வென்று அடர்ந்த கூந்தல். மாநிறம். களையான முகம். அவளுடைய பேச்சு, காரியம் எல்லாம் சாந்தமாயும் நிதானமாயும் இருந்தன. அதிகம் சிரிக்க மாட்டாள். அப்படிச் சிரித்தாலும் மெல்லிய அருவியின் சத்தம் போல் அந்தச் சிரிப்பு மிருதுவாக இருக்கும். தளுக்கி மினுக்கிக் கொண்டு அவளுக்கு நடக்கத் தெரியாது. மருண்ட பார்வை. சுவாமிநாதனின் உள்ளத்தைக் கவர்ந்தது இந்தப் பார்வைதான். கல்யாணம் செய்து கொண்ட புதிசில், 'இன்னும் படித்தவளாக இருந்தால், நன்ருய் இருக்குமே' என்று நினைத்துக் கொண்டான். நாளடைவில் அவளுடைய ஸௌஜன்யமான குணத்துக்கு அடிமையாய்ப் போய் விட்டது அவனது மனம். படிப்பு அதிகம் இல்லையே தவிர. அறிவு, அடக்கம் முதலியவை அவளிடத்தில் நிரம்பி யிருந்தன.

சுவாமிநாதனும் மீனுட்சியும் சாப்பிட்டு விட்டு, மேல் மாடியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். வான வெளியில் கணக்கற்ற நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன. சுக்கில பட்சத்துப் பஞ்சமி நிலவு ஒரு புறம் சாய்ந்து பிரகாசித்துக் கொண்டிருந்தது.

"மீனுட்சி! குழந்தை தூங்கி விட்டாளா?" என்று சுவாமிநாதன் கேட்டான்.

"சாயங்காலமே தூங்கி விட்டாளே. வர வர அவள் எவ்வளவு தொந்தரவு செய்கிருள், தெரியுமா? துஷ்டத் தனத்துக்கு உங்களையே உரித்துக்கொண்டு வந்திருக்கிருள்" என்று சொல்லிவிட்டு, மீனுட்சி சிரித்தாள். சுவாமிநாதனும் லேசாகச் சிரித்துவிட்டு, "அப்படியா? சரிதான்" என்ருன்.

"பக்கத்து வீட்டில் மனிதர்கள் இருப்பதே தெரியவில்லையே. வீடு நிறைய விளக்கெரிகிறது; ஆனல், சந்தடியைக் காணுமே" என்ருள் மீனுட்சி.

"இல்லை, சாயங்காலம் நான் வெளியே போய்விட்டுத் திரும்பி வரும்போது கவனித்தேன். ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். நீ பார்த்தாயோ?"

"நான் பார்க்க வில்லை" என்று பதில் அளித்தாள் மீனுட்சி.

உடனே எழுந்து போய் மதில் சுவரின் ஓரமாய் எட்டி அண்டை வீட்டைப் பார்த்தாள். பார்த்து விட்டு, "இந்தாருங்கள், இங்கே வந்து பாருங்களேன்" என்று கூப்பிட்டாள் அவள்.

பக்கத்து வீட்டில் ஓர் அறையில் ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்த கிழவருக்கு, ஏதோ கதை படித்துச் சொல்லிக் கொண்டிருந்தாள் ஒரு பெண். அவ்வப்போது காதில் விழுந்ததனல், அது ஆங்கிலம் என்று தெரிந்தது.

"இவ்வளவு பெரிய வீட்டில் இரண்டே பேர் இருந்தால், சந்தடி இருக்குமா?" என்று கேட்டாள் மீனுட்சி.

வைத்த கண் வாங்காமல், சுவாமிநாதன் கீழே பார்த்துக் கொண்டிருந்தான். பதம் பதமாக



இவனும் அவளுமாகக் கேரம் ஆடிக்கொண்டிருப்பார்கள்

அந்தக் கதையை வியாக்கியானம் செய்து கொண்டிருந்தாள் அந்தப் பெண். மீனாட்சியும் நிமிர்ந்து, ஒரு பெரு மூச்சுடன், "என்னை யும் படிக்க வைத்திருந்தால், எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்? நீங்களாவது சொல்லித் தருகிறீர்களா? அதுவும் இல்லை" என்று குறைப் பட்டாள்.

சுவாமிநாதன் மௌனமாக உள்ளே போய்விட்டான்.

2

முதல் நாள் இரவு அந்தப் பெண்ணைக் கண்டதிலிருந்து சுவாமிநாதனின் மனதில் ஏதோ ஒரு மாறுதல் ஏற்பட்டது. ஆபீஸிலிருந்து வந்ததும், ஜாடையாக அவளுடைய செயல்களைக் கவனிக்க ஆரம்பித்தான். தோட்டத்தில் 'பாட்மின்டன்' கோர்ட்டில் அவளும், அவளுடைய சிநேகிதிகளும் சேர்ந்து விளையாடுவது, அவள் அடிக்கடி இங்கிலீஷில் பேசுவது, சிரிப்பது எல்லாம் அவனுக்கு இன்பமாய் இருந்தன. வீட்டில் வாழ்க்கையோடு கலந்துபோன பதங்களான 'டைம், ரெடி, ஆபீஸ்' முதலிய சில ஆங்கில வார்த்தைகளை அடிக்கடி மீனாட்சி உபயோகிப்பாளே தவிர, வேறு அவளுக்கு என்ன தெரியும்? கெஞ்சும் குரலில் கொஞ்சும் கிளியைப் போல் அவளது நாவில் அந்தப் பாஷையும் கொஞ்சலாகவே வெளி வந்தது. இனிமேல் என்ன நினைத்து என்ன பயன்? மீனாட்சி அந்தப் பெண்ணாக மாற முடியுமா?

சுவாமிநாதன் உள்ளே காப்பி சாப்பிட நுழைந்தான்.

"மீனாட்சி! குழந்தை எங்கே?" என்று கேட்டான்.

"குழந்தையா? பக்கத்து வீட்டுக்குப் போயிருக்கிறாள்."

"யார் வந்து எடுத்துக்கொண்டு போனார்கள்?"

"நேற்று இரவு பார்த்தோமே அந்தப் பெண்—சகுந்தலை—அவள் வந்து எடுத்துக் கொண்டு போனாள்."

"அவள் பெயர் சகுந்தலையா?" என்று அவன் கேட்டான்.

"ஆமாம், பெயர் அழகாக இருக்கிறது. குணத்திலும் தங்கக் கம்பிதான்."

சுவாமிநாதன் அவளைப் பற்றி அறிவதில் மெய்மறந் திருந்தான். அப்பொழுது சகுந்தலையே குழந்தையை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தாள். அவனைப் பார்த்துக் கொண்டே, "குழந்தை ரொம்பச் சமர்த்தாக இருக்கிறாள், மாமி! அடக்கமாய் ஒரே இடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். நல்ல 'ட்ரெயினிங்' கொடுத்திருக்கிறீர்கள்" என்றாள். மீனாட்சிக்குப் பெருமை தாங்க முடியவில்லை. தன்னையும் தன் குழந்தையையும், படித்த பெண் ஒருத்தி புகழுவதென்றால், அது சாமானியமானதா?

"உட்காரேன், சகுந்தலா" என்று உபசரித்தாள் மீனாட்சி.

"இல்லை, மாமி! ஆத்தில் தாத்தா காத்துக் கொண்டிருப்பார். போக வேண்டும்" என்றாள் சகுந்தலை.

"பரவா யில்லை, போகலாம்" என்றான் சுவாமிநாதன்.

"தாங்க் யூ!" என்று சொல்லிக் கொண்டே, அவனுக்கு எதிரில் இருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள் சகுந்தலை.

"இன்னும் படித்துக் கொண்டிருக்கிறாயா?" என்று கேட்டான் சுவாமிநாதன்.

"போன வருஷம் தான் பாஸ் ஆயிற்று."

"எந்த வகுப்பு?"

"லிட்டரேச்சர் ஆனர்ஸ்" என்று பதில் அளித்தாள் அவள்.

"ஓ! நானும் அதுதான்."

"நீங்களும் அதுதான் என்று சொல்லிக் கொள்ளுகிறீர்களே தவிர, ஒரு நாளாவது எதைப் பற்றியாவது எனக்குச் சொல்லியிருக்கிறீர்களா?" என்று, இதுவரை பேசாதிருந்த மீனாட்சி கேட்டாள்.

"ஆஹா! சொன்னால் உனக்குப் புரிந்து விடுமோ, இல்லையோ?" என்று வெடுக்கென்று சொன்னான் சுவாமிநாதன்.

மீனாட்சி வெட்கத்தால் தலையைக் குனிந்து கொண்டாள். சகுந்தலை புன்னகையுடன், "நீங்கள் கவலைப் படாதீர்கள், மாமி. தினம் நான் வந்து உங்களுக்கு ஏதாவது சொல்லித் தருகிறேன்" என்றாள். அவளை நன்றி யறிதலுடன் நோக்கினாள் மீனாட்சி.

3

சகுந்தலை இந்த ஒரு நாள் சந்திப்பிலிருந்து, அவர்களுடைய குடும்ப மனுஷி மாதிரி ஆகிவிட்டாள். மீனாட்சியின் பெண்ணைத் தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டிருப்பாள். சிறு கதைப் புத்தகங்களிலிருந்து நல்ல கதைகளாக மீனாட்சிக்குச் சொல்லி வந்தாள். சுவாமிநாதனுடன் சகஜமாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருப்பாள். அநேகம் தடவைகளில் இவளும் அவனுமாகக் 'கேரம்' ஆடிக்கொண் டிருப்பார்கள். மீனாட்சியின் மனதில் சிறிதுகூடக் கல்மஷம் இல்லை. தான் சகுந்தலையால் இன்னும் கொஞ்ச காலத்தில் படிப்பில் சிறிதாவது தேர்ச்சியடையலாம் என்று நினைத்தாள். வீட்டில் எது செய்தாலும், வாங்கினாலும் சகுந்தலைக்கென்று எடுத்து வைக்காமல் இருக்க மாட்டாள். சகுந்தலையின் உள்ளமும், மீனாட்சியின் கள்ளங் கபடு அற்ற உள்ளத்தோடு ஐக்கிய மாகி இருந்தது. சுவாமிநாதனைத் தன் சகோதரனைப் போலவே, சகுந்தலை பாவித்தாள். இந்தப் புனிதமான நட்புக்கிடையில், சுவாமிநாதனின் மனதில் அற்ப ஆசை ஒன்று வளர்ந்து கொண்டு வந்தது. சகுந்தலையின் ஒவ்வொரு பேச்சிலும் செயலிலும், அவன் ஒப்பில்லாத அழகைக் கண்டான். அவளது அழகிய முக விலாசத்தில் மனதைப் பறிகொடுத்து நின்றான்.

"மாமீ!" என்று அவள் கூப்பிட்டுக்கொண்டு வரும் குரலைக் கேட்டதும், முதலில் சுவாமிநாதன் ஆஜராகி விடுவான். மீனாட்சி புடவை வாங்கினால், "இதைச் சகுந்தலை கட்டிக் கொண்டால் நன்றாய் இருக்கும்" என்று சொல்லுவான்.

"ஆமாம், அவளுக்கு எதுவும் பொருந்தி இருக்கிறது" என்று பதில் சொல்லுவாள் மீனாட்சி.

மூவருமாக ஒரு நாள் ஸினிமாவுக்குப் போய்விட்டு வந்தார்கள். சகுந்தலைக்கு எப்பொழுதுமே அலங்கரித்துக் கொள்ளுவதில் ஆசை. அன்று 'டிப்-டாப்' பாக டிரஸ் செய்துகொண்டு வந்திருந்தாள். அவனைப் பார்த்துச் சிரித்

துக்கொண்டே, "எந்தப் பாழும் கண்ணாவது பட்டுவிடப் போகிறதே" என்றாள் மீனாட்சி.

"ஏன்? என் கண்ணே விழுந்து விடும்" என்றான் சுவாமிநாதன்.

"போங்கள். உங்களுக்குக் கேலிதான் செய்யத் தெரியும்" என்று மீனாட்சி, தலையைக் குனிந்து கொண்டாள்.

அவனது மனம் மீனாட்சிக்குத் துரோகம் நினைக்கச் சம்மதிக்கவில்லை. ஸினிமாவிலிருந்து வந்து வெகு நேரமாகியும், தூக்கம் வரவில்லை. மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு, "மீனாட்சி! மீனாட்சி!" என்று கூப்பிட்டான்.

அவள் திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். "இன்னும் தூங்கவில்லையா? உடம்பு ஏதாவது சரியில்லையா?" என்று கேட்டாள்.

"மீனாட்சி!"

"ஏன் இப்படிப் பார்க்கிறீர்கள்?"

"என்னை மன்னித்து விடு." அவன் கண்களில் ஜலம் ததும்பி நின்றது.

"என்னவோ அசடு மாதிரி பேசுகிறீர்களே! விஷயம் என்ன?"

"என் மனம் என் வசத்தில் இல்லை. சகுந்தலை அதை அபகரித்துக்கொண்டு விட்டாள்."

"ஐயோ! உங்களுக்குப் பைத்தியமா? குழந்தை மாதிரி சகஜமாக நம்முடன் பழகும் பெண்ணைப் பற்றி, இப்படி நினைக்கலாமா?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. உனக்கு இஷ்டமில்லையென்றால், நான் எங்கேயாவது போய் விடுகிறேன்."

மீனாட்சி யோசனையில் ஆழ்ந்தாள். பிறகு, "ஆகட்டும். அவளையே கேட்டுப் பார்க்கிறேன்" என்றாள்.

மறு தினம் சகுந்தலை வழக்கப்பிரகாரம் வந்தாள். மீனாட்சியின் முகம் சுண்டிப்போய் இருந்தது. பொறாமை அல்ல; மன வருத்தந்தான். சகுந்தலை என்றும்போல் சகஜமாய்ப் பேசினாள். அவனுடன் 'கேரம்' ஆடினாள். கடைசியாக வீட்டுக்குக் கிளம்புகிற சமயத்தில், மீனாட்சி அவளை அழைத்துக்கொண்டு மாடிக்குப் போனாள்.

"இது என்ன? என்றுமில்லாத அதிசயமாய்த் தனியாக அழைத்து வந்துவிட்டீர்கள்?" என்று சகுந்தலை கேட்டாள்.

"சகுந்தலை! என் பேரில் கோபித்துக் கொள்ளாதே. உனக்கு என் கணவரைக் கல்யாணம் செய்துகொள்ள இஷ்டமா?" என்று கேட்டாள்.

சகுந்தலை பிரமித்து நின்றுவிட்டாள். "இதற்குப் பதில் இப்பொழுது சொல்ல முடியாது. ஒரு வாரத்தில் ஆகட்டும்" என்றாள். அதற்குமேல் அவள் அங்கே நிற்கவில்லை. ஒன்றிரண்டு தினங்களுக்குள், சகுந்தலையின் வரவு நின்றுபோயிற்று.

ஒரு நாள் அதிகாலையில் அண்டை வீடு பூட்டிக் கிடந்தது! கிழவரும் அவளும் நேற்றுப் புறப்பட்டு வீட்டைக் காலி செய்து கொண்டு போனதாக, தோட்டக்காரன் சொன்னான். அன்று மத்தியானம் வந்த கடிதத்தில்:

"அன்புள்ள சகோதரி,

உன் கணவரின் மனதில் ஏற்பட்டிருப்பது காதல் அல்ல. ஏதோ ஒரு பிரமை. நாகரிகம், படிப்பு என்று புருஷர்கள் சட்டென்று அவைகளுக்கு அடிமையாகிவிடுகிறார்கள். உன்னிடம் இருக்கும் உன்னதமான குணங்களில் அநேகம் என்னிடம் இல்லை. அடக்கத்தையே நீ ஆபரணமாகப் பூண்டிருக்கிறாய். எவ்வளவு படித்திருந்தபோதிலும் என்னிடம் அடக்கம் குறைவுதான் என்று நான் ஒப்புக் கொண்டாக வேண்டும். அவருடைய பார்வையிலிருந்து நான் விலகி வந்துவிட்டேன். என்னைப்பற்றி அவரது மனம் நாளடைவில் மறந்து போய்விடும். என்னை நினைந்து வருந்தாதே. என்றாவது நாம் சந்திப்போம்.

இப்படிக்கு,
சகுந்தலை."

என்று எழுதியிருந்தாள்.

மீனாட்சியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. அந்தக் கடிதத்தை அன்போடு மார்புடன் அணைத்துக்கொண்டு, அண்டை வீட்டைப் பார்த்தாள். ஆமாம் அது இதோ பூட்டித்தான் கிடந்தது—வெறிச்சென்று, பாழாய்

---

### நாசவேலையின் ரகஸ்யம்

"எதற்காக, இறைவன் தான் படைத்த உலகையே இவ்வளவு பயங்கரமாக அறைந்தும், காலின் கீழே போட்டு மிதித்தும், குருதி வெள்ளத்தில் குளிப்பாட்டியும், உலைக்களத்தில் நரகத் தீயை யொத்த செந்தழலில் எரித்தும் வதைக்கிறான்? ஏனெனில், மக்களினம், மொத்தத்தில் இன்னும் மண்ணோடு கலந்த உலோகத்தைப் போன்று கடினமாயும் பண்படாமலும் இருக்கிறது. எவ்விதம், அவ் உலோகத்தைப் பண்படுத்த அதை உலைக்களத்தில் காய்ச்சி, உருக்கி, அடித்து உருப்படுத்துவது இன்றியமையாததோ, அவ்விதமாகவே மக்களினத்தைப் பண்படுத்துவதற்கும் இறைவன் கையாளும் மேலே குறித்த வழியைத் தவிர, வேறு யாதொரு வழியுமில்லை."
—அரவிந்தயோகி

★

### சுதந்தரக் கொடி

ராஜாராம் மோஹனராய் என்ற உத்தம இந்திய தேச பக்தர், தம் அந்திம நாட்களில் முகல் சக்கரவர்த்தியின் தூதராக லண்டனுக்குச் சென்றார். அவருக்கு அப்போது சுதந்தர ஆர்வம் மிகுந்திருந்தது. ஆகையால், நன்னம்பிக்கை முனைக்குப் போய்ச் சேர்ந்ததும், அங்கே சுதந்தரக்கொடி தாங்கிய பிரஞ்சுக் கப்பலில் தான் தாம் செல்லவேண்டுமென்று பிடிவாதம் செய்தார்.

அப்படியே இவரை ஒரு பிரஞ்சுக் கப்பலில் ஏற்றிவிட்டார்கள். அங்கே சுதந்தரக் கொடியைக் கண்டதும் "வாழ்க! வாழ்க! வாழ்க இந்தக் கொடி" என்று உற்சாகம் பொங்கிக் கோஷமிட்டார்.

★

# ரஷ்யாவின் ரகஸ்யம்

‘ஜேயார்’



ஸ்டாலின்

“முதல் ரவுண்டில் அவர்கள் ஜயித்தார்கள். இரண்டாவது ரவுண்டில் நாங்கள் துரத்தி யடித்தோம். மூன்றாவது ரவுண்டில் அவர்கள் முன்னேறி வருகிறார்கள். சில காலத்துக்குள் நான்காவது ரவுண்டிலே நாங்கள் விரட்டுவதைக் காண்பீர்கள். அதுவும் பிறகு திரும்பியே வராதபடி தொலைக்கிறோம், பாருங்கள்” என்றார் சமீபத்திலே ஒரு ரஷ்யத் தலைவர். ரஷ்யா போராடுகிறது. நெருக்கடியான கட்டம். ஆயினும் அது தோற்காது. உலகத்துக்கே புதுமையான அந்த நாடு, இறுதியில் வென்றே தீரும். அந்த ரஷ்யாவின் அற்புத அபிவிருத்திகளைப் படியுங்கள்.

கிரேக்கர்களின் புராணத்திலே ஆண்டியஸ் என்ற ஒரு வீரன் உண்டு. அவன் சமுத்திரராஜனுக்குப் பூமாதேவி வயிற்றில் பிறந்தவன். தன்னைப் பெற்றுப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்த தாயிடம் ஆண்டியஸுக்குப் பரம வாற்சல்யம். அவன் வெல்லாத வீரனில்லை. இந்த மகா வீரனுடைய வலிமையின் ரகஸ்யமென்ன? அன்னிய வீரன் ஒருவன் இவனுடன் மல்லிடும் ஒவ்வொரு சமயத்திலும், பூமியிலே வைத்து இவன் அமுக்கப் படுவான் அல்லவா? பூமாதேவியின் அந்த ஒவ்வொரு ஸ்பர்சமும், இவனுக்குப் புதிய புதிய வலிமையைத் தந்தது. இவ்வாறாக, களைத்து விழும் போதெல்லாம் புதிய பலம் பெற்றான். இதுவே ஆண்டியஸின் வலிமை ரகஸ்யம். அவனுடைய தாயை விட்டு அவனைப் பிரித்துவிட்டால், அவன் வலிமையற்றுத் தளர்வான் என்பது யாருக்குந் தெரியாது. அதையறிந்த ஹெர்க்குலீஸ் என்ற மகா வீரன் வந்துதான் ஆண்டியஸை ஜயிக்க முடிந்தது. அவன் இவனைப் பூமாதேவித் தாயின் ஸ்பர்சமில்லாதபடி ஆகாயத்திலே தூக்கி மென்னியை நெரித்துக் கொன்றான். ஸோவியத் ரஷ்யாவின் வலிமைக்கு இந்த ஆண்டியஸையே உதாரணம் கூறுகிறார் ரஷ்ய சர்வாதிகாரி ஸ்டாலின்.

“கிரேக்கரின் புராணத்திலே உள்ள இந்த வீரனைத்தான், போல்ஷ்விக்கர்கள் எனக்கு ஞாபகமூட்டுகிறார்கள். போல்ஷ்விக்கர்கள், ஆண்டியஸைப் போல வெல்லற்கரிய வீரர்களா யிருப்பதன் காரணம், தங்களைப் பெற்று வளர்த்த தாய் போன்ற எளிய மகாஜனங்களோடு அவர்கள் நெருங்கிய சம்பந்தம் கொண்டிருப்பதுதான். அந்தச் சம்பந்தத்தை அவர்கள் எதுவரையில் காப்பாற்றி வருகிறார்களோ அதுவரையில் அவர்களை வெல்லக் கூடியவர் எவருமில்லை” என்பது ஸ்டாலின் வாக்கு.

தேடித் தேடிப் பார்த்தும், ரஷ்யாவிலே ‘ஐந்தாம் படை’ ஆசாமி ஒரே ஒருவன்கூட ஹிட்லருக்குக் கிடைக்கவில்லை என்று மிஸ்டர் சர்ச்சில் சமீபத்தில் புகழ்ந்தார். அதன் காரணம் என்ன? இதுவேதான். ரஷ்ய மகாஜனங்கள் ஏகமுகமாகத் தம் தலைவனைப் பின்பற்றிப் போரிடுகிறார்கள். சென்ற ஜுலைமாதம் 3-ஆம் தேதியிலிருந்து ஒரு வருஷத்துக்கு மேலாக உலகமே பிரமிக்கும்படி மிகுந்த வீரத்தோடு நாஜி வெறியர்களை ரஷ்யா எதிர்த்து நிற்பதன் மர்மமும் இதுதான்.

ரஷ்ய அரசாங்கம், தன் மகாஜனங்களோடு இவ்வித ஜீவ சம்பந்தம் வைத்துக் கொண்டிருப்பதெப்படி? அங்கே ஜனநாயக லட்சியம் எவ்வாறு வேலை செய்கிறது? இதையெல்லாம் நாம் அறிந்து கொள்ளுவது அவசியமாகும்.

ஸோவியத் ரஷ்யாவுக்கு ‘யு. எஸ். எஸ். ஆர்.’ என்றுதான் பெயர். அதாவது ‘யூனியன் ஆப் ஸோவியத் ஸோஷலிஸ்ட் ரிபப்ளிக்ஸ்’ (ஸோவியத் அபேதவாதக் குடியரசுகளின் ஐக்கியம்) என்பது முழுப் பெயர். (1) ரஷ்யா (2) உக்ரேனியா (3) பைலோ ரஷ்யா (4) காரேலோ பின்லாந்து (5) எஸ்தோனியா (6) லாட்வியா (7) லிதுவேனியா (8) மால்டேவியா (9) ஜியார்ஜியா (10) அர்மீனியா (11) அஜெர்பேட்ஜா (12) உஜ்பெக் (13) டாட்ஜிக் (14) டர்க்மேனியா (15) கிர்கிஜியா (16) காஸாக்-இப்படிப் பல ஜாதியாரின் பல குடியரசுகள் அதில் அடங்கியிருக்கின்றன. இந்தக் குடியரசுகளுக்குச் சம உரிமைகளும் யூனியனிலிருந்து பிரியும் உரிமையும் உண்டு.

இந்தியாவில் பாகிஸ்தான் உரிமையை ஒப்புக்கொள்ளவேண்டும் என்று, அபேதவாதிகள் என்போர் சிலர் சொல்லுகிறார்களே, அவர்கள் இந்த ஸோவியத் ஏற்பாட்டைத்தான் உதாரணம் கூறுகிறார்கள். ஆனால், இதை நாம் கொஞ்சம் கூர்ந்து கவனிக்க வேண்டும். ஸோவியத் ருஷியா செய்ததை யெல்லாம் நாம் செய்யத் தயாரா, ஜின்னா சாகேபுதான் தயாரா என்று யோசிக்கவேண்டும்.

1917-ஆம் ௵ அக்டோபர் மாதம் நடந்த ஒரு புரட்சிதான் ஸோவியத் ராஜாங்கம் ஏற்பட்டதற்கு அஸ்திவாரமாகும். அந்தப் புரட்சி நடந்த உடனே, நவம்பர் 15உ ஜனங்களின் உரிமைப் பிரகடனம் ஒன்றைத் தலைவர்கள் வெளியிட்டார்கள்: (1) ரஷ்ய ஜனங்களுக்கே சர்வாதிகாரம்; அவர்கள் அனைவரும் சமம். (2) ரஷ்யாவிலுள்ள பல நாட்டாருக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு; சுயேச்சையான ராஜாங்கம் அமைத்துக்கொள்ளும் உரிமையும் உண்டு. (3) சகலவிதமான தேசீயச் சலுகைகளும் நிர்ப்பந்தங்களும், தேசீய மதச் சலுகைகளும் நிர்ப்பந்தங்களும் அடியோடு

அழித்துவிடப்படும். (4) தேசீயச் சிறுபான்மை வகுப்பினர்கள் சுதந்தரமாய் வளர்ச்சிபெற இடமளிக்கப்படும் - இவைதான் அந்தப் பிரகடனத்தின் சாராம்சம்.

இதில் பிரியும் உரிமை இருக்கிறது. ஆனால், ரஷ்ய ஜனங்கள் அனைவரும் சமம் என்ற முதல் ஷரத்தும், சகல தேசீய மதச் சலுகைகளும் தடைகளும் ஒழியும் என்ற மூன்றாவது ஷரத்தும் தான் மிக முக்கியமாகும். அந்த இரண்டும் ஒற்றுமைக்கு வழிகோலுபவை. தவிர, இந்தப் பிரகடனத்தைச் செய்த தலைவர்கள், எந்தப் பிற்போக்கு வாதிகளோடும் கட்சியோடும் கூட்டுச் சேரவில்லை. வேற்றுமைகளையும் தடைகளையும் அநீதிகளையும் எல்லாம் ஒழிப்போம் என்று ரஷ்யமகா ஜனங்கள் அனைவருக்கும் புதிய நம்பிக்கை அளிக்கவே, இந்தப் பிரகடனத்தைச் செய்தார்கள். முஸ்லிம் சமூகப் பாமர மக்களிடம் காங்கிரஸ் கிட்டவும் வரக்கூடாது, வந்து அவர்கள் கண்ணைத் திறந்துவிடவும் கூடாது என்று கர்ஜிக்கும் ஜனாப் ஜின்னா லீக் போன்ற எந்தக் கூட்டத்தையும் திருப்திப்படுத்தவோ அதனோடு கூட்டுறவு கொள்ளவோ அவர்கள் முயலவில்லை. இதற்குமாறாக, அதே தலைவர்கள், 1922-ஆம் ௵ உள்நாட்டுக்கலகம் முடிந்ததும், ஸோவியத் அகில யூனியன் காங்கிரஸ் ஒன்றைக் கூட்டி, ஸோவியத் குடியரசுகள் அனைத்தும் ஐக்கியமாகிவிடவேண்டுமென்று முடிவு செய்தார்கள். இப்படி ஐக்கியப்பட்டு உழைத்தால்தான் பொருளாதாரத் துறையில் முன்னேற முடியும், வெளியார் வந்து தாக்கும் அபாயத்தை எதிர்த்துச் சமாளிக்க முடியும் என்று அவர்கள் உணர்ந்தார்கள். வெளி அபாயம் தலைக்குமேல் வந்திருக்கும்போதே நம் அபேதவாதிகள் என்போர் சொல்லுவதுபோலப் பிரிவினை உரிமை வேண்டுமென்று அவர்கள் சொல்லவில்லை. வேற்றுமைகளை யெல்லாம் சாசுவதப்படுத்த விரும்பும் ஓர் அந்நிய சர்க்கார் அவர்களை ஆண்டுகொண்டிருக்கவும் இல்லை. அன்றியும், அங்கே ஸோவியத் கட்சியைத் தவிர, வேறு கட்சியே கிடையாது. இரண்டாவது கட்சி இருந்தால் அல்லவா, பிரிதல், குளறுதல் முதலிய மண்ணாங்கட்டி உரிமைகளை யெல்லாம் வற்புறுத்தப் போகிறது!



ஞானி டால்ஸ்டாயின் தாயகமும் ரஷ்யாதான்

லெனின் காலமான உடனே, அதாவது 1924-ஆம் ௵ அவருடைய இரு கைகள் போன்ற ஸ்டாலினுக்கும் டிராட்ஸ்கீக்குமே தகரார் வந்தது. சொந்தப் பொறாமை ஒரு காரணமாய் இருக்கலாம். ஆனால், கொள்கை மாறுபாடும் மிக முக்கியமானதாகும். ஆனால், அது அற்ப விஷயங்களைப் பற்றியதல்ல. சாசுவதமான உலகப்புரட்சி வேண்டுமென்றார் டிராட்ஸ்கீ. முதலில் ரஷ்யாவிலே அபேதவாதத்தை வெற்றிகரமாக்குவோம் என்றார் ஸ்டாலின். அது சாத்தியமே அல்ல என்றார் டிராட்ஸ்கீ. வெளியெல்லாம் முதலாளி ஆதிக்கம் நடக்கையில் ஒரே ஒரு நாட்டில் அபேதவாதம் வெற்றி பெறாது என்றார் ட்ராட்ஸ்கீ. இருவருக்கும் வேற்றுமை முற்றியது. ட்ராட்ஸ்கீ நாட்டை விட்டே வெளியேற வேண்டியதாயிற்று. அவருடைய அரசியல் எதிரிகளின் தொல்லை காரணமாக நாடு நாடாய் அவர் ஓடவேண்டிய தாயிற்று. கடைசியிலே 1940-ஆம் ௵ ஆகஸ்டு மாதம் மெக்ஸிகோவில் ஒரு பிரஞ்சு யூதன் கள்ளத்தனமாய் வஞ்சனையாய் நம்பிக்கைத் துரோகமாய் அவரைக் கொன்றான். அது என்ன ராஜீயக் கொலையா? அன்றி வேறா? அது மட்டில் இன்றுவரை ஒரு பெரிய மர்மமாகவே யிருக்கிறது.



ட்ராட்ஸ்கி

அது எவ்வாறாயினும், ட்ராட்ஸ்கீ நினைத்ததற்கு மாறாக, ரஷ்யாவிலே ஸ்டாலின் பெரும் வெற்றி பெற்றார் என்றே சொல்லவேண்டும். கைத் தொழில், கல்வி, கலை முதலிய பல துறைகளிலும் பிரமாதமான முன்னேற்றம் ஸோவியத் யூனியனில் எற்பட்டுள்ளது.

1917-ஆம் வருஷத்துக்கு முன் ஜார் ஆட்சியில், ரஷ்ய ஜனங்களில் சுமார் நூற்றுக்கு எண்பது பேர் படிப்பில்லாப் பாமரர்களாய் இருந்தார்கள். இப்பொழுதோ நூற்றுக்கு 80 பேர் படித்தவர்கள். நகரங்களில் ஸகிண்டரி கலாசாலைப் படிப்பு வரையிலும் கிராமங்களில் ஆறு ஏழாம் வகுப்பு வரையிலும் கட்டாயக் கல்வி முறை கைக்கொள்ளப்பட்டிருக்கிறது. கல்விப் பயிற்சி எல்லாருக்கும் இலவசமாகவே அளிக்கப்படுகிறது. தவிர, கல்லூரி மாணவர்களில் மிக ஏராளமான பேருக்கு உதவிச் சம்பளமும் இருப்பிடமும் இனமாய் அளிக்கப்படுகின்றன. வயது வந்தவர்களுக்குக் கல்வி போதிக்கும் வேலையும் மிக முக்கியமாய்க் கவனிக்கப்படுகிறது.

ஜாதி நிற உயர்வு தாழ்வுகளையெல்லாம் களைந்தெறிய வேண்டுமென்று, ஸோவியத் கல்வி போதிக்கிறது. நிலமும் கைத் தொழில்களும் பொது உடைமை என்று கற்பிக்கப்படுகிறது. ஒருவனை ஒருவன் சுரண்டுவதை, ஸோவியத் கல்வி கண்டிக்கிறது. ஸோவியத் யூனியனில், உபாத்தியாயர்களிடம் பிரமாதமான மதிப்பு செலுத்தப்படுகிறது. **ஸுப்ரீம் சோவியத்** என்ற அகில ஸோவியத் பார்லி

மெண்டுக்கு 19 உபாத்தியாயர்களும், ஸோவியத் குடியரசுச் சபைகள் பலவற்றுக்கு ஏராளமான உபாத்தியாயர்களும் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். இதைக் கொண்டே, ஸோவியத் உபாத்தியாயர்களின் செல்வாக்கை ஒருவாறு நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

ஸோவியத் ரஷ்யாவில் குடும்ப வாழ்க்கை அழிந்துவிட்டதாமே என்றும் வேறு பல புரளிகளும் கிளம்பியது தவறு. அங்கே ஆணும் பெண்ணும் சகல விதத்திலும் சமம் என்ற கொள்கை அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. எஞ்சினீர்கள், டாக்டர்கள், விமானிகள், விஞ்ஞான ஆராய்ச்சிக்காரர்கள், கலைஞர்கள், கைத்தொழில் அதிகாரிகள், சர்க்கார் நிர்வாகிகள் இப்படிப் பலதரப்பட்ட உத்தியோகங்களிலும் ஏராளமான பெண்கள் இருக்கிறார்கள். ராணுவத்தில்கூட எஞ்சினீரிங், வைத்தியம், விமானம் முதலிய படைகளில் பெண்கள் சேர்ந்திருக்கிறார்கள். துப்பாக்கி சுடுவதில் உலகப் போட்டிகளில் முதல் தரமாய் வென்ற ஸோவியத் பெண்களும் உண்டு. இப்படிப் பல தொழில்களிலும் ஈடுபட ஸோவியத் பெண்களுக்குச் சுதந்தரம் உண்டென்றாலும், ஒரு புருஷனை மணந்து குடித்தனம் நடத்த விரும்பும் பெண்களுக்கு எவ்விதத் தடையுமில்லை. ஆனால், விவாக விலக்கு வெகு சுலபம். தம்பதிகள் இருவரில் ஒருவர் மனுச் செய்துகொண்டாலே போதும்; விவாக ரத்து உத்திரவாகி விடும். என்றாலும், விவாக விலக்கு அடிக்கடி செய்துகொள்ளும் வழக்கத்துக்கு ஆதரவு தர, ஸோவியத் சர்க்கார் விரும்பவில்லை. ஆகையால், முதல் தடவை விவாக விலக்குச் செய்துகொள்ள 50 ரூபிள் செலவாகும்; இரண்டாந் தடவையோ 150 ரூபிள்; மூன்றாந்தடவை 300 ரூபிள். விவாக விலக்குச் செலவு இப்படி உயர்ந்து கொண்டே போவதால், நினைத்தபடி யெல்லாம் விவாகமும் விவாக விலக்குமே வேலையாய் யாருமே திரிய முடியாது.

கைத் தொழிலிலே ஸோவியத் யூனியன் பிரம்மாண்டமாய் வளர்ந்திருக்கிறது. தேகத்திலே சக்தியுடைய அத்தனை பேரும் ஜீவனத்துக்கு உழைத்தாக வேண்டும் என்பது ஸோவியத் யூனியன் விதித்திருக்கும் கட்டாயக் கடமையாகும். குழந்தைகள், மாணவர்கள், போர் வீரர்கள், குடித்தனப் பெண்கள், கிழவர்கள் ஆகியவர் மட்டில் அதற்கு விலக்காவர். சோம்பர் இன்றி இவ்வாறு எல்லாருமே உழைப்பதால், கைத் தொழில்கள் செழித்து வளர்ந்திருக்கின்றன. அதனால், பின் வரும் முக்கியமான பொருள்களின் உற்பத்தியில், உலகத்திலேயே பின்வரும் ஸ்தானங்களை ஸோவியத் யூனியன் வகிக்கிறது:

| பொருள் | இத்தனையாவது ஸ்தானம் |
|---|---|
| தானியம் | 1 |
| விவசாயக் கருவிகள் | 1 |
| பீட் சர்க்கரை | 1 |
| டிராக்டர் கலப்பைகள் | 1 |
| தங்கம் | 2 |
| இரும்புக் கனி | 2 |
| இயந்திரங்கள் | 2 |
| சாமான் தூக்கும் கார்கள் | 2 |
| மின்சாரம் | 3 |
| எஃகு | 3 |
| நிலக்கரி | 4 |

இதே மாதிரியே, ஸினிமா, சங்கீதம், கலை, பொதுஜன சுகாதாரம், வைத்தியம், பத்திரிகைகள், புத்தகங்கள் முதலிய எல்லாத்துறைகளிலுமே வேறெந்த முற்போக்கான நாகரிக நாட்டுடனும் வெற்றிகரமாய்ப் போட்டியிடத் தக்கவாறு ஸோவியத் யூனியன் அபிவிருத்தியடைந்திருக்கிறது.

இவ்வாறெல்லா மிருந்தும், பிற நாடுகளுக்கெல்லாம் ஸோவியத் யூனியனிடம் ஒருவிதப் பயம் இருந்து வந்தது. உலகப் புரட்சி செய்யவும் பிறநாடுகளுடனெல்லாம் போரிடவுமே அது சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறது என்ற பயம். ஆனால், பிறரை வலிந்து போருக்கிழுப்பது ஸோவியத்தின் கொள்கையல்ல, கொள்கையாக இருக்கவும்முடியாது என்பதை இப்போதுதான் நேசநாடுகள் எல்லாம் உணர்ந்து வருகின்றன. இந்த யுத்தம் முடிந்த பிறகு, சமாதானத் திட்டம் ஒன்றில் ஈடுபட்டு, 20-வருஷம் வரையில் ஒத்துழைக்க, அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா மூன்றும் சமீபத்திலே ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது உலகத்திலேயே ஒரு புதிய நம்பிக்கையை உண்டாக்கியிருக்கிறது.

யுத்தத்தால், ஸோவியத்திலுள்ள யாரும் லாபமடைய முடியாது. ஆயுத உற்பத்தி போன்ற பெருங் கைத்தொழில்களை நடத்தி லாபம் சம்பாதிக்கும் முதலாளி யாரும் அங்கே கிடையாது. ஏனெனில், சகல விதமான கைத்தொழில்களும் ஸோவியத் சர்க்கார் வசமே உள்ளது. வியாபார மார்க்கட் அல்லது காலனி பிடிக்க வேண்டுமென்ற இச்சையும் அங்கே எவருக்கும் உண்டாகக் காரணமில்லை. ஜாதீய, நிறப் பகைமைகளோ துளியும் அந்த நாட்டில் கிடையாது. ஆகையால், சமாதானமாய் வாழ்வதிலேதான் ரஷ்யருக்கு ஆசை. இந்த ரஷ்யாவை அரக்க பலம் கொண்டு முறியடித்து விழுங்கப் பார்க்கிறது ஜெர்மனி. என்ன அநியாயம்!

## புரோகிதர் 'பெருமை'!

ஸமாதியிலிருந்த காலத்தில் கௌரங்க ஸ்வாமி ஒரு சமயம் ஸமுத்திரத்தில் விழுந்துவிட்டார். செம்படவர்கள் அவரை வலை போட்டு இழுத்துக் கரையேற்றினார்கள். வலையின் மூலமாக, கௌரங்க ஸ்வாமியின் சரீர சம்பந்தத்தை இந்தச் செம்படவர்களும் பெற்றார்களாதலால், இவர்களுக்கும் ஒருவிதமான பரவசம் உண்டாயிற்று. ஆகவே, இவர்கள் வேலைகளை அப்பால் போட்டுவிட்டு, ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டு, உன்மத்தர்களைப்போல அங்கு மிங்கும் ஓடத்தலைப்பட்டார்கள். இவர்களைக் குணப்படுத்த முயன்ற பந்துவர்க்கத்தார், தங்களுடைய முயற்சிகள் பயனற்றுப் போனதைக் கண்டு, கடைசியில் கௌரங்க ஸ்வாமியிடம் வந்து, தங்கள் துக்கத்தைச் சொல்லிக்கொண்டார்கள். ''ஒரு புரோகிதரின் வீட்டிலிருந்து கொஞ்சம் சாதம் கொணர்ந்து இவர்களுடைய வாயில் போடுங்கள்; இந்தப் பரவச நிலை போய்விடும்'' என்று கௌரங்க ஸ்வாமி உபாயம் சொல்லித்தந்தார். பந்துவர்க்கத்தார் அப்படியே செய்ய, செம்படவர்களுக்கிருந்த பக்தி பரவசம் நீங்கிப் போய்விட்டது!

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்.

# துரோகி

ரெஜினல்டு எ. ரெயினல்ட்ஸ்

அதுவும் ஒரு யுத்தந்தான். காந்தி மாதிரி ஒரு மகான், அந்த யுத்தத்தை நிறுத்தி விடுகிறார். ஆனால், துளி ரத்தம் சிந்த வில்லை; துளிப் பொருள்நாசம் இல்லை. எனினும், அவரே தியாகமாகிறார். இந்த அற்புதக் கதையைப் பல வருஷத்துக்கு முன் சிக்காகோ 'யூனிட்டி' பத்திரிகையில் எழுதிய ரெயினல்ட்ஸ் உண்மையிலே ஒரு காந்தி பக்தருமாவார்.

ஓர் அழகான மலை இருந்தது. அதற்கு இரண்டு பக்கத்திலும் இரண்டு பெரிய ராஜ்யங்கள்; மலை மேலே ஒரு நகரம். இந்த நகரத்தைச் சுற்றிப் பெரிய மதில் சுவர்களும் அகழ்களும் உண்டு; நாலு வாசலிலும் வானளாவிய கோபுரங்களும் இருந்தன. உயரமான ஒரு பாறைமேல் பலமான கோட்டை ஒன்றும் கட்டப்பட்டிருந்தது. இந்தக் கோட்டை எத்தனையோ முற்றுகைகளைப் பார்த்திருக்கிறது.

ஆனால், இப்போது இந்த நகரத்தில் ஒரு ஞானி தோன்றினார். அவர் நீதிமான்; தயாளு; கல்விமான்; புத்திசாலி; எவருக்கும் அஞ்சாதவர். இதனால், நகர ஜனங்களுக்கு அவரிடம் மிகுந்த நம்பிக்கை உண்டாயிற்று. அவருக்குச் சர்க்கார் கொடுத்த மாஜிஸ்திரேட் உத்தியோகம் கிடையாது; என்றாலும், அநேக விவகாரங்கள் அவரிடம் பஞ்சாயத்துக்கு வந்ததுண்டு. அநேகர் தங்கள் ரகசியங்களையெல்லாம், தாங்கள் அந்தரங்கத்தில் செய்துவிட்ட பாவங்களையெல்லாம்கூட, அவரிடம் வந்து சொல்லி, மனங்கசிந்து அழுதிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் சமாதானப் படுத்தி, நல்வழிக்கு மார்க்கம் சொல்லிக் கொடுத்திருக்கிறார். நகரத்துக்கே பெரிய நெருக்கடியாவது ஆபத்தாவது வந்தால், ஊர்ப் பெரியவர்கள் அவரிடம் தான் வந்து யோசனை கேட்பார்கள். இப்படிப் பல வருஷங்கள் கழிந்தன.

ஒரு சமயம் மலைக்கு இரு பக்கத்திலும் இருந்த ராஜ்யங்களில் செல்வம் அதிகமாய்ப் போய் விட்டது; ஜனங்கள் ரொம்பச் செழித்து விட்டார்கள். இதனால் தினவெடுத்த இரண்டு ராஜ்யங்களும், ஒன்றோடொன்று பெரிய பெரிய யுத்தங்கள் நடத்தின. இவற்றின் பயனாய்ப் பஞ்சமும் நோயும் தோன்றின. ஒரு வேளை இந்த ராஜ்யத்துக்கு ஜயம் கிடைக்கும்; இன்னொரு தடவை அந்த ராஜ்யம்வெற்றிவாகை சூடும். யார் தோற்றாலும் யார் ஜயித்தாலும் சரி; எப்போதும் அந்தந்த ராஜ்யத்தின் ராஜாவையும் சேனாதிபதியையும் அந்தந்த ராஜ்யத்து ஜனங்கள் பிரமாதமாய்க் கொண்டாடியே தீருவார்கள்.

இந்த விவகாரங்களிலெல்லாம், மலை மேலிருந்த நகரம் கலந்து கொள்ளவே யில்லை. ஏனென்றால், மலை ஜனங்களை அந்த ஞானி தடுத்து வைத்திருந்தார்.

ஒரு நாள் நகரத்தில் எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்து விட்டது. இதனால், நகர் முழுதும் அல்லோல கல்லோலப்பட்டது. பெரிய ராஜாக்களில் ஒருவன் இந்த நகரத்தின் மீது படை யெடுத்து வந்து விட்டான். சில மைல் தூரத்தில் சேனையோடு அவன் கூடாரம் அடித்திருந்தான்.

இந்த நகரத்தின் மேல் அவனுக்கு என்ன கோபம்? ஒரு நாள் சாயங்காலம் அவனது ராஜ்யத்தைச் சேர்ந்த சில சிப்பாய்கள் உல்லாசமாக இந்த மலைப் பக்கம் வந்தார்களாம். இந்த மலை ஜனங்களில் சில பேரோடு, மதுவைக் குடித்துக் கேளிக்கையாக இருந்தார்களாம். அப்போது, ஒரு சண்டை ஏற்பட்டதாம். இந்த அடிதடியில் நாலு சிப்பாய்கள் மடிந்து விட்டார்களாம். தன் சிப்பாய்கள் இப்படிச் செத்துப் போனதைக் காலையில் கேள்விப் பட்ட ராஜா, "அற்ப மலைவாசிகளுக்கு இவ்வளவு கர்வமா? இதோ அரை நொடியில் அவர்களை அழித்து விடுகிறேன்" என்று, யுத்த சன்னத்தனாய் வந்து விட்டான்.

மலை ஜனங்கள் பீதி யடைந்து, ஒரே கூட்டமாய் ஞானியிடம் வந்து சேர்ந்தார்கள்.

அருள் ஒழுகும் கண்ணோடு தலை நிமிர்ந்து, ஞானி சொல்லலானார்:— "நான் நகரத்தைக் காப்பாற்றிவிட முடியும்; ஆனால், என்னைத்தான் நான் காப்பாற்றிக் கொள்ள முடியாது. நான் சொல்லுகிறபடி நீங்கள் கேட்க வேண்டும்; கேள்வி கேட்கக் கூடாது."

ஊர்ப் பெரியவர்களுக்கு மனதில் தென்பு வந்தது. "ஆஹா! அப்படியே செய்கிறோம்" என்றார்கள்.

"உடனே ஓடுங்கள். நகரத்தில் உள்ள அத்தனை சாராயத்தையும் சகல ஆயுதங்களையும், இங்கே கொண்டு வாருங்கள்" என்றார் ஞானி. அவ்விதமே, வில், வாள், ஈட்டி, அம்பு முதலிய அஸ்திர சஸ்திரங்களையும், கள் சாராயம் முதலிய பான வகைகளையும் கொண்டு வந்தார்கள்.

மறுபடியும் ஞானி சொல்லுகிறார்:— "நீங்கள் ஒருவரும் இங்கே இருக்கக் கூடாது. நம் கோட்டை வாயிற்படிக் கதவுகளையும் தகர்த்து எறிந்துவிட வேண்டும். சீக்கிரம் போங்கள்."

ஜனங்களுக்கு இதெல்லாம் அதிசயமாய் இருந்தது. என்றாலும், ஞானி சொன்னபடி கோட்டை வாயிற்படிகளை யெல்லாம் துவம்சம் செய்து, ராஜ பாட்டையாகத் திறந்துவிட்டார்கள். இப்பொழுது எதிரி சமீபமாக வந்து கொண்டிருக்கிறான், அவனுடைய சேனை வீராவேசத்துடன் வரும் வேகத்தில் கிளம்பிய புழுதி, ஆகாயமெல்லாம் நிறைந்து, இருள் மயமாய்க் கவிந்து விட்டது. இதைப் பார்த்துப் பீதியுடன் நின்று கொண்டிருந்த ஜனங்கள் இருக்குமிடத்துக்கு, ஞானி வந்து சேர்ந்தார்.

"இனி என்ன செய்ய வேண்டும்?" என்று ஜனங்கள் கேட்டார்கள்.

"ஒன்றுமில்லை" என்றார் ஞானி.

ஜனங்களுக்குப் பயம் பிடித்தது; சந்தேகம் ஜனித்தது. "ஏமாற்றாதே; சொல்லு நிஜத்தை" என்று ஞானியைப்

பார்த்து, எல்லாரும் ஏகோபித்துக் கத்தினார்கள்.

மதுவும் ஆயுதமும் குவிந்த கோட்டையை, ஞானி மௌன மாகச் சுட்டிக் காட்டினார். ஜனங் கள் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள். அங்கு வானளாவிய அக்கினி, ஜ்வாலை விட்டு எரிவதைக் கண்டார்கள். ஜனங்களின் தேகமெல்லாம் பயத்தால் வெட வெடத்தது. பயம் சற்றுத் தணிந்ததும், ஆத்திரம் பொங்கிற்று. ஆளுக் கொரு தடியும் கல்லும் பொறுக்கிக் கொண்டு வந்து, "துரோகி! துரோகி!" என்று கூக்குரல் போட்டு, ஞானியை நையப் புடைத்துக் கொன்று விட்டார்கள்.

இதே சமயத்தில் எதிரி ராஜா கோட்டை வாசலுக்கு வந்து விட்டான். வாசல் விசாலமாய்த் திறந்திருப்பதைக் கண்டு ஆச்சரிய மடைந்தான். உள்ளே நுழைந்தான். எதிர்ப்பவர் எவரையும் காணோம். "மலை வாசிகள் எங்கேயாவது பதுங்கியிருந்து திடீரென்று தாக்குவார்களோ, அல்லது இதெல்லாம் இந்திர ஜாலமா?" என்று பலவாறு எண்ணினான். ஆனால், அப்படி ஒன்றுமில்லை என்று கடைசியில் தெரிந்து கொண்டான்.

எதிரி ராஜா, மலை வாசிகளில் ஊர்ப் பெரியவர்களை வரவழைத்தான். "ஏன் உங்கள் சிப்பாய்கள் எங்களை எதிர்க்கவில்லை? இதெல்லாம் என்ன?" என்று கேட்டான்.

ஒரு பெரியவர் முன்னுக்கு வந்தார். அவர் வருத்தத்தோடு சொல்லலானார்: "மகராஜா! எங்களை ஒரு துரோகி மோசம் செய்து விட்டான். நாங்கள் நம்பி மோசம் போனோம்."

இவ்வாறு ஆரம்பித்து, ஞானியின் கதையையும், கடைசியில் அவரைத் தாங்கள் கொன்று விட்டதையும் சாங்கோபாங்கமாகச் சொல்லி முடித்தார். கடைசியில், அந்த ஞானியின் எலும்புகளையும் கொண்டு வந்து வைத்து, "இந்தத் துரோகியின் எலும்புகளை வீர மன்னரான தாங்கள் தான் தங்கள் ஜயத்துக்கு அடையாளமாகக் கொண்டு போக வேண்டும்" என்று மலை ஜனங்கள் சொன்னார்கள்.

இதைக் கேட்ட ராஜா திடீரென்று ஒரு யோசனை செய்தான். தன் சிப்பாய்களையெல்லாம் கூப்பிட்டு, அந்த ஞானியின் எலும்புகளைக் காட்டினான். "இந்த மலையில் அகப்பட்ட பொக்கிஷம் இது. இங்கே திரண்டிருந்த ஞானத்தின் மிச்சம் இது தான். இதைப் பத்திரமாய், மரியாதையாய் எடுத்துக் கொண்டு போவோம். இந்த மூட ஜனங்களிடம் இது இருப்பது தகாது" என்றான் ராஜா. அந்த எலும்புகளை எடுத்துக் கொண்டு, ராஜாவும் சேனையும் தங்கள் தேசத்துக்குப் பயணமாகி விட்டார்கள்.

ஞானியின் எலும்புகளைத் தன்னுடைய சொந்தத் தேசத்தில் புதைத்து வைத்து, அதன் மேல் அந்த ராஜா ஒரு கோபுரம் கட்டினான். மலைக்குப் பக்கத்திலிருந்த மற்ற ராஜாவோடு அவன் சமாதானம் செய்து கொண்டான். தன் வாழ்நாளின் பாக்கிக் காலத்தை, ஈசுவரத் தியானத்திலும் சன்மார்க்கத்திலும் கழித்தான். "பல ராஜ்யங்களை வென்று சக்கரவர்த்தியாக வாழ்வதைவிட, அந்த ஞானியைப் போல் வாழ்வதே மேல்" என்று அடிக்கடி அவன் சொல்லுவான்.

ஆனால், மலை ஜனங்களோ, பல மாதங்கள் கஷ்டப்பட்டு, கோட்டை கொத்தளங்களைப் புதிதாய்க் கட்டிக் கொண்டார்கள். பக்கத்து நாடுகளிலிருந்து சாராய வகைகளை வாங்கி நிறைத்துக் கொண்டார்கள். ஆயுதங்களும் சேகரித்தார்கள். "இந்தக் கஷ்டமெல்லாம் ஒரு பித்துக்கொள்ளியின் பேச்சைக் கேட்டதால்தான் விளைந்தது" என்றார்கள் சிலர். "முன்னதாகவே இந்தத் துரோகி, அந்த ராஜாவோடு ஏதோ உடன்படிக்கை செய்திருக்கிறான் போல் இருக்கிறது. இல்லாவிட்டால், இவனுக்கு அவன் கோயில் கட்டுவானா?" என்றார்கள் வேறு சிலர்.

என்றாலும், சில வருஷங்களில் மலை வாசிகளும் மிகுந்த படைப் பலம் உடையவர்களானார்கள். அப்பொழுது, அந்தப் பெரிய ராஜாவின் சந்ததியார் ஆட்சி புரிந்து கொண்டிருந்தார்கள். அவர்களோடு இவர்கள் யுத்தத்துக்குப் புறப்பட்டார்கள். எதற்காக? அந்த ஞானியின் கோயிலைக் கைவசப்படுத்திக் கொள்ளுவதற்காகத்தான். "அதை நாம் கைவசப் படுத்திக் கொள்ளாவிட்டால், நம் தேசத்துப் பெரிய மனிதரை நாம் மதிக்கவில்லை என்ற அபகீர்த்தி வந்து விடும். நாம் என்ன மூடர்கள் என்று பெயர் எடுக்கலாமா?" என்று காரணம் சொன்னார்கள்.

மேலும், மலைவாசிகள் வருஷா வருஷம் அந்த ஞானிக்காகப் பண்டிகையும் கொண்டாடினார்கள். எப்படிக் கொண்டாடுவார்கள் தெரியுமா? ராணுவ வீரர்களை அணிவகுத்து ஊர்வலம் வருவார்கள்; நிறைய நிறையச் சாராயம் குடிப்பார்கள். "இதென்ன பக்தி! ஞானி இப்படியா சொன்னார்?" என்று யாராவது சந்தேகமாய்க் கேட்டால், கேட்டவனின் மண்டையை உடைத்து, தங்களுடைய பரம பக்தியை நிரூபணம் செய்து விடுவார்கள்!

---

## கடவுளுக்கு வேலை இல்லை!

★ ஒரு வண்ணான், ஒரு பக்தனை வெகு கடுமையாக அடிக்கும் போது, பக்தன் "நாராயணா! நாராயணா!" என்று மட்டும் சொல்லிக்கொண் டிருந்தான். அப்போது, வைகுண்டத்தில் லக்ஷ்மி ஸமேதராய் வீற்றிருந்த ஸ்ரீமந்நாராயணனுடைய காதுகளில் இந்தச் சப்தம் விழுந்தது. அவர் எழுந்திருந்து பக்தனைக் காப்பாற்றுவதற்காகப் புறப்பட்டு வந்தார். ஆனால், அவர் இரண்டு மூன்று தப்படி சென்றதும், திரும்பிவந்து ஆஸனத்தில் அமர்ந்தார். இதைக் கண்ட லக்ஷ்மிதேவி, "இவ்வளவு சீக்கிரத்தில் திரும்பிவரக் காரணம் என்ன?" என்று கேட்டாள். "நான் போக வேண்டிய அவசியம் இராது போயிற்று. பக்தனும் வண்ணானாகிவிட்டான். அவன் தானே தன்னைக் காப்பாற்றிக்கொள்ள நினைத்து, தன்னை அடித்தவனைத் திருப்பி அடிக்கத் தொடங்கி யிருக்கிறான். ஆதலால், அங்கே நான் போக வேண்டிய அவசியம் இல்லை" என்று பதில் சொன்னார். முற்றிலும் சரணாகதி செய்தாலொழிய, ஈசுவரன் உன்னைக் காப்பாற்ற மாட்டான். ★

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்.



# அச்சு வேலைகள்

எல்லா வகையான அச்சு வேலைகளும் நேர்த்தியாகச் செய்து கொடுப்பதில் பெயர்பெற்ற

## சக்தி பிரஸ் லிமிடெட்

காரைக்குடியில் நிறுவப்பெற்றிருக்கிறது

## சக்தி பிரஸ் லிமிடெட்

செஞ்சை :: காரைக்குடி

# ஆர்ஸ்

# ரிலயன்ஸ் வாட்சுகள்

வியர்வை, தூசி இவை உள்ளே புகாமல் தடுக்க வசதியுடையவை

புதிய ஸ்டாக்குகள் வந்துகொண்டிருக்கின்றன

## சரியான 15 ஜுவல் லீவர் மூவ்மெண்ட் உடையவை



Q 45 ரோல்ட்கோல்ட் கேஸ்
தூய வெள்ளை எஃகுனாலான
முதுகுடையது
ரூ. 50/-



Q 42 ரோல்ட்கோல்ட் கேஸ்
தூய வெள்ளை எஃகுனாலான
முதுகுடையது
ரூ. 45/-



Q 43 ரோல்ட்கோல்ட் கேஸ்
தூய வெள்ளை எஃகுனாலான
முதுகுடையது
ரூ. 50/-

இன்று இந்தியாவில் இவைதான் நிகரற்ற மதிப்புடையவை

## பி. ஆர். & ஸன்ஸ், லிட்.

மதராஸ் & உதகமண்டலம்

தந்தி : "ராஜா"

டெலிபோன் : நெ. 81

★ நம்பிக்கையே மன நிம்மதி

★ நாணயமே எங்கள் நோக்கம்

கோயமுத்தூரில்

கியாரண்டியுள்ள பவுன் நகைகள், வைர நகைகள், கல் நகைகள், சுத்தமான வெள்ளிப் பாத்திரங்களுக்கும் நாணயமும் நம்பிக்கையும் மிகுந்த இடம்



## P. A. ராஜு செட்டியார் அண்டு பிரதர்

ஆபரண மாளிகைக்கு

தாங்கள் அவசியம் குடும்பசகிதமாய்
ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

கல்யாண காலங்களுக்கும், விசேஷ காலங்களுக்கும், ஏராளமான ஆபரணங்கள் தயாரில் இருக்கின்றன. தவிர ஆபரணங்களைத் தேர்ச்சி பெற்ற வேலைக்காரர்களைக்கொண்டு தற்காலத்திற்கு ஏற்ற நவீனமுறையில் திருப்திகரமாக தயார் செய்து குறித்த காலத்தில் கொடுக்கப்படும்

முக்கிய கவனிப்பு :—

"P. A. R." சீல் போட்ட நகைகளை பார்த்து வாங்குங்கள்

TELEPHONE : NO. 81

TELEGRAMS : RAJA COIMBATORE

# P. A. RAJU CHETTIAR & BRO.

JEWELLERS & DIAMOND MERCHANTS

BIG BAZAAR STREET

COIMBATORE

ஆசிரியர் :

வி. ஸ. காண்டேகர்

மொழிபெயர்த்தவர் :

வெ. ராம ராவ்



(சென்ற மாதத் தொடர்ச்சி)

அந்த ஸந்தர்ப்பங்களில் ரேகாவை இறுகத் தழுவி, என்ன காரணத்தினுல் அவள் இப்படிப்பட்ட விபரீத நிலையில் அவதிப்பட்டு வருகிருள் என்பதை அறிந்து அவளுக்குத் தன்னுலான உதவியைச் செய்யவேண்டும் என்ற ஆவேசம் சீலாவுக்கு உண்டாயிற்று. ஆனல், உடனேயே அவளுடைய தன் மதிப்பு, குறுக்கே வந்து அவளைப் பின்னுக்கிழுத்தது. இந்த நிலையில், ஒரு நாள் காஞ்சனனிடமிருந்து தனக்கு வந்த கடிதமொன்றை, தான் கிழித்துக் குப்பைக் காகிதக் கூடையில் போட்டதையே அவள் மறந்து விட்டாள்; அப்படி இருக்க, அந்தக் கிழிந்த கடிதத் துண்டுகளை ரேகை எடுத்துச் சென்று, அவற்றை ஒழுங்கு படுத்தி, அவற்றில் எழுதியிருந்த விஷயம் இன்னதென்பதை அறியப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தாள் என்பது சீலாவுக்கு எப்படித் தெரியும்?

ரேகை, சீலா இவர்களுடைய அறையில் உண்டாகும் ஆரவாரங்கள், தமாஷ், கேலி முதலியவை ஒன்றுமே இன்றி, சில நாட்களாக அங்கே ஒருவிதமான அமைதி நிலவி வருவதைக் கண்டு, மற்ற அறையில் இருந்த மாணவிகளுக்கெல்லாம் ஆச்சரியம் ஏற்பட்டது. இருந்தாலும் இது பரீட்சைப் புயலுக்கு முன் ஏற்படும் படிப்பு அமைதி என்பதாக, அவர்கள் தங்களுக்குத் தாங்களே சமாதானம் சொல்லிக் கொண்டார்கள்.

ஆனல், பரீட்சைப் புயலைப்பற்றிய பீதியே சீலாவுக்கு ஏற்படவில்லை. எனினும், ரேகையின் மனதில் ஆர்ப்பரித்துக்கொண் டிருந்த பெரும் புயலைப்பற்றி மாத்திரம் அவளால் ஒன்றும் ஊகிக்க முடியவில்லை. ரேகையின் போக்கு நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே இருந்தது. அவள் அதிகமாக இப்பொழுதெல்லாம் பேசுவதே கிடையாது. அப்படி ஒன்றிரண்டு முறை பேசுவதுங் கூட, விடுகதைத் தோரணையில் தான் இருக்கும். ஒரு முறை கையில் புஸ்தகத்தைத் திறந்து வைத்துக் கொண்டு அறையின் கூரையை அர்த்தமில்லாத வெற்று நோக்குடன் பார்த்துக் கொண் டிருந்த அவளை நோக்கி, சீலா கேட்டாள் :

''பரீட்சை நெருங்கிக் கொண் டிருக்கேடி, ரேகா!''

''உன் பரீட்சை என் பரீட்சை அல்ல''—இந்த மறுமொழியைக் கூறிவிட்டு, ரேகை தன் கண்களை மூடிக்கொண்டாள்.

நல்ல காலமாக இந்தப் பெரும் புயல் அதிக நாள் நீடிக்காமல், அதன் முடிவு எதிர்பாராதவாறு சீக்கிரமாகவே சம்பவித்தது. திடீரென்று ஒரு நாள் அவளுடைய தமையன் தோன்றி, அவளது விவாகம் வெகு சீக்கிரத்திலேயே காஞ்சனனுடன் நடக்கப் போகிறது என்ற சந்தோஷச் செய்தியை வெளியிட்டான். ஒரு நிமிஷத்தில் விஷயம் காட்டுத் தீயைப்போலப் பரவவே, ஹாஸ்டல் மாணவிகள் அனைவரும் கூடிச் சூழ்ந்து ரேகாவை இவ்வாறு கேலி செய்யலானர்கள்: ''பின்னே என்ன, கூடிய சீக்கிரம் சினிமா நட்சத்திரம் ஆகப் போகிருய் நீ.'' மனதுக் குகந்த கேலி எவ்வளவு இங்கிதமாய் இருக்கக்கூடும் என்பது, அன்று தான் முதன் முதலாக அனுபவ பூர்வமாக ரேகைக்குத் தெரிய வந்தது.

கல்யாணத்தின்போது பரிசு அளிக்கையில், ரேகைக்குப் பிரியமான சில வஸ்துக்களுடன் ஒரு புஸ்தகத்தையும் சீலா அளித்தாள்.

''அல்ஜீப்ரா அல்லவே'' என்று ரேகை குறும்பாகக் கேட்டாள்.

சீலா ஒன்றும் சொல்லாமல் சிரித்தாள்.

புஸ்தகத்தின் மேலட்டையை ரேகை குதூகலத்துடன் பார்த்தாள். பிரஸித்திபெற்ற ஒரு கதாசிரியனல் சமீபத்தில் வெளியிடப்பட்டதொரு புது நவீனமே அது. அதன் மேல் அட்டையில் கண்களைப் பறிக்கும் முறையில் பெரிய எழுத்துக்களில் பள பள வென்று ஜொலிக்கும் சொர்ண நிறத்தில்

அதன் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது : அதாவது "ஸுவாஸ்" என்பதுதான்!

ரேகையின் கண்களுக்கு முன்னால் ஒரு பாரிஜாத மரமும், 'பாக்கிய சக்கிரம்' என்னும் சினிமாப் படமும் உடனே வந்து நின்றன.

* *

இன்பமான நாட்கள் எப்படி மானைப்போல வெகு துரிதமாக ஓடி மறைகின்றன! திடீரென்று சில இரவுகளில் "பரீட்சை சமீபிக்கப் போகிறதே, நாம் சரியாகப் படிக்கவில்லையே" என்ற பயத்துடன் கலவரப்பட்டு எழுந்திருக்கும் ரேகை, தான் சீக்கிரத்திலேயே ஒரு தாயாகப் போவதை நினைந்து தனக்குத் தானே நாணமுற்றவளாய்த் தலையணையில் தன் முகத்தைப் புதைப்பாள். நாணமுற்ற இந்த நிலையில், கடந்த வருஷத்து இன்பக் காட்சிகள் சில அவளது கண் முன்னால் சிரித்தபடியே தோன்றி மறையும். மேல்நாட்டு நாகரிக தோரணையில், விவாகமானதும் மகாபலீசுவரத்துக்கு அவர்கள் உல்லாச யாத்திரை சென்றிருந்தபொழுது, அவ்வூரைச் சுற்றியிருந்த மனோகரமான மலைக் காட்சிகளும், நிர்மலமான நீல வானின் பின் தளத்தில் மினுக்கிக் கொண்டிருந்த அழகிய நட்சத்திரங்களும், இன்னும் அவளுடைய கண்களின் முன் தோன்றி மறைந்தன. அதன் பிறகு, அவன் நடித்த இரண்டாவது படம் ஜூன் மாதத்தில் வெளியாயிற்றே அதைப்பற்றிய ஞாபகம் வந்து, அவளுக்கு அதிக மகிழ்ச்சியை உண்டாக்கிற்று. ஆனால், அந்தப் படத்தில் அவளுக்கு வெறுப்பைத் தந்த ஒரே ஒரு விஷயமும் இருந்தது. அதில் காஞ்சனனது மணிக்கட்டின் மேல் பிரகாசித்துக் கொண்டிருந்த சீலாவின் கைக்கடிகாரம்தான் அது.

பிறகு, செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் மாலையில் அவர்கள் உலாவப் போகும்போது அநேக முறைகள் சீலாவைச் சந்தித்தது அவளுடைய நினைவுக்கு வந்தது.

அப்படிச் சந்தித்தபோது, ஒரு சமயம் தான் புதிதாக நடிக்கும் படத்தின் ஷூட்டிங்கை ஒருமுறை வந்து பார்க்கும்படி அவளைக் காஞ்சனன் வற்புறுத்தியதும், அதற்குச் சீலா சிரித்துக்கொண்டே கொடுத்த பதிலும் அவளது நினைவில் வந்தன. சீலா சொன்னாள் :

"எங்களுக்கும் ஷூட்டிங்கு நடந்து வருகிறது."

"படத்தின் பெயர்?"

"ஏட்டுச் சுரைக்காய்."

"கதைப் போக்கு?"

"பிரக்ருதி சாஸ்திரம் கதாநாயகன்; ரசாயன சாஸ்திரம் கதாநாயகி. கதாநாயகி சற்குணங்கள் மிக்க அழகிய நங்கை. கதாநாயகனே........."

காஞ்சனன் பலமாய்ச் சிரித்ததால், சீலாவின் கதை வர்ணனை அத்துடன் நின்றது. இருந்தாலும் மேலே தொடர்ந்து தானாகவே அவள் சொன்னாள் :

"மார்ச்சு மாதத்தில் எங்கள் பரீட்சை முடியட்டும்; பிறகு உங்கள் 'ஷூட்டிங்', ரேகாவின் 'குக்கிங்' (சமையல்) இவற்றையெல்லாம் பார்க்க, கோடை விடுமுறையில் சில நாட்கள் உங்களுடன் வந்து தங்குகிறேன்."

காஞ்சனனுடைய பிடிவாதத்தின் மீது பிரசவத்துக்குப் பூனாவிலேயே ரேகை இருக்கும்படி ஏற்பாடுகள் நடந்தன. ரேகையின் விதவை மாமி ஒருத்தி துணைக்கு வரவழைக்கப்பட்டாள். ரேகையின் தேகநிலை ஆறும் மாதத்திலிருந்தே சற்றுச் சரியாக இல்லை என்பதை உத்தேசித்து, அவளுடைய தமையனும் அவளைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று நிர்ப்பந்திக்கவில்லை.

காலா காலத்தில் ரேகைக்குச் சுகப் பிரசவமாகி, ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அவளுடைய உடல் நிலையிலிருந்து அவளுக்கு ஜுரம் ஏற்படும் என்று டாக்டர் பயந்தார்; ஆனால், நல்ல வேளையாக முதல் நாள் உத்தமமாகவே முடிந்தது. மறுநாள் பிரசவ அறைக்குள் காஞ்சனனுடன் சீலா பிரசன்னமானாள். அவளுடைய பரீட்சைகள் முடிந்து, அன்று முதல் சில நாட்கள் அவர்களுடன் கழிப்பதற்காக, அவள் வந்திருந்தாள். "என் மருமகனுக்குப் பெயர் வைக்கும் சடங்கை நான் கிட்ட இருந்து நடத்திவிட்டுப் போகத்தான் வந்திருக்கிறேன்" என்று அவள் சொன்னதைக்கேட்டதும், ரேகை களுக்கென்று சிரித்தாள். அதை ஆமோதிக்கும் தோரணையில் மனப்பூர்வமாகத்தான் அப்படிச் சிரித்தாள். இருந்தாலும் மறுகணம் அறைக்கு வெளியே செல்லும் காஞ்சனன், சீலா ஆகிய அவ்விருவரின் முதுகுப்புறத் தோற்றத்தையும் நோக்கியவாறு, தன்னையறியாமலே, படுக்கையில் படுத்தபடி, அவளது மனம் ஏதோ ஒரு கவலையில் ஆழ்ந்தது. மறுநாள் யாதொரு காரணமுமின்றி, இருந்தாற்போல் இருந்து, அவளுக்கு லேசாகக் காய்ச்சல் அடித்ததைக் கண்டு, டாக்டருக்குக் கொஞ்சம் ஆச்சரியமாகத்தான் இருந்தது. இன்னும் எட்டு நாட்கள் வீட்டில் யாதொரு கட்டுக் காவலுமின்றித் தங்கள் இஷ்டம்போல் சீலாவும் காஞ்சனனும் வசிக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது என்றுநேற்றிரவு முழுவதும் வெகு நேரம் ரேகை சிந்தித்துக் கொண்டிருந்தாள் என்பதையும் அந்தத் தீவிர சிந்தனைதான் இந்தக் காய்ச்சலுக்குக் காரணம் என்பதையும், சாட்சாத் தேவ வைத்தியரான அந்தத் தன்வந்தரியே வந்திருந்தாலும்கூடக் கண்டு பிடித்திருக்க முடியாது.

பதினோராம் நாள் காலையில், தலைக்கு ஜலம் விட்டார்கள். ரேகையும் வீட்டுக்குள்ளே வந்தாள். இருந்தாலும், அவளுடைய தேக ஸ்திதி அவ்வளவு சரியாக இல்லை. காஞ்சனனுடைய படப்பிடிப்பு ஸம்பந்தமாக அவனுக்கு ஸ்டூடியோ வேலையும் மிக மும்முரமாக இருந்தது. இந்தக் காரணங்களை உத்தேசித்து, குழந்தைக்குப் பெயரிடும் சடங்கை ஒத்திவைக்க நேரிட்டது.

இடையில் கடந்துபோன எட்டு நாட்களில் சீலா என்ன செய்து கொண்டிருந்தாள் என்பதை, மெள்ள மாமியினிடத்துக் கேட்டு அறிய ஆரம்பித்தாள் ரேகை. விடியற்காலையில் இருவரும் உலாவப் போவது வழக்கம் என்றும், நினைத்தபொழுது ரேடியோவைத் திருப்பிச் சிரித்து விளையாடுவார்கள் என்றும், ஒருமுறை காஞ்சனன் கொணர்ந்த புஷ்பமாலையை இந்த விதவைப் பெண் தன் தலையில் சூட்டிக்கொண்டு கண்ணாடி முன் நின்று தன் அழகைப் பார்த்து மகிழ்ந்தாள் என்றும், ஒன்றா இரண்டா இந்த மாதிரி நூறு விஷயங்களைப்பற்றி ரேகையின் மாமி

அவளுக்குச் சொன்னாள். காஞ்சனன் ஏமாற்றி விட்டான் என்று ரேகை எண்ணினாள். இன்றோ, நாளையோ கூடிய சீக்கிரம் தன் விஷயத்தில் நம்பிக்கைத் துரோகம் செய்யப் போகிறான் என்றும் நினைத்துவிட்டாள். தன் கணவன் ஒரு பிரசித்திபெற்ற நடிகன் என்ற விஷயத்தில் அவளுக்கு மிகுந்த பெருமை யாகவே இருந்தது. ஆனால், தன்னுடைய இந்தக் கணவனின் நடிப்புத் திறமையே அவளுக்குப் பெரிய ஆபத்தாக முடிந்தது. ஒவ்வொரு புதுப் படத்தின் மூலமாகவும் பேரெழில் வாய்ந்த புதிய புதிய நடிகைகளின் பரிச்சயம் வாய்த்துக் கொண்டிருந்த காஞ்சனனுக்குத் தன் மீதுள்ள காதல் மாறாமல் நிலைவுற்றிருக்குமா என்ற விஷயத்தைப் பற்றி அவளுக்கு அடிக்கடி யோசனை ஏற்பட்டு, அவளது மனம் குழம்ப ஆரம்பிக்கும். தன்னுடைய பலவீனமான தேக நிலையினால், காஞ்சனனுக்கு அவன் எதிர்பார்க்கும் அவ்வளவு ஆனந்தம் தன்னால் தரமுடியாமல் இருந்ததை எண்ணி எண்ணி, அவள் மனம் வெதும்பினாள். அதன் பிறகு சில நாட்கள், சீலா அங்கேயே தங்கியிருந்தாள். பிரதி இரவும் ஷூட்டிங் பார்ப்பதற்கு, காஞ்சனனுடன் ஸ்டுடியோவுக்குச் சீலா சென்று வந்தாள். வீட்டு எஜமானி ஸ்தானத்தில் சீலாவும் அவ்வீட்டுக்கு வந்துள்ள ஒரு விருந்தாளி போல் தானும் இருப்பதாக விபரீதமான ஒரு மனோபாவம் ரேகையின் உள்ளத்தில் எழுந்து, பேய்க்கூத்து ஆடலாயிற்று. அடிக்கடி வீட்டு வேலையில் சீலா ஈடுபடுவதைக் கண்டு, ஒரு முறை காஞ்சனன் கூறினான் : ''பாவம்! தன் வீட்டைப் போலவே நம் விருந்தாளி வேலை செய்ய நேரிடுகிறது, இல்லையா?''

ரேகை பளிச்சென்று பதில் சொன்னாள் : ''தன் வீட்டைப் போல என்ன! வீடே அவளுடையதுதானே!''

காஞ்சனனுக்கு ரேகையின் மறுமொழியில் இருந்த வன்மம் ஒன்றும் புரியவில்லை. அவன் அதை அன்பினால் வந்ததொரு வாசகம் என்றே கருதினான் போல் இருக்கிறது.

ஆனால், சீலாவோ ரேகையை ஒரு கணம் கூர்ந்து நோக்கினாள்! ஒரு வருஷத்துக்கு முன் அவளுடைய கண்களில் சீலா பார்த்திருந்த அதே விசித்திரப் பார்வை தான் இதோ காணப்பட்டது. ஒரு வருஷத்துக்கு முந்திய அந்த விசித்திரப் பார்வைக்கும், இப்பொழுது ரேகையின் இந்த விபரீதப் போக்குக்கும் அடிப்படையான காரணம் இன்னதென்று, ஒருவிதப் பிரகாசம் சீலாவின் மனதில் உண்டாயிற்று. பொறாமையினால் ஏற்படும் நஞ்சுக்கல்லாமல் வேறெவ்வித உணர்ச்சிக்கும், கண்களில் இப்படிப்பட்ட தீவிரமான ஓர் அனலொளியை உண்டாக்கக் கூடிய வலிமை கிடையாது. அடிக்கடி ஏதோ விடு கதை போடுவது போலக் குத்தலாக ரேகை பேசி வந்திருந்ததன் காரணம், இப்பொழுது சந்தேகமற, சீலாவுக்குத் தெரியவந்தது. காஞ்சனன் வீட்டில் இல்லாத சமயம் பார்த்துத் திடீரென்று, ரேகையிடம் சீலா விடைபெற்றுச் சென்றாள்.

இருந்தாற்போல் இருந்து சீலா புறப்பட்டுப் போனது காஞ்சனனுக்கு மிகுந்த ஆச்சரியத்தை விளைவித்தது. ஆனால், அதற்கு என்ன காரணம் என்பதை மாத்திரம் அவனால் ஊகித்தறிய முடியவில்லை. ரேகையும் மௌனம் சாதித்ததால், அவளிடமிருந்து ஒன்றும் அறிய முடியவில்லை. ஆனால், அவ்விருவருக்கு மிடையே ஏதோ மனஸ்தாபம் நேரிட்டிருக்க வேண்டும் என்று மட்டும் அவனால் ஊகிக்க முடிந்தது! மறுநாள் சூடு கொஞ்சம் ஆறியதும், விஷயம் தானாகவே வெளியாகட்டுமே என்று அவன் சும்மா இருந்து விட்டான்.

அடுத்த நாள் காலைத் தபாலில் ரேகையின் விலாசத்துக்கும் ஒரு கடிதம் இருந்தது. உறையின் மேல் இருந்த கையெழுத்து சீலாவினுடையது என்பதை, பார்த்த மாத்திரத்தில் காஞ்சனன் கண்டு கொண்டான். அவனது மனதில் அந்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்க்கவேண்டும் என்னும் ஆவல் என்னவோ துடித்துக் கொண்டிருந்தது. ஆயினும், அப்படிச் செய்யாமல் கடிதத்தை அவன் ரேகையிடத்தில் தந்து, வெளியே வந்துவிட்டான். கொஞ்ச நேரம் தாமதித்து அவன் மறுபடியும் உள்ளே நுழைந்த பொழுது, ரேகை தன் புடவையின் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தாள். அவளைச் சமாதானப்படுத்தும் உத்தேசத்துடன், அவன் அவளை அணுகினான். அவள் ஒன்றும் பேச முடியாமல் இரண்டு கடிதங்களை அவனுடைய கையில் கொடுத்தாள். அவற்றில் ஒன்று சுமார் ஒரு வருஷத்துக்குமுன் சீலாவுக்கு அவன் எழுதியிருந்தது; மற்றது இப்பொழுது ரேகைக்குச் சீலா எழுதியது. அந்த இரண்டாவது கடிதத்தை அவன் படிக்கலானான் :

''பிரியமுள்ள சகோதரி ரேகா!

உன் உடல்நிலை கெடக் கூடாது என்பதற் காகவே, நான் திடீரென்று புறப்பட்டு வந்துவிட்டேன். என்னை மன்னிக்கும்படி காஞ்சனனிடம் சொல்லவும்.

ரேகா! நானும் ஒரு மனிதப் பிறவிதானே! விருப்பு வெறுப்பு, ஆசை அகங்காரங்களைப் போலவே பொறாமை உண்டாவதும் உலக இயல்பு என்பதும் எனக்குத் தெரிந்து தான் இருக்கிறது. ஆனால், அந்தப் பொறாமைக்கும் தகுந்த ஓர் ஆதாரமும் வரையறையும் இருக்க வேண்டாமா? ரோஜா மலரின் முள், கையில் குத்தினால்கூட அதன் நறுமணத்தை எண்ணி, யாரும் அந்த முள்ளைப் பொருள் படுத்துவதில்லை; ஆனால், வேண்டுமென்றே யாராவது சப்பாத்திப் பூவுக்கு ஆசைப்பட்டு அதன் முள்மேல் நடந்து போவது பெரும் பைத்தியக்காரத்தனமாகும். யாராவது அப்படிச் செய்வதுண்டா?

இதோடு கூட, உன் விவாகத்துக்கு எவ்வளவோ மாதங்களுக்குமுன், எனக்குக் காஞ்சனன் எழுதியிருந்த ஒரு கடிதத்தை அடக்கம் செய்திருக்கிறேன். காஞ்சனனின் காதல் எனக்கு வேண்டியிருந்திருந்தால், அவனுடைய கோரிக்கையை நான் நிராகரித்திருக்க மாட்டேன். டாக்டர் பரீட்சையில், முதல் தரமாகத் தேறி, பாதிரிமார்களைப் போல, கிராமம் கிராமமாகச் சென்று என்னால் இயன்ற அளவு சமூக சேவை செய்ய வேண்டும் என்பதுதான் என் லட்சியம். இந்த உயர்ந்த லட்சியத்தின்

கீதம் மாத்திரம் என் உள்ளத்திலே சதா ஒலித்துக்கொண்டிருந்திரா விட்டால், அவருடைய கோரிக்கைக்கு இணங்கி, நான் அவருடைய பத்தினியாக என்றைக்கோ ஆகியிருக்கக் கூடும். 'மாட்டேன்' என்று அன்றே அவருக்குச் சொல்லி விட்டேன். நீ அவருடைய அரசியானாய். உன் பாக்கியத்தைக் கண்டு, ஒரு நாளும் நான் அசூயைப் பட்டதில்லை; இனிப் படப் போவதுமில்லை.

ஆனாலும் காஞ்சனனின் பத்தினியாவதற்கு மறுத்துவிட்டேன் என்பதனாலேயே நான் அவருடைய சிநேகிதையாக இருக்கக் கூடாதென்று எந்த நீதி சாஸ்திரத்திலும் சொல்லியிருக்கவில்லையே? ஆண்-பெண்களினிடையே இருக்கும் தூய நட்பை, மனதிலே களங்கமில்லாமல் பார்க்கும் பரந்த நோக்கம் நம் நாட்டில் படித்த மக்களிடையே கூட இன்னமும் ஏற்படவில்லையே! லாட்டரியில் எதிர் பாராத வகையில் கிடைத்த பத்தாயிரம் ரூபாயை அப்படியே வாரி இறைத்துவிட்ட ஒருவன் மறுகணமே பத்து ரூபாய்கள் எங்கேயோ திருடி விட்டதாகக் குற்றம் சாட்டப் பட்டால், அந்தக் குற்றச் சாட்டு உண்மையாகத் தோன்றுமா உனக்கு?

ரேகா! புஷ்பத்தை அணுகும் ஒவ்வொரு மனிதனும் அதிலுள்ள தேனைப் பருகத்தான் வருவதாக வண்ணாத்திப் பூச்சிக்குத் தோன்றுகிறது. தூரத்தில் நின்றபடியே அம்மலரின் ஸுவாஸத்தை மட்டும் அனுபவித்துவிட்டு அதனாலேயே மகிழ்ச்சியடைந்து திரும்பிச் செல்லும் மனிதர்களும் உண்டு என்ற உண்மையை அந்த வண்ணாத்திப் பூச்சியின் மனதில் எப்படிப் பதியச் செய்வது? நான் உணர்ச்சிமேலீட்டால் ஏதாவது எழுதக்கூடாததை எழுதியிருந்தால், என்னை மன்னிக்கவும். உன் குழந்தைக்கு என் இனிய அன்பு கலந்த முத்தங்கள். அவனுக்குப் பெயரிட்ட பிறகு அது என்ன பெயர் என்பதைப் பற்றி, எனக்குத் தெரிவிக்க மறந்து விடாதே.

ஆசிர்வாதம்

உன் அன்புள்ள

சீலா"

* *

கொஞ்சநாளைக்கெல்லாம் ரேகை வற்புறுத்தியதன்மேல் தங்கள் குழந்தையின் நாமகரணச் சடங்கின்போது, அருகில் இருந்து அதை நடத்தி வைப்பதற்காகச் சீலாவை அழைத்துப் போகும் உத்தேசத்துடன் தான் வந்திருப்பதாக, சீலாவிடம் காஞ்சனன் கூறியதும், அவளுக்கு மெய் சிலிர்த்தது. தன் உள்ளக் கலவரத்தை மறைக்கும் முயற்சியில் தன்னை அறியாமலே அவள் கேட்டாள்: "குழந்தைக்கு என்ன பெயர் வைப்பதாகத் தீர்மானம் செய்திருக்கிறீர்கள்?"

சிரித்தவண்ணம் காஞ்சனன் கூறினான் "ஸுவாஸ்" என்று!

(முற்றிற்று)

## கட்டைவிரல் ஜோஸ்யம்!

பிரபல ஹைகோர்ட் ஜட்ஜியான ஸர் டி. முத்துஸ்வாமி ஐயரைப்பற்றிய ரஸமான ஒரு ரகஸ்யத்தைப் பிரபல வக்கீலான எர்ட்லி நார்ட்டன் துரை கூறியுள்ளார்.

முத்துஸ்வாமி ஐயர் மிகவும் எளிய வாழ்வு வாழ்ந்தார். கோர்ட்டுக்கு வரும்போது, வெறுங் காலாய்த்தான் வருவார்; ஜோடோ, பாதரட்சையோ போட்டுக்கொள்ள மாட்டார். ஆகையால், எல்லாருக்கும் அவருடைய கால்விரல்கள் நன்றாய்த் தெரியும். அவருடைய மனோ உணர்ச்சிகளுக் கேற்றவாறெல்லாம் அந்தக் கால்விரல்கள் முறுக்கிக்கொண்டே யிருக்குமாம்.

எதிரி வக்கீலின் ஆர்குமெண்டு முடிந்தது; ஜட்ஜ்மெண்டு சொல்லப்போகும் சமயம். முத்துசுவாமி ஐயரின் வலதுகால் கட்டைவிரலைப் பாருங்கள். அது பக்கத்து விரலைத் தழுவிக் கொண்டிருக்கக் காண்பீர்கள். மெல்லத்தானே தழுவி யிருக்கிறது? அப்படியானால் பாதகமில்லை; எதிரி பிழைத்துப் போவான். இல்லையா? இறுகவா தழுவிக்கொண் டிருக்கிறது? பவனில்லை; எதிரி தப்ப முடியாது; தண்டனை நிச்சயம். இப்படியாக, ஜட்ஜி முத்துஸ்வாமி ஐயரின் மனப்போக்கை அவருடைய கால் கட்டைவிரலிலே கண்டுவிடலாமாம்!

## தாய் அன்பு

காண்டுகுரி வீரேசலிங்கம் பந்துலு 1848—1919-ஆம் வருஷங்களில் வாழ்ந்தவர். தெலுங்கிலே முதல் முதலாக வசன நடை எழுதத் தொடங்கிய பேராசிரியர் அவர்தான் என்கிறார்கள்.

பந்துலு சிறு பையனாய் இருக்கையில், வாசு சரித்திரம் என்ற உயர்ந்த காவியத்தைப்பற்றிக் கேள்விப்பட்டார். உடனே எங்கேயாவது அந்தச்சுவடி கிடைக்குமா என்று தேடினார். அது ஒரு கடையில் இருந்தது. சுவடியின் விலை ரூ. 4-8-0. ஆனால், கையிலே ஒரு ரூபாய்தான் பணம் இருந்தது. அதில் அரை ரூபாய் பள்ளிக்கூடச் சம்பளம். மீதி அரை ரூபாய் சொந்தச் செலவுக்கு. பள்ளிக்கூடம் போகாமல், அப்படியே அந்த ஒரு ரூபாயையும் கடைக்காரனிடம் கொடுத்தார். போதாது என்றான் கடைக்காரன். ஆனால், மீதிப்பணத்தையும் கொடுத்துத் தீர்க்கும் வரையில், தினந்தோறும் கடைக்கு வந்து சுவடியைப் படித்துவிட்டுச் செல்லலாம் என்று அனுமதித்தான். பள்ளிக்கூடம் செல்வதற்குப் பதிலாக, இந்தக் கடைக்கு வந்துகொண்டிருந்தார் பந்துலு.

தாயாருக்கு இந்தவிஷயம் எட்டியது. மகனை மிகவும் கோபித்துக்கொண்டாள். ஆனால், உள்ளுக்குள்ளே சந்தோஷம். பணத்தை மகன் வீணாக்காமல், சுவடி படிக்கச் செலவழித்தது அவளுக்கு மகிழ்ச்சி அளித்தது. அந்தக் கடைக்குச் சென்று மீதிப் பணத்தைக் கொடுத்துச் சுவடியை வாங்கிப் பையனிடம் தந்தாள். மீண்டும் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினாள்.

# புத்தனும் கிருஸ்துவும்



புத்தனும் ஏசுவும் பிறந்த இப்பாரினில்
இத்தனை கொடுமைதான் எப்படி ஜனித்தது?

உலகம் உயிர் பெறவே உயிரீந்தான் கிறிஸ்து முனி;
உலகம் உய்கென்றே உயர்புத்தன் தான் துறந்தான்.

அவர் தம் பொன்மொழி அனைவரும் கேட்கவே
புவியினிற் புகன்றுமோர் புனிதனும் இருக்கையில்

அனைவரும் இன்பமே ஆசையுற்றிருந்தும்
நினைக்கவும் நெஞ்சம் நெக்குறும் தீமைகள்

யாவனே செய்குவன்? யாண்டும் தீமையாய்
ஆவன இன்பம் அளிக்குமோ ஐயகோ!

விஷத்தினைப் பாய்ச்சி விண்ணமு துண்ணவோ?
விஷத்தினை யேற்றே மற்றவர் அமுதுண

விழைவதே மேன்மை: விண்ணுல கன்றே
தழைத்திடும்; உலகம் சீர் உறும் திண்ணமே.

—பெ. தூரன்



# காந்திஜி வாக்கு



"காந்திஜி நோய்வாய்ப்பட்டுக் கிடப்பதால், அஹிம்சை இயக்கத்துக்கு எப்படித் தலைமை வகித்து நடத்துவார்?" என்று பிரிட்டிஷ் ரேடியோ கேட்டதாம். அதற்குப் பதில் எழுதுகையில், மகாத்மா கூறுவது:

தேக அசௌக்கியம், அஹிம்சைப் போராட்டத்துக்குத் தடையாகி விடாது. கடவுளின் பிரேரணையால்தான் நமது மனம் ஒரு துறையில் தூண்டப்படுகிறது— இது அஹிம்சா தர்மத்தின் முக்கிய நம்பிக்கை. ஆரோக்கியக் குறைவும், களைப்பும் கூட அஹிம்சா வாதிக்கு ஒரு குறைபாடுதான். 'ஆரோக்கியமான உடம்பில்தான் ஆரோக்கிய மனம் இருக்கும்' என்ற கொள்கையை அஹிம்சாவாதி ஒப்புக்கொண்டே தீரவேண்டும். அதுவே பரிபூர்ண அஹிம்சா வாதியின் லட்சணம். ஆனால், அந்தப் பரம லட்சியத்தை நான் அடையவில்லையே, என்ன செய்ய!

* *

சீனா, ருஷியா முதலிய நாடுகளுக்கு அடிமை இந்தியா அனுதாபம் காட்டி என்ன பயன் என்று கேட்ட நிருபருக்கு மகாத்மாவின் பதில்:

சுயேச்சை இல்லாமலிருக்கும் வரையில், இந்தியாவின் விரோதம் எவருக்கும் எந்தத் தேசத்துக்கும் கேடு செய்ய முடியாது. அதேபோல்தான் இந்தியாவின் அனுதாபமும், பலனுள்ள உதவியை யாருக்கும் செய்யமுடியாது. ஒரு பயனுமில்லை யென்றாலும், அனுதாபம் தெரிவிப்பதால் நஷ்டம் எதுவுமில்லை. வெறும் அனுதாபமே யாயினும், அதன் தார்மிக பலம் அதில் கட்டாயம் இருக்கிறது.

* *

தீயவர்களின் குரூரமான சித்திரவதைக்கு உட்பட்டிருப்பதைவிடச் சாவதே மேல் என்று மகாத்மா சொன்னதை விளக்கும்படி ஒருவர் கேட்டார். காந்திஜி சொல்கிறார்:

சித்திரவதையிலிருந்து தப்புவதற்குத் தற்கொலை ஒரு சாதனம் அல்ல என்று கூறமாட்டேன். ஆனால். சாவதற்குக் கௌரவமான மார்க்கம் தற்கொலைதான் என்று நான் கருதவில்லை. சாக வேண்டும் என்று பலமான ஆசை கொள்ளுவதே, கௌரவமான சாவுக்கு வழி. அந்த உறுதி அளவிலேயே சாவு ஏற்படக்கூடிய அவ்வளவு பலமான உறுதி வேண்டும். ஆனால், இந்த உறுதி கோடியில் ஒருவருக்குத்தான் இருக்கிறது.

* *

"நீரோ என்ற ரோமபுரி அரசனுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்? அவனைப்போலவே, உங்களால் தணிக்க முடியாத ஒரு நெருப்பை நீங்களும் கிளப்பிவிட்டு, ஊரெல்லாம் எரியும்போது, சேவாக்கிராமத்தில் உட்கார்ந்து கொண்டு உல்லாஸமாகப் பிடில் வாசித்துக் கொண்டிருக்கப் போகிறீர்களா?" என்று கேட்ட ஒருவருக்கு, மகாத்மாவின் பதில்:

நான் அப்படித் தீ மூட்ட நேர்ந்தால், என் தீக்குச்சி நமுத்ததாய் இல்லாமலுமிருந்தால், அப்போது காண்பீர்கள் அந்த வித்தியாசத்தை. நான் இட்ட தீயை ஒழுங்கு படுத்தவோ அடக்கவோ என்னால் முடியாமல் போமாயின், சேவாக்கிராமத்தில் உட்கார்ந்து பிடில் மீட்டிக் கொண்டிருக்க மாட்டேன்; அந்தத் தீயின் மத்தியில் நின்று எரிந்து சாம்பலாகி விடுவேன். 'பிரிட்டானியர் எந்தக் காலத்தும் அடிமையாக இருத்தல் தகாது' என்று பாடும்படி, தங்கள் பள்ளிகளில் நம்மை ஆள்வோர் நமக்குச் சொல்லித் தருகிறார்கள். அவர்களுடைய அடிமைகளுக்கு இந்தப் பாட்டு எப்படி உற்சாகம் தரும்? பிரிட்டிஷார் தங்களது சுதந்தரத்தைப் பாதுகாப்பதற்காக, தண்ணீரைப் போல் ரத்தம் சொரிகிறார்கள்; தூசிபோல் தங்கத்தை வாரியிறைக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள், இந்தியாவையும் ஆப்பிரிக்காவையும் அடிமைப் படுத்துவது நியாயமா? தங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுபட, இந்தியர்கள் மட்டும் அவர்களைப்போல் ஏன் முயலலாகாது? நடைபிணம்போல் வாழ மனம் ஒப்பாமல், மனவேதனை தீர்வதற்காக, தன் சிதைக்குத் தானே தீ வைத்துக் கொள்ளும் ஒருவனை நீரோவுடனா ஒப்பிடுவது?

* *

தானிய வியாபாரிகளின் அகவிலைக் கொடுமையைப்பற்றி, பல ஏழைகள் மகாத்மாஜியிடம் புகார் செய்திருக்கிறார்கள். வியாபாரிகளுக்கு அவர் சொல்லும் நல்மொழிகள்:

மற்ற எல்லாரையும்விட, சர்க்கார்தான் இதற்கு அதிகப் பொறுப்பாளி. ஆனால், சர்க்கார் சாவகாசமாகப் பாடம் கற்றுப் புத்தியடையும் வரையில், ஜனங்கள் பட்டினிகிடக்க முடியாது. வர்த்தகர்கள் இந்தப் பிரச்னையைத் தாங்களாகவே சமாளிக்க முன் வர வேண்டும். நியாயமான விலையில் ஏழைகளுக்கு உணவுத் தானியங்கள் ஒழுங்காகக் கிடைத்து வருவதற்கு, வர்த்தகர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தியா முழுவதுமுள்ள வர்த்தக சமூகம் கூட்டுறவாக முயற்சித்தால்தான் இது சாத்தியம். ஆனால், ஆரம்பத்தில் மாகாண அளவிலோ ஜில்லா அளவிலோ இந்த வேலையைத் துவக்கி விட வேண்டும். சிறிதும் தாமதம் கூடாது. பசி சட்டமறியாது. தாமதித்தால், சோற்றுக் கலகங்கள் அதாவது தானியக் கலகங்கள் நாடெங்கும் கிளம்பி விடும்.

---

## காந்தியின் கருணை

காந்தி-இர்வின் ஒப்பந்தம் நடந்ததல்லவா; அந்தச் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்த போது, இடையிலே ஓர் ஏழைக் குடியானவன் "ஜப்தி செய்த என் பசுமாட்டைச் சர்க்கார் திருப்பித் தரவில்லை" என்று காந்திஜிக்குத் தகவல் தெரிவித்தானாம். அந்தப் பசுவைத் திருப்பித் தரும் வரையில், பேச்சு வார்த்தைகளை மகாத்மாஜி நிறுத்தி வைத்துவிட்டாராம். இப்படி ஒரு கதை உண்டு. இது உண்மையோ அல்லவோ, அந்த மகான் அப்படிச் செய்யக் கூடியவர்தான்.

* *

"நான் சந்திக்கும் ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு விஷயத்தில் என்னை விட உயர்ந்தவனாகவே யிருக்கிறான். அந்த விஷயத்தை நான் அவனிடம் கற்றுக்கொள்கிறேன்." —எமர்ஸன்



# பறித்த பூக்கள்

**நிஜமான ஹிந்துக்கள் :** பாபா பிரேமானந்தர் கல்கத்தாவில் உயர் குலத்தில் பிறந்தவர். சிறந்த படிப்பாளி. துறவி. சென்னை அறிஞர் திரு. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு நண்பர். ஒரு சமயம் பாபாவிடமிருந்து ஐயருக்கு வந்த இந்த ரஸமான கடிதத்தை, ஐயரின் மகன் திரு. கி. சந்திரசேகரன் 'கலைமகள்' கட்டுரையொன்றில் தந்திருக்கிறார் : "மறுமுறை சென்னையைப் பார்க்க நேர்டும்போல் இருக்கிறது. இரண்டோர் இடங்களைப் பார்த்துவிட்டு, உன் வீட்டுக் கதவைப் பிக்ஷைக்காகத் தட்டுவேன். சென்னையும் சென்னைவாசிகளும் என் இதயத்தைக் கொள்ளைகொண்டு விட்டார்கள். சென்னையில்தான் நிஜமான ஹிந்துக்கள் வசிக்கிறார்கள். இந்தப் பெரிய தேசத்தில் அங்கேதான் நான் ஹிந்துக்களைப் பார்க்கிறேன். நல்ல ஆசாரசீலர்களையும், கிருஹஸ்தாசிரமத்தில் மேன்மையோடு வாழ்பவர்களையும் அவ்விடத்தில்தான் நான் காண்கிறேன்......."

* *

**ராகங்களின் அற்புதம் :** ராகங்களுக்கெல்லாம் அற்புத சக்திகள் இருப்பதாகப் பல கதைகள் உண்டு. அவைகளில் சிலவற்றை 'காவேரி'யில் உள்ள அம்மாஞ்சியின் அபிப்பிராயங்களில் காணலாம். மீர் டான்ஸன் என்பவர் ஒரு மகா வித்வான். இரவில் பாடவேண்டிய ஒரு ராகத்தை இவர் ஒரு நாள் பகலில் பாடினாராம். உடனே பகல் இரவாகி, அவருடைய சாரீரம் அரண்மனையைச் சுற்றி எவ்வளவு தூரம் பரவிற்றோ, அந்த இடமெல்லாம் இருண்டு விட்டதாம். அதே அக்பர் சக்கரவர்த்தியிடத்தில் நாயக் கோபால் என்ற ஒரு பிரபல வித்வான் இருந்தார். ஒரு நாள் வித்வானை அக்பர், 'தீபக்' என்ற ராகம் பாடச் சொன்னார். வித்வான் எவ்வளவோ மறுத்தும், சக்கரவர்த்தி பிடிவாதம் செய்தார். பிறகு, கோபால் யமுனா நதிக்குள் கழுத்தளவு நீரில் நின்றுகொண்டு ராகத்தை ஆலாபனம் செய்யுங்கால், அவரைச் சுற்றிலும் நீர் கொதித்தது; கடைசியில் வித்வானே ஜ்வாலையில் பஸ்மம் ஆகி விட்டாராம். இந்த இரண்டு கதைகளையும் ஸர் வில்லியம் ஒளஸ்லி எழுதிய புஸ்தகத்தில் படிக்கலாம். மைசூர் சமஸ்தான தேவாலயத்தில் தூண்டா விளக்கு ஒன்று அணைந்துவிடவே, அதை ஸ்பரிச தோஷமின்றி ஏற்றவேண்டும் என்று அரசன் வேண்டுகையில், தீபக் ராகத்தைப் பாடி விளக்கை ஆஸ்தான வித்வான் ஏற்றுவித்ததாக எழுதியிருக்கிறது. புன்னகவராளி ராகத்தைப் 'புங்கி' என்ற வாத்தியத்தால் ஒரு பாம்பாட்டி வாசித்து, எல்லிசபூர் என்ற ஊரில் தம் தோட்டத்தில் நாகப் பாம்புகளை வசீகரித்துப் பிடித்ததாக, மெடோஸ் டெயிலர் என்பவர் எழுதியிருக்கிறார். இதே ஆசிரியர் 'மேகரங்கினி' அல்லது 'மேகமல்லர்' என்ற ராகத்தின் சக்தியைக் குறித்தும் எழுதியிருக்கிறார். இந்த ராகத்தைப் பாடி வித்வான்கள் மழை பொழியச் செய்ததைத் தாம் நேரில் கண்டதாகக் கூறியிருக்கிறார்.

* *

**புராதன ஓவியச் சிறப்பு :** கிறிஸ்து சகாப்தத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, இந்திய ஓவியக் கலை சிறப்புற்று விளங்கியதென நம்முடைய பழைய இதிகாச, புராண காவியங்களும், பழைய பௌத்த சமய நூல்களும் ஒருமுகமாகக் கூறுகின்றன என்று, திரு. பி. கோதண்டராமன் 'திருமக'ளில் எழுதியுள்ளார். பௌத்தத் துறவிகள் மானிட உருவங்களை வரையக் கூடாதென்று விதிக்கப்பட்டிருந்தும், பலர் அவ்விதியை மீறி உருவப் படங்கள் எழுதினார்கள் என்று தெரிகிறது. ஒரு பௌத்த நூலில், ஓர் ஓவியன், புத்தரை வரைந்து அதை ஒரு மன்னனுக்குப் பரிசளித்ததாகவும், அந்த மன்னன் அகமகிழ்ந்து, தானும் தன் சுற்றத்தாரும் புத்தசமயம் புகுந்ததாகவும் ஒரு கதை கூறுகிறது. நமது தமிழ்நாட்டிலும் இந்தக் கலை மிகப் பழைய காலந்தொட்டுத் தேர்ச்சி பெற்றிருந் திருக்கவேண்டும் என்பது, மணிமேகலை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி போன்ற காப்பியங்களிலும் பழைய சங்க நூல்களிலும் காணப்படும் பல குறிப்புக்களிலிருந்து தெரிகிறது.

* *

**நிரந்தர போதை :** தனகாளி என்பவன் ஒரு பெருங் குடியன். இவன் ஒருநாள் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரைச் சந்தித்தபோது நடந்த அதிசயத்தை ஸ்ரீ அற்புதானந்தா, 'ஸ்ரீ ராமகிருஷ்ண விஜய'த்தில் எழுதியுள்ளார். "பானம் பண்ணுவதற்கு நீர் ஏதாவது மது அளிக்க முடியுமா ?" என்று தனகாளி கேட்டான். "ஆம், என்னால் கொடுக்க முடியும். ஆனால் அது மிக்க பலமானது; உன்னால் அதைத் தாங்க முடியாமல் போகுமே" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்னார். "அவ்வாறாயின் அது மேல் நாட்டாருடைய மதுபானமாய் இருக்கவேண்டும். அதை எனக்கு ஒரு சிறிது கொடுத் தருளும் !" என்று தனகாளி கேட்டான். ஸ்ரீராமகிருஷ்ணர் புன்சிரிப்போடு, "அப்படியல்ல, கலப்பில்லாத நாட்டுச் சரக்கு அது ! அதை எல்லாருக்கும் கொடுக்க முடியாது ; எல்லாராலும் அதைத் தாங்கவும் முடியாது. ஏனெனில், நான் கொடுப்பதை நீ ஒரு முறை சுவைத்தால், அதன்பின் வேறெந்த மதுவும் உனக்குத் திருப்தியை உண்டு பண்ணாது. இதையெல்லாம் அறிந்தும், எனது மதுபானத்தைக் குடிக்க உனக்கு விருப்பமுண்டோ ?" என்று கேட்டார். தனகாளி சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டு, பின்பு, "பெரியவரே ! எப்பொழுதும் போதையில் இருக்கும்படி செய்யும் அந்த மதுவை எனக்கு அளியுங்கள் !" என்றான். இதைக் கேட்டதும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் திடீரென்று அவனைத் தொட்டார். உடனே அவன் கடவுள் - வெறி பிடித்தவனாக மாறிவிட்டான் !

* *

**வைஸிராய் வைபவம் :** லின்லித்கோ பிரபுவின் இந்த வரலாறு ஓர் அமெரிக்கப் பத்திரிகையிலிருந்து இந்தியாவுக்கு வந்திருக்கிறது ; 'ஹிந்துஸ்தான்' வெளியிட்டுள்ளது. லின்லித்கோ பிரபுவுக்கு ஸ்காட்லாந்தில் 37,000 ஏக்கரா விஸ்தீரணமுள்ள பூஸ்திதி உண்டு. 1,700-ஆம் ஆண்டிலிருந்து இந்தச் சொத்து, பிதிரார்ஜிதமாய் வந்துகொண்டிருந்தது. லின்லித்கோ பிரபுவுக்குக் கடன் ஏற்பட்டுவிட்டது. கடலில் பெருங்காயம் கரைப்பதுபோல, தம் நாய்களை விற்றார் ; தாம் வேட்டை

யாடும் இடத்தை வாடகைக்கு விட்டார்; இரண்டே இரண்டு குதிரைகளை வைத்துக்கொண்டு, மற்றவைகளை விற்றார். இவ்வளவு சிக்கனம் செய்தும், கடன் அடைபடவில்லை. ஒருநாள் வரி வசூலிப்பவர் வந்து எஸ்டேட் முழுவதையும் ஜப்தி செய்துவிட்டார். சொத்து போனாலும் அவருக்குப் பிரபுப் பட்டம் மட்டும் இருந்தது. பிறகு லண்டனுக்குப் போய்ச் சர்க்கார் உத்தியோகத்தில் அமர்ந்தார். அந்தக் காலத்தில் இந்தியாவைப்பற்றி ஒரு நீண்ட அறிக்கை தயாரித்து, இந்திய வைஸிராயாக வந்துவிட்டார். அந்த 37,000 ஏக்கராவின் ஆதிபத்தியத்துக்கு மேல் இந்தியாவில் அவருக்கு அதிகாரம் கிடைத்துவிட்டது. உலகில் இன்று ஆளும் எந்த ராஜாவையும் காட்டிலும், அதிக அதிகாரத்துடன் அவர் இந்த நாட்டை ஆண்டுகொண்டிருக்கிறார்!

* *

**வங்க இலக்கியப் பிதா:** பங்கிம் சந்திரரின் சரித்திரச் சுருக்கம் 'ஈழகேசரி'யில் வெளியாகி யிருக்கிறது. பங்கிம் சந்திரர், யாதவ சந்திர சட்டோபாத்தியாயரின் மூன்றாம் புதல்வர். காண்டல்பாரா என்னும் கிராமத்தில், பிராமண குலத்தில் 1838-ஆம் ௵ ஜூன் மாதம் 27உ பிறந்தார். ஐந்து வயதில் அக்ஷராப்பியாசம் பெற்றுக் கிராமப் பள்ளிக்கூடத்தில் சிறிது காலம் பயின்றபின், ஆங்கில உயர்தரப் பள்ளியில் சேர்ந்து படித்தார். அப்பொழுதே நல்ல விவேகி என்று பெயர் எடுத்தார். 1856-ஆம் ௵ கல்கத்தா ராஜதானிக் கல்லூரியில் படித்து எல்லோராலும் போற்றப்பட்டு 20-ஆம் வயதில் பி. ஏ. பரீக்ஷையில் தேறினார். அவரது மேதையை அறிந்த வங்காள சர்க்கார், பங்கிம் சந்திரரை உதவி நீதிபதியாக நியமித்தார்கள். உத்தியோகத்தில் படிப்படியாக ஏறி, அரசாங்க உதவிக் காரியதரிசிப் பதவியை அடைந்தார். தமது கடமையில் அவர் மிக நேர்மையாக நடந்துகொண்டார். அவருடைய ஊழியங்களை மெச்சி, சி. ஐ. இ. என்னும் பட்டத்தை அவருக்குச் சர்க்கார் வழங்கினார்கள். 1891-ஆம் ௵ வேலையிலிருந்து அவர் விலகினார். உத்தியோகத்தில் இருக்கும்போதே, தம் உத்தியோக அலுவல்களுக்கிடையே இலக்கியத் துறையிலும் பெரிதும் ஈடுபடலானார். ஆங்கில எழுத்தாளன் ஆக வேண்டுமென்று முதலில் விரும்பினார். 'இந்தியன் பீல்ட்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் 'ராஜமோகனின் மனைவி' என்னுமொரு தொடர் கதையை ஆரம்பித்தார். ஆனால், அது வங்க மக்களால் அவ்வளவாகப் பாராட்டப்படவில்லை. தமது முழுத் திறமையையும் மேதையையும் அந்நிய மொழியால் வெளிப்படுத்த முடியாதென்பதை உணர்ந்து, தாய்மொழியில் பிறகு எழுதத் தலைப்பட்டார். பல நாவல்கள் எழுதினார். கவிதை, தத்துவ ஆராய்ச்சி, விமர்சனம் முதலியவற்றிலும் ஈடுபட்டார். பகவத் கீதையை மொழிபெயர்த்து, பாஷ்யம் எழுதவும் தொடங்கினார். ஆனால், அது முடியுமுன்னரே, 1894-ஆம் ௵ தமது 55-ஆவது வயதில் காலமானார்.

* *

**ராயரின் துக்கம்:** அண்ணாசாமி ராயருக்கு ரூ. 25,000 லாட்டரியில் விழுந்த கதையை, 'கல்கி'யில் எஸ். பாலசுந்தரி எழுதுகிறார். ராயரின் அதிருஷ்டத்தைப் பார்த்து, ஊராரெல்லாரும் பொறாமைப் பட்டார்கள். ஆனால், ராயரின் முகம் மாத்திரம் வாட்டமடைந்திருந்தது. களையற்றுச் சோர்ந்த முகத்துடன் வீதித் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது அண்ணாசாமி ராயரின் நண்பன் அவரைப் பார்க்க வந்தான். அவரைப் பார்த்ததும் அவனுக்கே ஒரே ஆச்சரியமாய்ப் போய் விட்டது. 25,000 ரூபாய் பரிசு விழுந்திருக்கும் பொழுது அவர் முகம் வாட்டமுற்றிருப்பதைக் கண்டால், யார் தான் ஆச்சரியப் படமாட்டார்கள்? "ஏன், உங்கள் முகம் வாடி யிருக்கிறது? உங்களுக்கு லாட்டரிச் சீட்டு விழுந்த தாமே! ரூ. 25,000 பரிசு கிடைத்த பிறகுமா...... மன வருத்தம்?" "அதையேன் கேட்கிறாய்? அந்தப் பாழும் குப்புசாமியாலே பாதி நஷ்டம். இல்லாவிட்டால், ஒரு சீட்டோடு நிறுத்தியிருப்பேன்" என்று கூறி அலுத்துக் கொண்டார் ராயர். காலணாச் செலவழிப்பதற்கு நாள் கணக்காய் யோசனை செய்யும் ராயருக்கு, இரண்டு லாட்டரிச் சீட்டு வாங்கி அதில் ஒன்று வீணாய்ப் போய்விட்டதென்றால், அவரது முகம் வாட்டமடையாமல் என்ன செய்யும்?

* *

**விழிப்புக் கவலை:** காலையிலே ஐந்து மணிக்கு எழுந்திருந்து ஆபீசுக்குப் போக வேண்டும். இதனால் இராமுழுதும் ஓர் ஆசாமிக்குத் தூக்கம் வரவில்லை. கடிகாரம் 'டாண்' என்று ஒன்றடிக்கிறது. ஆசாமி யோசிக்கிறான். 'தேவன்' அதை 'ஆனந்த விகட'னில் வர்ணிக்கிறார்: "சனியன் பிடித்த கடிகாரம்! அதைக் கண்டு பிடித்தவன் 12½ க்கும் 1 க்கும் 1½ க்கும் ஒரே அடிதான் வைத்தான், முட்டாள்! பன்னிரண்டரை என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கிறபோது, ஒன்றரையே ஆகி யிருக்கலாம்! இப்போ ஒரு மணி அடித்ததே, அது என்ன என்று யார் கண்டார்கள்? அடேடே! இப்படி முழிச்சிண்டிருந்தா என்ன ஆகும்னு கேட்கிறேன்!......நான் தூங்கா விட்டால் காலையிலே எழுந்திருக்கவே போகிறதில்லை. நிச்சயம்!...ஒரு வார்த்தை ராஜியிடம் சொல்லியிருக்கலாம் ஐந்து மணிக்கு எழுப்பச் சொல்லி! ஆனால், அவளை யாரைவிட்டு எழுப்பச் சொல்வது? அப்புறம் அந்த ஆசாமியை யார் எழுப்புவது? அப்புறம் அந்தப் பேர்வழியை யார் எழுப்புவது?.......இப்படியே போய்க் கொண்டே யிருக்கும்! வேடிக்கையாக இருக்கிறதல்லவா? அப்புறம் யார் யாரை எழுப்புவது என்பதே தெரியாமல் போய் ஒரே குழப்பமாய் எல்லாரும் எழுந்து எல்லாரும் தூங்கிப்போய் விடுவார்கள்...அட கஷ்டமே! நீ தூங்கவே போகிறதில்லையா? சொல்லச் சொல்ல இப்படி வம்பளந்து கொண்டிருந்தால்!... ஆமாம்! ஐயோ! ஐந்து மணிக்கு எழுந்திருக்க வேண்டுமே! ஐந்து மணி, ஐந்து மணி, ஐந்து மணி!"

### டார்வின் கொள்கை!

ஹவாயில் உள்ள ஒரு வெள்ளைக்காரப் பையனுக்கு, ஜப்பானியப்பெண் ஒருத்திமீது காதல் உண்டாயிற்றாம். "என்னை மணக்கும்படி அவளைக் கேட்டால், என் நிறத்தைக் கண்டு அவள் ஆட்சேபிப்பாளோ?" என்று ஒரு ஜப்பானியனை அந்த வெள்ளைக்காரப் பையன் சந்தேகமாய்க் கேட்டான்.

ஜப்பானியன்: "உன் நிறத்துக்கு ஆட்சேபிக்க மாட்டாள்; உன் வம்சத்துக்குத்தான் ஆட்சேபிப்பாள்."

வெள்ளை வாலிபன்: "என் வம்சத்துக்கு என்ன குறைவு?"

ஜப்பானியன்: "உங்கள் ஐதிகப்படி நீ குரங்கு வம்சம். எங்கள் ஐதிகப்படி அவள் சூரிய வம்சம். ஆகையால் தான் மறுப்பாள்."

# உடம்பும் மருந்தும்

**நாடக வைத்தியம்:** ஒரு புருஷனுக்கும் அவன் மனைவிக்கும் சண்டை. மனஸ்தாபம் முற்றுகிறது. இதைத் தீர்க்க, டாக்டர் ஜேக்கப் எல். மாரினோ என்ற நியூயார்க் மனோ வைத்தியர், நாடகம் நடத்தத் தொடங்கி விடுகிறார்! சண்டை எப்படி நடந்ததோ அப்படியே, துளிக்கூட விடாமல் வர்ணித்துச் சொல்லும்படி, புருஷனையும் மனைவியையும் தனித்தனியே கேட்டு, டாக்டர் எழுதிக்கொள்ளுகிறார். பிறகு இரண்டு விவரங்களையும் ஒப்பிட்டு, சரிக்கட்டி, ஒற்றை அங்க நாடகம் ஒன்றை, அவர் தயாரிக்கிறார். அதன்மேல் நாடகம் நடிக்கப்படுகிறது. புருஷன் தன் பாகத்தையும் பெண் தன் பாகத்தையும் அதில் நடிக்கிறார்கள். இப்படி நாடகமாய் நடிக்கும்போது, தன் தன் அசட்டுத் தனங்களும் குற்றங்களும் தம்பதிகளுக்குத் தெரிந்து போகின்றன. இருவரும் சீர்திருந்தி, மனம் மாறி, சமாதானமாகிறார்கள். ஆனால் எல்லார் விஷயத்திலும் இது வெற்றி தருவதில்லை. சிலர் விஷயத்தில் கண்டிப்பாய் விவாக விலக்கு நடந்தே தீர வேண்டும் என்பதற்கு ருசுவும் ஆகிவிடுகிறது இந்த நாடகம்!

* *

**முகப்பருவை நீக்க வழி:** பருவ காலத்தில் உடல் தளதள என்று வேகமாக வளர்கிறது. அதற்குத் தக்க வேகத்தில் வளர்வது சிலரது தோலுக்கு முடியாமலிருக்கலாம். முகத்திலும் கழுத்திலும் மார்பிலும் தோளிலும் உள்ள துல்லியமான சதைக்கோளங்கள் வெகு மும்முரமாக வேலை செய்கையில், அவைகள் வெளியிடும் கழிவுகளைச் சரியான வேகத்தில் தோல் வெளிப்படுத்தா விட்டால், சதைக்கோளங்களிலிருந்து வெளியாகும் எண்ணெய்கள் கட்டியாக இறுகித் தோலுக் கடியிலேயே தங்கி விடுகின்றன; அல்லது தோலையும் தள்ளிக்கொண்டு முனையுள்ள பருக்களாகவும் கட்டிகளாகவும் மேலே வர முயற்சிக்கின்றன. முகப்பருக்கள் உண்டாகும் காரணம் இதுதான். பருக்களைப் போக்க, பல வழிகள் உண்டு. முதலில், வெந்நீரிலும், அதன் பிறகு பல முறை பச்சைத் தண்ணீரிலும் முகத்தைத் தினம் ஏழெட்டுத் தடவை கழுவுதல் ஒரு நல்ல வழி. திறந்த வெளியில் நிறைய தேகாப்பியாசம் செய்வதும், திறந்த வெளி வாழ்க்கையும், கழிவு பதார்த்தங்களைச் சரிவர வெளிப்படுத்தும். ருசிக்காக எதையும் தின்னாமல், சத்தான நல்ல உணவுகள் சாப்பிடவேண்டும். தித்திப்புப் பண்டங்கள், அடை, அப்பம், பொரியல் முதலிய உண்டிகளைக் குறைவாகச் சாப்பிட வேண்டும். புதுப் பழங்கள், பச்சைக் காய்கறிகள் ஆகியவற்றை அதிகமாய் உண்ணவேண்டும். **பருவை ஒரு போதும் நகத்தாலோ, விரலாலோ பிடித்துக் கிள்ளியோ அழுத்தியோ உடைக்கக் கூடாது.**

* *

**சந்தடிச் சிகிச்சை:** ஆகாய விமானம் வந்து குண்டுபோடுவது, அலறுவது போன்ற சந்தடிகளால், நரம்பு கலகலத்து மூளை குழம்பியவர்களுக்கு, துளிச்சத்தமும் இல்லாத அமைதியும் ஓய்வுமே முக்கியம் என்று கருதி அந்த முறையில் இதுவரையில் சிகிச்சை செய்து வந்தார்கள். ஆனால், இப்போது, முள்ளாலேயே முள்ளை எடுப்பது போன்ற புதிய சிகிச்சை ஒன்றைத் தொடங்கியிருக்கிறார்கள். ஆகாய விமானக் குண்டுச் சத்தம், சங்கு ஊதல் ஓசை, பீரங்கி முழக்கம், விமானம் பறக்கும் 'குர்ர்ர்' என்ற சத்தம் இவைகளையெல்லாம் சேர்த்துக் கிராமபோன் பிளேட் எடுத்து, அந்த நோயாளிகளுக்கு அடிக்கடி வைத்துக் காட்டுகிறார்கள். இதைக் கேட்டுக் கேட்டு அவர்களுக்கு வாடிக்கையாகி நரம்புகள் கெட்டிப் பட்டு விடுகின்றன. இரும்புக்கு 'டெம்பர்' ஏற்றுவது மாதிரி, மனித நரம்புகளுக்கும் இவ்விதமெல்லாம் 'டெம்பர்' ஏற்றி விடுகிறார்கள்!

* *

**பசித்தவனே நீடுவாழ்வான்:** அரைப் பட்டினி கிடந்து பசியில் உழலும் மனிதனே தீர்க்காயுள் வாழ்வானாம்! இப்படி ஒரு டாக்டர் கூறுகிறார். ராக்பெல்லர் ஸ்தாபன கார்னெல் சர்வகலாசாலையின் ஆதரவில் ஆராய்ச்சி செய்துவரும் டாக்டர் கிளைவ் எம். மிக்கே என்பவர்தான் அந்த டாக்டர். 2500 வெள்ளெலிகளை அவர் பரிட்சித்திருக்கிறார். முழுச்சாப்பாடு உண்ட எலிகளின் இதயம் ஒரு நிமிஷத்துக்கு 400 தடவையும் அரைச் சாப்பாட்டு எலிகளின் இதயம் 300 தடவையும் அடித்துக்கொள்ளுகின்றனவாம். அரைச் சாப்பாட்டு எலிகளின் ஜீவகதி மெதுவாயிருப்பதால், அவற்றின் சக்தி விரயமாகாமல் பாதுகாக்கப்பட்டு, அவை நீடித்து வாழ்கின்றனவாம். மனிதனும் இதே மாதிரி தானே? அந்த டாக்டர் சொல்லுகிறார்: "அவசியமானதை முதலில் உண். ஆசைப்படுவதைப் பிறகு புசி. ஆனால், அதிகமாக மட்டில் ஒருகாலும் தின்னாதே."

* *

**முள்ளங்கியின் குணம்:** முள்ளங்கிக் கிழங்கின் அருமையான குணங்களைச் சர்க்கார் பிரசுரமான குணபாடம் கூறுகிறது:

> வாதங் கரப்பான் வயிற் றெரிவு
> சூலை குடல்
> வாதங்காசம் ஐயம் வன்
> தலைநோய்—மோதுநீர்க்
> கோவை பன்னோய் பல் சிலந்தி
> குன்மம் இரைப்புக் கடுப்புஞ்
> சாவு முள்ளங்கிக்
> கந்தத்தால்.

அதாவது: வாதப்பிணி, கரப்பான், வயிற் றெரிச்சல், குத்தல், குடல் விருத்தி நோய், இருமல், கபம், தலைவலி, நீரேற்றம், பல் நோய், பல் சிலந்தி, குன்மம், சுவாசம், மூலக்கடுப்பு ஆகிய வியாதிகளெல்லாம் முள்ளங்கிக் கிழங்கினால் தீரும். இள முள்ளங்கியால், குன்மம், காசம், க்ஷயம், சுவாசம், விரணம், நேத்திர ரோகங்கள், தொண்டை நோய்கள், குரல் கம்மல், அக்கினி மாந்தம், மலச் சிக்கல், பீநசம் ஆகியவை அகலும் என்று 'அஷ்டாங்க ஹ்ருதயம்' கூறுகிறது. பச்சை முள்ளங்கியை உண்ணாமல் உலர்த்தியோ எண்ணெய் அல்லது நெய் சேர்த்துப் பக்குவம் செய்தோ, அருந்துவது தான் குணம் தருமாம்.

# ராஜாஜிக்கு அழைப்பு

கே. எம். முன்ஷி

ராஜாஜி ஒரு பிரத்தியட்ச வாதி. சர்க்காருடன் சமரஸம் செய்து கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்ற அவர் விரும்புவது பலருக்குப் பிடிக்கிறது. ஆனால், அவருடைய பாகிஸ்தான் கொள்கை வழி மறிக்கிறதே, அதற்கு என்ன செய்ய? ராஜாஜி ஓர் உளையில் மாட்டிக் கொண்டு விட்டார். ''அதை விட்டு வெளியே வாருங்களேன்'' என்று மற்றொரு பிரத்யட்சவாதியான முன்ஷி தமது 'ஸோஷல் வெல்பேர்' என்ற பத்திரிகையில் அழைக்கிறார்.



பிரத்தியட்ச வாதிகளுக்கும் லட்சிய வாதிகளுக்கும், நடுவே காங்கிரஸ் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. இந்த இரண்டு கோஷ்டிகளையும் சமாதானப்படுத்தி இசைக்கும் ஒரு சக்தியாக, காந்திஜீ விளங்குகிறார். ஆனால், அற்புதமான சக்தியுடைய அந்த அதிசயச் சிற்பியால் கூடக் காங்கிரஸில் உள்ள இரண்டு அபிப்பிராயங்களையும் சமனப்படுத்த முடியாதபடி செய்துவிட்டது இன்றைய உலக நிலைமை.

1935-ஆம் வருஷத்துப் புதிய அரசியல் திட்டத்தைச் சரியானபடி பயன்படுத்தினால், தேச லட்சியத்துக்குப் பெரிதும் உதவியாய் இருக்கும் என்று பிரத்தியட்ச வாதிகள் (இவர்களில் ராஜாஜி மிகவும் திறமை பெற்றவர்) நம்பினார்கள். 1937-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் மாகாணங்களில் மந்திரி பதவி ஏற்க வேண்டும் என்று காங்கிரஸ் தீர்மானித்ததே, அது இந்தப் பிரத்தியட்ச வாதிகளின் வெற்றியையே காட்டுகிறது. மாகாணங்களில் வெற்றிகரமாகக் காங்கிரஸ் மந்திரி சபைகள் ஆட்சி புரிந்ததும், இந்தப் பிரத்தியட்ச வாதிகளின் களங்கமற்ற உழைப்பால்தான்.

காங்கிரஸ் 1939-ஆம் வருஷம் நவம்பர் மாதம் அந்த மந்திரி பதவிகளை உதறித் தள்ளியது; புதிய அரசியல் திட்டத்தின் சமஷ்டிப் பிரிவு அமுலுக்கு வராமல் அதை வெற்றிகரமாக, தடை செய்தது. காங்கிரஸின் இந்த இரண்டு காரியங்களாலும் ஏற்படவிருந்த அபாயத்தைப் பிரத்தியட்ச வாதிகள் உணர்ந்தே இருந்தார்கள். ஆனாலும், அவர்கள் திக்கற்றவர்களாய் இருந்தார்கள். பதவிகளை விடாமல் யுத்தத்தில் பிரிட்டனோடு காங்கிரஸ் ஒத்துழைத்திருந்தால், மத்திய சர்க்காரின் நிர்வாக அதிகாரம் காங்கிரஸின் கையில் இப்போது இருந்து வரும். 1935-ஆம் வருஷத்து அரசியல் திட்டத்தை ஸ்தம்பித்துப் போகும்படி செய்திராவிட்டால், பிரிவினைவாதிகள் கிளம்பியிருக்கவே மாட்டார்கள். ஆனால், எதை எடுத்தாலும், 'இது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடு உறவாடுதலாகும்' என்று குறை சொல்லி, லட்சிய வாதிகள் எதிர்த்து வந்தார்கள். மத்திய அரசாங்கத்தில் தற்காலிகமான தேசிய சர்க்கார் ஒன்று ஏற்படுத்தினால், தான் பிரிட்டனோடு சேர்ந்து யுத்தத்தில் தீவிரமாக ஈடுபடுவதாக, காங்கிரஸ் மீண்டும் பூனாவில் ராஜாஜியின் தலைமையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. இதுவும் பிரத்தியட்ச வாதிகளின் ஒரு வெற்றியே. ஆனால், மூன்று வாரங்களுக்குள் இந்தத் தீர்மானம் காலாவதி யாகிவிட்டது! 'எந்த யுத்தமுமே கூடாது' என்று ஒரு சத்தியாக்கிரகப் போரை மகாத்மாஜி ஆரம்பித்தார். அதனால், பிரத்தியட்ச வாதிகளுக்கும் லட்சிய வாதிகளுக்கும் நடந்த போராட்டம் ஓய்ந்தது.

சத்தியாக்கிரகக் கைதிகள் வெளி வந்தவுடன், காங்கிரஸில் மீண்டும் ஜீவாதாரமான ஒரு பிரச்சினை எழுந்தது. யுத்தவிஷயத்தில் அஹிம்சையைப் பின்பற்றுவதா அல்லது ஹிம்சையைப் பின்பற்றுவதா என்பதுதான் அந்தப் பிரச்சினை. காந்திஜீ எப்பொழுதும் போலவே பலாத்காரத்தை அடியோடு எதிர்த்தார். பர்தோலியில் ராஜாஜியும் ஜவாஹரும் அஹிம்சையை எதிர்த்தார்கள்; வெற்றியும் அடைந்தார்கள். யுத்த விஷயத்தில் அஹிம்சையைக் காங்கிரஸ் கைவிட்டது. ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் நேர்ந்துள்ள அபாயமே, ஜவாஹரை

ராஜாஜியின் வழியில் போகும்படி தூண்டியது.

ஆனால் ராஜாஜியின் வெற்றி நிலைக்கவில்லை. ஜவாஹரும் ராஷ்டிரபதி ஆஸாதுமே ஸர் கிரிப்ஸுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினார்கள். அந்தப் பேச்சு வார்த்தைகளும் முறிந்தன. பல மாதங்களாக 'எதையும் எதிர்த்துக் கொண்டே இருப்பது' என்ற கொள்கையை ராஜாஜி அடியோடு எதிர்த்து வந்திருப்பதை, அவருடன் பழகிய எல்லாரும் அறிந்திருப்பார்கள். காரியக் கமிட்டியின் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன என்று சொல்லப்பட்டது. ஆனால், காரியக் கமிட்டியின் முடிவுகள் பூரணமானவை அல்ல, மனப்பூர்வமானவை அல்ல என்று ராஜாஜியின் பிற்காலச் செயல்களே நிரூபித்து விட்டன.

ஸர் கிரிப்ஸ் வருவதற்கு முன்பு, பிரத்தியட்ச வாதிகளின் நிலைமையைப் பின் வருமாறு சுருக்கி சொல்லிவிடலாம் :

1. **பிரிட்டன் இந்த யுத்தத்தில் வெற்றிபெறுவதும் ஜப்பானியப் படையெடுப்பைத் தீவிரமாக எதிர்ப்பதும் இந்தியாவுக்கு நன்மை என்றால், பிரிட்டிஷாரின் யுத்த முயற்சிகளுக்குப் பொது ஜனங்கள் ஆதரவளித்துப் பலம் கொடுப்பது அவசியமாகும். தேசபக்தியுள்ள இந்தியர்கள் அனைவருமே, தர்க்க வாதத்துக்கு இடம்தரும் பிரச்சினைகளையெல்லாம் யுத்தம் முடிந்த பிறகு கவனிக்கலாம் என்று ஒதுக்கி வைத்துவிட்டு, இந்த வேலையைச் செய்யச் சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டும்.**

2. **சர்வதேச நெருக்கடியான இந்தக் காலத்தில் கிடைத்த அதிகாரப் பதவிகளையெல்லாம் கைப்பற்றி அவைகளைப் பயன்படுத்திக் கொள்வதை விட்டு, பிரபல தலைவர்கள் ஒதுங்கி நிற்பது கூடாது ; அது தேசத்துக்கே கேடாகும்.**

3. **தேசம் பிளவு படாமல் இருக்க வேண்டுமானால், தேசத்தைப் பயமுறுத்தும் அபாயத்தைத் தடுக்க ஒரு தற்காலிக ஏற்பாட்டின் கீழ் ஹிந்துக்களும் - முஸ்லிம்களும் ஒன்றுபட வேண்டும்.**

**ஆகையால், பதவி ஏற்பதன் மூலம் ஒரு தேசீய சர்க்காரைக் காங்கிரஸ் நடத்த வேண்டும்.**

இந்த உண்மையைப் பலர் ஒப்புக் கொள்ளுகிறார்கள். அந்தப் பலருக்கும் கூடச் சில சந்தேகங்கள் எழுகின்றன. அதனால்தான், அவர்கள் இந்தக் கொள்கையைத் தீவிரமாகப் பிரசாரம் செய்வதில்லை. அவர்களின் சில சந்தேகங்களாவன :

1. **இந்த முயற்சிகளினால் காங்கிரஸில் பிளவுகள் ஏற்பட்டுவிடும்; அதனால் அந்தத் தேசீய ஸ்தாபனம் பலவீனமடையும்.**

2. **தற்போதைய நிலைமையில் காங்கிரஸ் பதவிக்குத் திரும்பினால், அது ஒரு சுதந்தர சக்தியாக இருக்க முடியாமல் போய்விடும். மேலும், வெள்ளையரால் ஓட்டப்படும் ராணுவ அரசியல் இயந்திரத்தின் ஒரு சக்கரமாகவே காங்கிரஸ் மாற வேண்டியிருக்கும்.**

**இந்த இரண்டில் எது நேர்ந்தாலும் காங்கிரஸின் நிலைமை கெட்டுவிடும்.'**

ஆனால், இந்தச் சந்தேகங்களுக்கும் தெளிவான பதில்கள் உண்டு. அச்சுநாடுகள் வெற்றிபெற்றுவிட்டால், காங்கிரஸ் உயிருடன் இருக்கும் என்பது என்ன நிச்சயம்? காங்கிரஸும் பிரிட்டனும் ஒத்துழைக்குமானால், தேசீய இந்தியா பலமடைவதற்கு அவ்வித ஒத்துழைப்பு உதவி செய்யாதா ? ஸர் கிரிப்ஸ் திட்டம் வருவதற்கு முன், நானும் இதே அபிப்பிராயத்தையே கொண்டிருந்தேன். ஆனால், இன்றுள்ள நிலையில் நான் ஏன் பழைய அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு விட்டேன்.

கிரிப்ஸுடன் பேச்சு வார்த்தைகள் நடந்தபோது, முஸ்லிம் லீக்கைத் தவிர, தேசம் முழுவதுமே நாட்டைத் துண்டாடுவதை எதிர்த்தது. ஆனால், ராஜாஜி மட்டும், ஒரே மூச்சில், தேசம் முழுவதற்கும் எதிராக முஸ்லிம் லீக்குடன் சேர்ந்துகொண்டார்! ராஜாஜியின் போக்கு, தேசம் முழுவதற்குமே பிடிக்கவில்லை.

தேசம் ராஜாஜியின் வழியை ஒப்புக்கொள்ளவில்லை. மேலும், அவர் இப்படிச் செய்யத் துணிந்திருக்கும் மர்மத்தையும் எவராலும் தெரிந்துகொள்ள முடியவில்லை. இந்தியத் தேசியத்தின் விரோதிகளான பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் "முதலில் பிரிவினைவாதிகளின் தயவைச் சம்பாதித்துக் கொள்ளுங்கள்" என்று நமக்கு உபதேசிப்பது வழக்கம். ஏன் தெரியுமா? அந்த வழியில்தான் இந்தியத் தேசியம் அடியோடு அழிந்துபோகும். அப்படியிருக்க, ராஜாஜியும் ஏன் அவர்களைப் பின்பற்ற வேண்டும்? முஸ்லிம் லீக்கின் தலைவரை நேரான நியாயமான வழிக்குக் கொண்டுவர முயற்சித்தவர்களுக்கு நேர்ந்த கதியை ராஜாஜி மறந்துவிட்டாரா? ராஜாஜியால் தேசீய முன்னணியைச் சிதைக்க முடியுமானால்தான், அவரை முஸ்லிம் லீக் தலைவர் வரவேற்பார். ராஜாஜியால் அது முடியாவிட்டால், உடனே அவரை ஜனப் ஜின்னா "நீர் யாருக்குப் பிரதிநிதி?" என்று கேட்டுவிடுவார் !

ராஜாஜியின் பதவியேற்புத் திட்டமும் சுலபமாக நிறைவேறிவிடக் கூடியதல்ல. சென்னையில் கூட, காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்ப்புக்கு மாறாகப் பதவி ஏற்க அவருக்குக் காங்கிரஸ் மெஜாரிட்டி கிடைக்காது. ஆகையால், அவருக்கு வேறு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது, ஒரிஸாவில் பண்டித கோவிந்த மிஸ்ரா செய்ததே போல, சட்ட சபையிலுள்ள இதர கட்சிகளின் உதவியைக் கொண்டு காங்கிரஸுக்கு விரோதமாகக் கிளர்புவதுதான். இம்மாதிரி ராஜாஜி செய்ய மாட்டார். பிறகு, அவர் என்னதான் செய்வார் ?

ராஜாஜி கைக்கொண்டிருக்கும் முறையின் தாரதம்மியங்களைப் பரிசீலனை செய்யப் புகாமலே, நான் வேறு ஒரு வழியைக் காட்ட நினைக்கிறேன்.

சுதந்தர இந்தியாவின் பிரதிநிதி என்ற தன்னுடைய கௌரவத்துக்குப் பங்கம் வராமல், சுதந்தர மின்றிப் பிரிட்டனுடன் ஒத்துழைக்க முடியாதென்ற வழியையே, காங்

கிரஸ் பின்பற்றும்படி விட்டுவிடலாம். இந்தக் கொள்கையை ஒப்புக் கொள்ளாதவர்களெல்லாம், சர்க்காரின் யுத்த முயற்சிகளுடன் தீவிரமாக ஒத்துழைக்கலாம்.

ஆனல், இங்கேயும் பிரிட்டிஷாரின் கண்மூடித்தனமான மனேபாவம் நம்மைக் குறுக்கிடுகிறது. இந்த நாட்டின் ஆதரவை, பிரிட்டிஷார் நாடத்தான் நாடுகிருர்கள்; ஆனல் ஜனங்களின் திறமையையல்ல. ஏனெனில், திறமை தங்களிடமே ஏராளமாய் இருக்கிறதாம்! பிரிட்டிஷாரின் ஏகாதிபத்திய வேலைகளுக்குப் பயன்படும் 'ஜனத் தலைவர்' களையே அவர்கள் விரும்புகிருர்கள். என்ருலும், ஒரு மனிதன் என்னதான் திறமை உள்ளவனுயிருந்தாலும், அவனை ஆதரிக்கும் கட்சி ஒன்று இல்லாவிட்டால், அவனல் அவர்களுக்குப் பயன் இல்லை. பிரிட்டிஷ் சர்க்காரின் அரசியல் இயந்திரமோ நூதன சக்தியைப் பெற்றிருக்கிறது. அதனுடன் ஒத்துழைக்கும் எந்த இந்தியனையும், அது தன் ஏகாதிபத்திய மனேபாவத்துடன் இணைத்துவிடுகிறது.

உதாரணமாக, திரு. ஆனேயின் தேசபக்தியை எவரேனும் சந்தேகிக்க முடியுமா? அவரே மாறிப் போய் இருக்கும் கோலந்தான் என்ன! பர்மாவில் இருந்த பிரிட்டிஷ் அதிகாரிகள் காட்டிய நிறத்துவேஷத்தைப்பற்றி, ஜவாஹரும் பண்டித குன்ஸ்ருவும், பட்டவர்த்தனமாகவும் சுதந்தரமாகவும் கண்டிக்க முடிந்தது. ஆனல், திரு. ஆனேயோ, தம் 'எஜமானர்' களின் உத்தரவுப்படியே பேசவேண்டியிருந்தது.

இந்தியாவின் ஐக்கியத்தைச் சிதைக்கும் திட்டத்துக்கு ராஜாஜி ஆதரவு அளிக்காமல் இருந்தால், காங்கிரஸிலும் வெளியேயும் அவருக்கு ஒருவேளை மிகுந்த ஆதரவு கிடைக்கக்கூடும்.

ராஜாஜி மகா புத்திக்கூர்மையுள்ளவர். இந்த உருப்படாத திட்டத்துக்கு மாற்றையும் அவரே கண்டுபிடிக்க வேண்டும்.

ராஜாஜியால்தான் அது முடியும். ஆனல், அவர் செய்வாரா?

---

# நாகரீகம் கெட்ட கேடு

ரவீந்திரநாத தாகூர்

> கவிதிலகரான தாகூர் காலமாகி ஒரு வருஷமாகிறது. நாடெங்கும் அவரை நினைவுகூற வேண்டிய நேரம் இது. அன்பு நிலயத்தார் இச்சமயம் தாகூர் நினைவு மலராக அவருடைய வரலாறு ஒன்றை வெளியிடுகிருர்கள். சுவாமி சுத்தானந்த பாரதியாரால் இனிய தமிழில் எழுதப்பட்டது அந்த நூல். அதில் ஓர் அத்தியாயம் இந்தப் பிரசங்கம். தமது எண்பதாவது வயது நிறைவின் போது, மேனுட்டுக்குக் கவிஞர் தாகூர் விடுத்த எச்சரிக்கை அது.

இன்று எனக்கு எண்பது வயதாகிறது. எனது நீண்ட வாழ்வையும் அனுபவத்தையும், உலகப் போக்கையும் கவனிக்கும் போது, மனம் திகைக்கிறது. நாம் ஆங்கிலேயர் மூலம், விரிந்த உலகுடன் உறவு கொண்டோம். அக்காலம் நாம் ஆங்கில இலக்கியத்தையே கண்டு மயங்கினேம். பர்க்கின் பேச்சும், மெக்காலேயின் எழுத்தும், ஷேக்ஸ்பியர் நாடகமும், பைரன் கவியும், பத்தொன்பதாம் நூற்ருண்டின் ஆங்கில அரசியல் விவகாரமும் படித்து மயங்கினேம். தமது சுதந்தரத்துக்காக அவ்வளவு போராடிய ஆங்கிலேயரின் நேர்மையில் நமக்கு நம்பிக்கையிருந்தது. நாமும் விடுதலைக் கிளர்ச்சி செய்தோம்; என்ருலும் ஆங்கிலேயரிடம் நமக்கோர் அபிமானம் இருந்தது. நம்மை அடக்கியாளும் அவர்களே ஒரு நாள் நமக்கு விடுதலை தருவார்கள் என்று நம்பியிருந்தோம். மற்ற நாடுகளில் சுதந்தரத்துக்காகப் போர்புரிந்து புகலடைந்த வீரரை ஆங்கிலம் வரவேற்றுக் காப்பாற்றியதைக் கண்டோம். ஆங்கிலேயரின் நேரிய ஒழுக்கத்தைக் கண்ட நான், அவர்களை மிகவும் உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றினேன். அக்காலம் சுயேச்சாதிகாரச் செருக்கு ஆங்கில அரசியலை மாசுறுத்தவில்லை. அச்சமயம் நான் ஒரு பையன்; சீமையில் படித்தேன்; ஜான் பிரைட், பார்லிமெண்டிலும் பொது மேடையிலும் பேசுவதைக் கேட்டேன்; அப்பேச்சின் சுதந்தரவுணர்ச்சி இன்னும் என் உள்ளத்தில் உள்ளது. ஆங்கில இலக்கியம் இன்னும் நமது உள்ளத்தை அள்ளுகிறது. 'அன்னியராயினும் அவர்களும் மனிதர்; மனிதருக்குரிய உரிமையை நமக்கு மறுக்க மாட்டார்கள்; அறிவுள்ள நாகரிக மனிதர்' என்று நான் நம்பினேன். என் வாழ்வின் முதல் அத்தியாயம் இப்படிச் சென்றது.




பிறகு, எனது நம்பிக்கை தளர்ந்தது. பெரிய நாகரிகம் படைத்த நாட்டாரிடம் உள்ள சுயநலத்தைக் கண்ணுரக் கண்டேன். வெறும் இலக்கிய மோகத்தினின்று நான் விடுபட்டேன். என் விழி திறந்தது; கனவொழிந்தது. நம் நாட்டு ஏழை

களின் பரிதாபம் எனது நெஞ்சைப் பிளந்தது. வேறெந்த நாட்டிலும் வாழ்வுக்குத் திண்டாடும் இந்த வறுமை கிடையாது. இருப்பினும் நமது இந்த நாடுதான் ஆங்கிலேயரின் செல்வச் செழிப்பை ஊட்டியது. நம்மை அவர்கள் வெகு அலட்சியம் செய்கிறார்கள். ஆங்கிலேயர் இயந்திரத் திறமையால் இந்த நாட்டை அடக்கியாளுகிறார்கள்; இயந்திரங்களின் நுட்பம் இந்தத் திக்கற்ற நாட்டுக்குத் தெரியாமல் மூடி வைத்திருக்கிறார்கள். நமது கண்முன் ஜப்பான் செழித்து வளர்வதைக் காண்கிறோம்; அது தற்கால அறிவைப் பயன்படுத்தி முன்னேறும் அற்புதத்தை நான் கண்டேன். நான் மாஸ்கோவில், ஸோவியத் ருஷ்யாவின் சுறுசுறுப்பான முன்னேற்றத்தைக் கண்டேன். கல்வியும் தொழிலும் உரிமையுணர்ச்சியும் அங்கே அபாரமாக வளர்ந்து, மடமையிருள், வறுமைத் துயர், கீழ்மையுணர்ச்சி ஆகிய இவை அடியோடொழிந்தன. அதன் நாகரிகத்தில் சாதி, வகுப்பு வேறுபாடே கிடையாது. முன்னேறிச் செழிக்கும் நாடுகளையெல்லாம் நான் கண்ணாரக் கண்டேன். நமது நாடு வரவரப் பொலிவிழந்து வாடி அலங்கோலமாவதைக் கண்டு பரிதவிக்கிறேன். மற்ற நாடுகள் ஐக்கியத்தால் சிறக்கின்றன; நமது நாடு அன்னியக் கொள்ளையால் வருந்துகிறது. முன்னேறும் நாடுகள்முன், இந்தியா பிரிட்டிஷ் ஆட்சிச் சுமையால் அழுந்தி நொந்து இன்னது செய்வதென்று தெரியாமல் திகைக்கிறது. சீனத்தின் வாழ்வையும் அபினி மயக்கம் ஊட்டிக் கெடுத்தார்கள். ஜப்பானும் மண்வெறிகொண்டு சீனத்தை விழுங்குகிறது. ஸ்பெயின் குடியரசுக்கு நேர்ந்த துன்பத்தையும் நான் கண்டேன். நமது நாட்டின் பரிதாபம், பரிதாபம்! அன்னிய ஆட்சியின் துரதிட்டம் நம்மைப் பிடித்தாட்டுகிறது. மனிதவாழ்வுக்கு அவசியமான சோறும், உடையும், கல்வியும், வைத்திய உதவியும்கூட நமக்குச் சரியாகக் கிடைக்கவில்லை; அத்துடன் நம்மிடையே கிளர்ந்த வகுப்பு வேறுபாடுகளும் கலகங்களும் கண்டு மனம் தாளவில்லை. பிரித்தாளும் சூழ்ச்சியே நம்மைப் பிரிக்கிறது. மேலிருந்து யாரோ வகுப்புக் கலகங்களைத் தூண்டி, நம்மை என்றும் அடிமைப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.



ஜப்பானைவிட நமது நாடு தாழ்ந்ததில்லை. அது சுதந்தரமாயிருக்கிறது; இது ஆங்கிலேயருக்கு அடிமையாயிருக்கிறது - இதுவே வித்தியாசம். ஐரோப்பிய நாகரிகத்தின் உயிர்நாடி உரிமை. மனிதருக்கு மனிதர் சமவுறவு. நமக்கு அது இரண்டையும் மறுக்கிறது. தடிகொண்டு சட்டம் செலுத்தும் போலீஸ் ஆட்சியே நமது தலைவிதியானது. மனித சமுதாயத்தில் அமைதியும், ஐக்கியமும் உண்டு பண்ணுவதே நாகரிகம். இங்கோ பிரிவினைச் சண்டைகள், காலிகளின் கொட்டம் - இவை சட்டத்தை மீறிக் கிளம்புகின்றன. காட்டுமிராண்டித்தனமான வகுப்புக் கலகங்கள் அதிகரிக்கின்றன. பார்க்கவே வெட்கமாயிருக்கிறது. காட்டுமிராண்டித்தனம் போர்ப்புயலாகக் கிளம்பி, அங்கே மனிதரைக் கொன்று குவிக்கிறது! இதுவா நாகரிகம்! ஒருநாள் ஆங்கிலேயர் இந்தியாவை விட்டுச் செல்லவே நேரிடும்; அப்போது துன்பக் காடான இந்தியாவே அவர்கள் பின்னாலிருக்கும். ஒரு நூற்றாண்டு ஓடிய ஆங்கில ஆட்சி வற்றிப்போன பிறகு, வெறும் மண்ணும், சகதியுந்தான் மிஞ்சும்! ஒரு காலம் நான் ஐரோப்பிய உள்ளத்தில் நாகரிக ஊற்று எழும் என்றிருந்தேன். நான் உலகை விட்டுச் செல்லப்போகும் இப்போது, அந்த நம்பிக்கை போயே போய்விட்டது. என்னைச் சுற்றிலும் அந்த நாகரிகத்தின் குட்டிச் சுவர்களையே காண்கிறேன். ஆனால், நான் மனிதனிடம் நம்பிக்கையிழக்க மாட்டேன். இந்தப் பிரளயம் ஒழிந்த பிறகு, மனித வாழ்வு புதுமை பெறும்; சேவையும் தியாகமும் உலகைப் பாவனமாக்கும் என்றே நம்புகிறேன். அந்த அருணோதயம் கிழக்கிலிருந்தே வரும். மனிதன் மண்வெறிகளையும், உலகைக் கட்டிப் பலாத்காரமாக ஆளும் பேராசையையும் விட்டு, மனிதத் தன்மையுடன் நடக்கும் நாள் வரும் என்றே எதிர்பார்க்கிறேன். இன்று நாம் காணும் அபாயங்களூடும், வல்லரசுகளின் அகம்பாவக் கொடுமைகளூடும், ஒரு ரிஷி வாக்கின் உண்மை எனக்கு நம்பிக்கையை ஊட்டுகிறது: “அதர்மத்தால் மனிதன் இலாபம் அடையலாம்; பகைவரை வென்று தழைக்கலாம். ஆனால், முடிவில் அதர்மன் வேரோடழிகிறான்.”

---

லண்டன் பொருட் காட்சிச் சாலைக்குச் சென்ற ஒரு பெண் அங்கேயிருந்த காண்டா மிருகத்தைப் பார்த்து, காவலனை ஒரு சந்தேகம் கேட்டாள்: “இந்தக் காண்டா மிருகம் ஆணா, பெண்ணா?”

**காவலன்:** “அந்தக் கவலை நமக்கு எதற்கு, அம்மா? இன்னொரு காண்டா மிருகம் அல்லவா அது பற்றிக் கவலைப்படவேண்டும்?”

## ஜப்பானியர் எச்சரிக்கை

ஜப்பானியர் தங்கள் அரசரான மிக்காடோவைக் கடவுளாகவே மதிக்கிறார்கள். 1936-ஆம் ஆண்டு அமெரிக்காவின் பிரபல வாரப் பத்திரிகையான ‘டைம்’ பத்திரிகையின் அட்டையில் ஜப்பானிய அரசரான மிக்காடோவின் புகைப் படத்தைப் பிரசுரித்தார்கள். “யாரும் இந்தப் பத்திரிகையைத் தலைகீழாகப் பிடிக்காதீர்கள். படத்தின் மேல் எதையும் வைத்துவிடாதீர்கள்” என்று வாசகர்களுக்கு வேண்டுகோள் செய்துகொள்ளும்படி, ‘டைம்’ ஆசிரியர்களை ஜப்பானியர் அப்போது எச்சரித்தார்களாம்!

* *

பிரஞ்சுப் பார்லிமெண்டில் ஒரு சமயம் பெண் உரிமை பற்றிய ஒரு மசோதா வந்தது. “பார்க்கப்போனால், ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள வித்தியாசம் அற்பமே யாகும்” என்று ஓர் அங்கத்தினர் பிரசங்கித்தார்.

உடனே மீதி அங்கத்தினர் அனைவரும், சொல்லிவைத்தாற்போல் எழுந்திருந்து, “அந்த வித்தியாசம் நீடூழி வாழ்க!” என்று கோஷித்தார்களாம்!

# புத்தக உலகம்

**தேவ ஜீவனம்** (முதற்பாகம்): ஸ்ரீ அரவிந்தர் அருளியது. தமிழ்ப் படுத்தியவர்: ஸ்ரீ சுவாமி சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர்: அன்பு நிலயம், இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. விலை ரூ. 1—0—0.

"என் காலத்திலே, வெளியான மகா உயர்ந்த புத்தகம் இதுதான் என்று நான் உண்மையிலே மிகவும் மனப்பூர்வமாய் மதிக்கிறேன். மிக அரிய சில பொருள்களை அதனின்றும் நான் கற்றேன். இவற்றை முன்னமே அறியாமல் போனேனே என்ற எண்ணமும் உண்டாகிறது.........இந்த யுத்தம் கோரநாசம் புரிகிறது. மதத்தின் அவசியத்தை முன்னெப்பொழுதையும் விட அதிகமாய் இன்று மக்கள் உணர்ந்து வருகிறார்கள். தேவ ஜீவனம் மிகச் சரியான காலத்தில் வெளிவந்திருக்கிறது. அதன் பெருமைதெரியச்சில காலமாகும். ஆனால், நிச்சயம் அதற்குச் செல்வாக்கு ஏற்பட்டுத்தான் தீரும்" என்று, பிரபல ஆராய்ச்சியாளர் ஸர் பிரான்ஸிஸ் யங்ஹஸ்பண்டு, சில நாளைக்கு முன், அரவிந்தரின் இந்த மூல நூலைப் பாராட்டி யுள்ளார்.

ஸ்ரீ அரவிந்தர் ஒரு விதத்தில் நம்முடைய புராதன ரிஷிகளைப்போன்றவர்; மற்றொரு விதத்தில் அந்த ரிஷிகளை விளக்கும் பாஷ்யகாரர்களைப் போன்றும் இருக்கிறார். புராதன ரிஷிகளின் அருள்மொழிகளுக்கு, ஸ்ரீ அரவிந்தர், புதுவிளக்கம் செய்கிறார். அதிலே புதிய அருள் ஒளி யொன்று ஜோதி வீசுகிறது. அருள் வாக்கை விளக்க வந்த அருள் வாக்கு அவருடையது.

> "தெய்வ நிறைவும் தேவ ஜீவனமும் பெறுதலே மானிட வாழ்வின் நோக்கமாகும். மனிதன் தெய்வ சிகரத்துக்கு உயர வேண்டும்"

என்பதுதான் அவருடைய சித்தாந்தத்தின் மூலக் கொள்கை. ஆனால், அது முடியுமா? என் முடியாது? அவர் சொல்லுகிறார்:

> "குரங்கு முற்றி மனிதன் ஆனதாக, டார்வின் சொல்லுகிறார். மனித நிலையை, ஒரு காட்டுக் குரங்கு ஊகிக்க முடியாது; தனது வர்க்கமே இப்படி மனிதராகி, அறிவு பெருகி, இயற்கையை வென்று, காடு திருத்தி, வீடு அமைத்து, கப்பல், ரயில், ஆகாய விமானம், தந்தி முதலிய சாதனங்களுடன் நாகரிகமாய் வாழ்வதென, குரங்கு அறிய முடியாது. அது போலவே, அறிவு முதிர்ந்த தெய்வ மானிடத்தின் பூரண நிலையை, சாதாரண மானிடன் அறிய முடியாது."

மனிதன் அமரனை வழி காட்டுவதுதான் அரவிந்த சித்தாந்தம். உலகம் மாயை என்ற மாயாவாதத்தை அவர் வெறுக்கிறார். உலகிலேயே தெய்வ ஒளி வீசும் சூட்சுமத்தை, அவர் போதிக்கிறார். அவருடைய ஞானி, உலகத்தைப் பொய் என்று துறந்து ஒதுக்க மாட்டான்; கூடாது. பொய்யான உலகத்தைத் துறப்பது எப்படி? அந்தத் துறவும் பொய்தானே?



யோகி அரவிந்தர்

> "கடவுளே உலகை மேற்கொண்டு நடத்துகிறார். அப்படி யிருக்க, நாம் மட்டும் அதை அலட்சியம் செய்வது அகம்பாவமாகும்."

> "நாம் ஏழடுக்கு மாடியேறிவிட்டோமென்றாலும், கீழே யுள்ள அஸ்திவாரத்தை மறக்க முடியாது. எவ்வளவு ஞானசித்தி பெற்றாலும், உடல் உயிர் மனத்தை வெறுக்கக் கூடாது. மூன்றையும் தெய்விக மாறுதல் பெறச் செய்ய வேண்டும்."

> "ஞானதீரர்கள் ஒதுங்கி நின்றால், உலகம் அஞ்ஞானக் காடாகும். ஆத்ம சித்திபெற்றவீரர்கள் உலகவாழ்வைப் பொலிவுறப் போற்ற வேண்டும்."

இதுதான் அரவிந்த தர்சனத்தின் அடிப்படைக் கொள்கையாகும். மனிதன் அமரனாகும் லட்சியத்தை அடைவதற்கு வேண்டிய பல தத்துவங்களையும் சிருஷ்டி ரகசியத்தையும், அவர் இந்த நூலில் அற்புதமாய் விளக்கி யிருக்கிறார்.

அரவிந்தரின் ஆங்கில மூல நூலைக் கண்டவர்கள், அதன் கவிதை, யழகையும் சூட்சுமக் கருத்துக்களையும் நோக்கி, மனந்திகைத்து மலைத்துவிடுவ துண்டு. அப்பேர்ப்பட்ட நூலின் உட்கருத்தை, மிக அழகிய நடையில், எளிய வாக்கியங்களில், சுவாமி சுத்தானந்த பாரதியார் வெற்றியுடன் தமிழ்ப்படுத்தி யிருக்கிறார். சுத்தானந்தரின் நடைக்கு உரியதொரு தனித்தன்மை, இத்தகைய தத்துவ தர்சனங்களை விளக்குவதற்காகவே ஏற்பட்டதோ என்று நினைக்கும்படி அவ்வளவு அழகாய் இதில் ஒளிர்கிறது.

அரவிந்தரின் உபதேசங்களையும் யோக தர்சனங்களையும் தமிழ் நாட்டில் பரப்ப, ஸ்ரீ சுத்தானந்தர் எப்போதுமே சிறந்த தொண்டு புரிந்துவருகிறார். அதனுளெல்லாம் மிகச் சிறந்தது இந்தத் **தேவ ஜீவனம்** என்று சற்றும் தயங்காமல் கூறலாம். இந்த முதல் பாகத்தைத் தமிழர் ஏராளமாய் ஆதரிக்க வேண்டும்; இரண்டு மூன்றும் பாகங்கள் சீக்கிரம் வெளிவர வேண்டும். இதுவே நம் ஆசையும் வாழ்த்துமாகும்.

பாலர் கதை :




'நீலா'

நான் இப்போது ரொம்பக் கிழம் ஆகிவிட்டேன். எத்தனையோ கண்டாயிற்று; எத்தனையோ கேட்டாயிற்று. எனக்கு எல்லாம் சகஜம் ஆகிவிட்டது. ஒன்றிலும் ஆச்சரியமில்லை. காமாட்சி என்னை இன்று ஒரு மேஜைக் காலுக்குக் கீழே வைத்து, அதைச் சமமாய் நிற்கச் செய்தாள். அதுகூட எனக்கு அதிசயமாயில்லை. நான் என்ன கிழடு தானே!

சுந்தர மாமா ஒருநாள் என்னை வாங்கிவந்தார். காமாட்சிக்குப் பரிசாய்க் கொடுத்தார். அருமையான சந்தனப் பெட்டியில் வெல்வட்டு மெத்தையில், என் வெள்ளி உடம்பு மினுமினுக்க, அப்போது நான் ஒய்யாரமாய்ப் படுத்திருந்தேன். காமாட்சி என்னைப் பார்த்ததும், வாயைப் பிளந்து விட்டாள். அவ்வளவு ஆச்சரியம் அவளுக்கு!

'சடக்' கென்று என்னை அவள் தன்கையில் எடுத்தாள். ஐயே! அவள் நக இடுக்கெல்லாம் ஒரே அழுக்கு! விரல் எல்லாம் பெப்பர்மிண்ட் நாற்றம்! அது எனக்குப் பிடிக்கவே யில்லை. இருந்தாலும், ஒருநாள் மத்தியானம் முழுவதும் அவளுடைய விரலிலேயே நான் குந்தியிருக்க வேண்டியதாயிற்று.

பட்டுச் சொக்காயா அவள் தைத்தாள்? இல்லை. ஒரு பெரிய சிலந்தியைப் பிடிக்க வலை பின்னத் தொடங்கிவிட்டாள். வலை பின்னியதுதான் மிச்சம். சிலந்தி அவளை ஏமாற்றி, ஓடிப்போய்விட்டது. காமாட்சி இதோடு என்னை உள்ளே வைத்து விட்டாள்.

அடுத்த தடவை என்னை அவள் தூக்கியபோது, "இன்று ஏதாவது பூப் போடுவாளாக்கும்" என்று ஆசையாயிருந்தேன். சிவப்புநூலும் மஞ்சள் நூலும் பச்சைநூலும் ஊதா நூலும் நீல நூலும் பார்க்கலாம் என்றிருந்தேன். ஆனால், ஏதோ பொம்மை விளையாட்டாம். ஒரு பொம்மைக்கு என்னைக் காப்பி டம்ளராக வைத்துவிட்டாள். என்னவோ புளியங்காயை அரிந்து எனக்குள்ளே போட்டு விட்டாள். நான் அங்குஸ்தான் இல்லையா? எத்தனை நாழி தலைகீழாய் இருப்பது? மெள்ளக் கவிழ்ந்தேன். காமாட்சியின் கையெல்லாம் 'பிசுக்குப் பிசுக்' கென்று புளியஞ் சாறு ஆகிவிட்டது.

இப்படியெல்லாம் வேலை கெட்ட வேலையிலெல்லாம் போட்டு வாட்டினாளே, இதனுடன் போச்சா? இன்னும் ஒரு கஷ்டம் வந்தது. என் சந்தனப் பெட்டியின் வெல்வட்டு மெத்தை போயிற்று. அதை ஏதோ நகைப் பெட்டியாக உபயோகித்துக்கொண்டாள். நான் ஒரு சாக்கலேட் பெட்டியில் போய்க் குடியேற வேண்டியதாயிற்று. "பேஷ்! ஏராளமாய்ச் சாக்கலேட் தின்று கொண்டிருக்கலாமே" என்று எண்ணுகிறீர்களா? அதுதான் இல்லை. அங்கே எனக்குக் கிடைத்த நண்பர்களின் பெருமையைச் சொல்லத்தரமன்று. காதறுந்த ஊசி, வாடிப்போன பூ, சிலேட்டுக்குச்சி, உடைந்த பென்ஸில் முனை, மண்ணுங்கட்டி, தெருப்புழுதி எல்லாம் அதில் இருந்தன.

கொஞ்சநாளைக்கு அப்புறம் காமாட்சிக்கு ஒரு தம்பிப் பாப்பா பிறந்தது. அதற்கு ஒரு குல்லா பின்னினாள். என்னை உபயோகித்தாள். எனக்கு அந்தவேலை ரொம்பச் சந்தோஷமாய் இருந்தது. பிறகு, ரேடியோப் பெட்டிக்கு உறை தைத்தாள். அதுவும் பாதகமில்லை. ஆனால், இதோடு என்னைக் கைதவறி, கொல்லையிலே பூச்செடிக்குக் கீழே போட்டுவிட்டாள். நான் அழுதேன். ஒரு வண்டு மெள்ள என்னிடம் வந்தது. என்னைத் தன் வாசஸ்தலம் ஆக்கிக் கொண்டுவிட்டது.

அப்புறம் வெகு நாள் கழித்து, காமாட்சி என்னைக் கண்டெடுத்தாள். முத்தமிட்டுக் கொஞ்சினாள். அப்போதுதான் எனக்கு அவளுடைய அன்பு தெரிந்தது. களிப்படைந்தேன்.

பிறகு, அவள் அப்பாவுக்கு மேஜைச் சவுக்கங்கள் தைத்தேன். பொம்மைகளுக்கெல்லாம் சட்டைகள் தைத்திருக்கிறேன். எத்தனையோ உறைகள், எத்தனையோ வேலைகள்! இப்போது நான் சந்தோஷமாயிருக்கிறேன். பட்டுப் படுக்கையிலே சந்தோஷமில்லை. எல்லாருக்கும் வேலை செய்கிறேன், எல்லாரும் என்னை நேசிக்கிறார்கள். இதிலேதான் சந்தோஷம் இருக்கிறது. இதை நான் இப்போது கண்டுபிடித்து விட்டேன்.

—




**சிரிப்புக் கிளர்ச்சி:** சிரிப்புப் படங்கள் அதாவது தமாஷ் படங்கள் நிறைய வேண்டுமென்று கல்கத்தாப் பத்திரிகைகள் பிரமாதமாய் எழுத ஆரம்பித்திருக்கின்றனவாம். ஆனல் அது நடக்குமா? முதலாளிகள் ஏராளமாய்க் 'கிளிஸரைன்' வாங்கி வைத்திருக்கிருர்களே; அதெல்லாம் கண்ணீராய்ச் செலவழிந்து தீரக் கொஞ்ச நாளாவது ஆகாதா? ஆகையால், இன்னும் கொஞ்சநாள்வரையில் 'அழுகைப் படங்கள்' தான் வந்து கொண்டிருக்குமாம்! வங்காளிகள் சற்று மன இளக்கமுடைய ஜாதிதான். அடுத்தபடி தமிழனையும் சொல்லலாம். ஒரு நல்ல தமாஷ் படம் தமிழில் எங்கே வந்திருக்கிறது? என்னென்னவோ வந்திருக்கிறது. ஆனல், கலப்பற்ற குதூகலமும் கேலியும் நிரம்பியது ஒன்றுமில்லே. சோகத்துக்கு ஆழ்ந்த சக்தி யிருக்கிறது. உண்மை. ஹாஸ்யத்துக்குமட்டில் இல்லேயா? நம்முடைய பல சில்லறைக் குறைகளேக் களங்கமற்ற ஹாஸ்யம் வெகு சுலபத்தில் தகர்த்தெறிந்துவிடும். உலகமே நிலேதடுமாறி நிற்கும் இந்தச் சமயம்தான் ஹாஸ்யம் மிகவும் அவசியம். உயர்தரமான ஹாஸ்யம் வேண்டும். யாராவது கவனிப்பார்களா?

*　　　　*

**சினிமா உதவி பாங்கி:** சினிமாத் தொழிலுக்கு உதவி செய்வதற்கென்றே 'அஸோஷியேடட் பாங்கிங் கார்ப்பொரேஷன்' என்ற பெயருடன் ஒரு பாங்கி ஆரம்பிக்க, திரு. எம். ஏ. பஜல்பாய் ஏற்பாடு செய்திருக்கிருராம். திரு. காஸாமாலிமுஞ்சி நாதூவும் அதில் ஒத்துழைப்பாராம். 25 லட்ச ரூபாய் முதலுடன் அது ஆரம்பமாகும். சர்தார் சாந்துலால் ஜே. ஷா, திரு. மாணிக்கலால் சூனிலால் ஆகிய இருவரும் அந்த பாங்கியில் டைரக்டர் பதவி வகிக்க இசைந்துள்ளார்களாம்.

**ஆராய்ச்சி மணி** அல்லது மனு நீதிச்சோழன் என்ற படம் பல நகரங்களில் வெற்றிகரமாய் ஓடிக் கொண்டிருக்கிறது. பி. பி. ரங்காச்சாரி, சந்தானலட்சுமி, கிருஷ்ணன், மதுரம் ஆகியவர்கள் முக்கிய நடிகர்கள். கந்தன் ஸ்டூடியோவில் ராஜா ஸாண்டோவால் டைரக்ட் செய்யப்பட்டது.

*　　　　*

**மனேன்மணி:** இதன் காட்சி ஜோடனைகள் கண்ணேப் பறிக்கின்றனவாம். அழகில் சிறந்த ராஜகுமாரி நடிக்கிருர். சுந்தரம் டைரக்ட் செய்கிருர். சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் பூர்த்தியாகி வருகிறது. 11 ஆயிரம் அடி உத்தரவுக்கு விலக்குவாங்கிய படம்.

*　　　　*

**பிலிம் சேம்பர்:** தென்னிந்திய பிலிம் சேம்பர் ஆவ் காமெர்ஸ் சபைக்கு புதிய உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள். திரு. எச். எம். ரெட்டி தலேவர். திருவாளர்கள் எம். டி. ராஜன், ஜீ. ராமப்பிரம்மம், ஜித்தன்பானர்ஜீ, மோய்லான் நால்வரும் உப தலேவர்கள். மிஸ். ஸி. எ. ராதாபாய், டி. வி. நீலகண்டம் இருவரும் காரியதரிசிகள். எஸ். எ. சுவாமிப் பிள்ளே பொக்கிஷதார்.

*　　　　*

**வர்த்தக மெம்பர் பேட்டி:** இந்திய சர்க்காரின் வர்த்தக மெம்பரான ஸர். எ. ராமசாமி முதலியாரைச் சில வாரங்களுக்குமுன், தென்னிந்திய பிலிம் சேம்பரின் தூதுக் கோஷ்டியார் பேட்டிகண்டு, ஒரு விண்ணப்பம் செய்துகொண்டார்கள். 11 ஆயிரம் அடி விதியை வரும் ஒரு வருஷ காலத்துக்காவது தென்னிந்தியா சம்பந்தப்பட்ட மட்டில் 14 ஆயிரம் அடியாக மாற்றவேண்டும் என்றும், முக்கியத் தீர்மானங்கள் எதையும் செய்யுமுன் தங்கள் அபிப்பிராயத்தையும் இந்திய சர்க்கார் கேட்க வேண்டு மென்றும் அந்த விண்ணப்பத்தில் குறித்திருந்தார்கள்.

*　　　　*

**கச்சா பிலிம் பிரச்னே:** கச்சா பிலிமை ஸ்டூடியோக்களேத் தவிரத் தனிப்பட்ட முதலாளிகளுக்கு ஸப்ளே செய்யக் கூடாதென்று கோடக் கம்பெனியாருடன் பம்பாய்க்காரர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார்களாம். தென்னிந்திய நிலேமை வேருும். ஆகையால், கோடக் கம்பெனியாரின் கிளேக் காரியாலயத்தாருடன் தென்னிந்திய பிலிம் சேம்பர் கடிதப் போக்குவரத்து நடத்தியது. அதன் விளேவாக, தனிப்பட்டவர்களுக்கு வஞ்சனேயின்றிக் கச்சா பிலிம் சப்ளே செய்ய கோடக் கம்பெனியார் இசைந்துள்ளார்களாம்.

*　　　　*

**உண்மையா:** "சென்ற வாரம் 60 லட்சம் அடி கச்சா பிலிம், பம்பாய்க்கு வந்துசேர்ந்தது. அதில் 45 லட்சம் அடியை இந்திய சர்க்கார் தங்களுக்கென்று ஒதுக்கிவைத்துக் கொண்டார்கள். மிச்சம் 15 லட்சம் அடியைப் பற்பல உற்பத்தி முதலாளிகளுக்கும் வழங்கும்படி வெளியிட்டிருக்கிருர்கள். அந்த உற்பத்தி முதலாளிகளோ 45 பேர் இருக்கிருர்கள்" என்கிறது 'மிர்ரர்.'

---

### மரியாதை முறை!

**போஸ்டன் அட்வர்ட்டஸர்** என்ற பத்திரிகையின் ஆசிரியர் ஒருவர், எட்வர்ட் பி. மிட்சல் என்ற நிருபருக்கு ஒரு நாள் ஒரு யுக்தி சொல்லிக் கொடுத்தார்.

உள்ளூர் நகர சபையை மிகக் கடுமையாக ஒரு சமயம் மிட்சல் தாக்கியிருந்தார். அதைப் பார்த்ததும், அந்த ஆசிரியர் சொன்னதாவது: "இது சரியல்ல. இத்தனவது தொகுதி அங்கத்தினர் அத்தனேபேரும் புத்தியற்ற கழுதைகளாய் இருக்கலாம். ஆனல், அப்படியே எழுதிவிடக்கூடாது. 'அத்திபூத்தாற்போல் ஒரே ஒருவர் நீங்கலாக, இத்தனவது தொகுதி அங்கத்தினர் அத்தனேபேரும் புத்தியற்ற கழுதைகள்' என்று தான் நீங்கள் எழுதவேண்டும். அப்படிச் செய்தீர்களானல், அவர்களில் ஒருவர்கூடக் கோபித்துக் கொள்ள மாட்டார்கள்."

சுகாதார முறையில் தகுந்த வசதிகள்
குறைந்த சார்ஜு
[மர் வியாபாரம்]

M. செல்லய்யா பிள்ளை
அண் கோ.,

## டிராவலர்ஸ் ரூமில்

தங்குங்கள்

மெயின் ரோட்டில் உள்ளது — —
S. I. Ry. அவுட் ஏஜன்ஸி, பஸ் ஸ்டாண்டு, ஹோட்டல்கள், பஜார் எல்லாவற்றிற்கும் வெகு சமீபம்.

கோவிலூர் ரோடு, காரைக்குடி

---




---

## உயர்ந்த வைரங்கள்

புதுமாதிரி வைர நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

உ. அ. அரு. அருணசலம்
செட்டியார்

வைர வியாபாரம்

கல்லுக்கட்டி, காரைக்குடி

---



Shoe
Specialists

**CHROMECO AGENCY**

NEXT TO GOKHALE HALL

---




உயர்தரமான இலைகளைப் பொறுக்கி வெகு ஜாக்கிரதையுடன் அனுபவ ரீதியாகப் பதம் செய்யப்படுவதால் நரஸூஸ் டீ நறுமணமுள்ளதாக இருக்கிறது. நரஸூஸ் காப்பிக்கோ சூரிய வெப்பத்தால் நன்ருக பழுத்த முதல்தரக் கொட்டைகளே பொறுக்கப்படுகின்றன. பிறகு நன்ருக வறுக்கப்பட்டு நீங்கள் விரும்பும் நறுமணமுள்ள இனிய காபிக்கான தூளாக செய்யப்படுகிறது.

# நரஸூஸ்




மற்ற விபரங்களுக்கும், மெயில் ஆர்டர்களுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :—

நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி

ஹெட் ஆபிஸ் :—சேலம்

# டீ, காபி

MNK 9 TM

---



# FREE

## அழகிய போட்டோ ஆல்பம்

அழகிய பெண்களை வசிகரமான நிலைகளில் எடுத்த பிரெஞ்சு ஆர்ட் போட்டோக்கள், 5 அணு தபால் தலை அனுப்புவோருக்கு அனுப்பப்படும். அவைகளோடு ஒரு ஆல்பமும் இனமாய் அனுப்புவோம். கொஞ்சம் ஆல்பங்களே மிஞ்சி இருக்கின்றன. ஏமாற்றம் ஏற்படாதிருக்க வேண்டுமானல், உடனே ஆர்டர் செய்யுங்கள்.

LONDON COMMERCIAL CO. P. B. 165 (S. M.) LAHORE (INDIA)

## 'சக்தி' வெளியீடுகள்

| | |
|---|---|
| இனி நாம் செய்ய வேண்டியது யாது ? | 1-0-0 |
| அசலா | 1-8-0 |
| அரசியல் ஞாபகங்கள் | 1-0-0 |
| சிறை அனுபவங்கள் | 1-0-0 |
| சூரிய நமஸ்காரம் | 1-0-0 |
| சரித்திரக் கதைகள் | 1-0-0 |
| கமலா முதலிய கதைகள் | 1-0-0 |
| அமெரிக்கா | 1-0-0 |
| உலகம் சுற்றும் தமிழன் | 1-0-0 |
| டால்ஸ்டாய் கதைகள் *2 பாகம் தனித்தனி* | 1-0-0 |
| அபேதவாதம் | 0-6-0 |
| கட்டுரைக் கோவை | (அச்சில்) |

ஆசிரியர் :
ராய. சொக்கலிங்கன்

| | |
|---|---|
| அகண்ட இந்தியா | 1-0-0 |

ஆசிரியர் :
கே. எம். முன்ஷி

மொழிபெயர்த்தவர் :
கொடுமுடி ராஜகோபாலன்

சக்தி காரியாலயம்
மதுரை - காரைக்குடி






பக்கத்திலிருக்கும் துண்டுப்படத்தில் காண்பதுபோலுள்ள தனது சாதாரணமான தோற்றம் மாறி, இந்த நண்பர் குதூகலித்துச் சம்பாஷிப்பதேன் ?

ஒவ்வொரு வேளையும்தான் வெற்றிலை போட்டுக் கொள்ளுகிருர் — ஏன் ?....ஒவ்வொரு நிமிஷமுங் கூடப் போட்டுக் கொள்ளுகிருர் ! பின் ஏன் இந்த இரண்டு முகங்களுக்கும் இவ்வித வித்தியாசம் ?

ஆஹா ! பாக்கின் மாறுதல் உள்ளத்தின் உணர்ச்சியை எவ்வளவு நன்ருக ருசுப்படுத்துகிறது ! அகத்தின் மகிழ்ச்சியைப் பிரத்யக்ஷமாய்க் காட்டும் அசோகா முகமெங்கே — போலிப் பாக்கைக் குதப்பும் இதர முகமெங்கே !

REGD. No. 1506 ASOKA அசோகா ரிஜிஸ்டர். நெ. 1506

**அகத்தின் அழகு முகத்தில் தெரியும்**

134198




# அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கைகண்ட இந்திய மருந்து இதுவே. ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிருர்கள்

**அமிர்தாஞ்சனம் லிமிடெட்**

மதராஸ் பம்பாய் கல்கத்தா

புதிய நூல்




அபிப்பிராயம்:

உலக ஸர்வமத சபைத் தலைவர் ஃபிரான்ஸிஸ் எங் ஹஸ்பெண்ட் (Sir Francis Younghusband) லண்டனிலிருந்து எழுதுகிறார்:

"என் காலத்தில் வெளிவந்த நூல்களில் மிகச் சிறந்தது இதுவே."

இந்நூலே ஸ்ரீ அரவிந்தரின் திருவுள்ளம்.

---

இது ஒவ்வொரு இல்லற வாசியும் படித்தறியத் தக்கது.

விலை ரூ. 1-0-0
தபால் செலவு தனி

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம்
திருச்சி (ஜில்லா)

V. Govindan at Shakti Press, Limited, Devakottah Road,

நாள் முழுதும்
மணம் கமழ

# மைசூர்

சந்தன சோப்



4 AUG 1942

மைசூர் சந்தன சோப்பின் ரம்யமான மணம் அதற்குப் பிரத்யேகமானது. ஸ்நானத்திற்கே ஒரு தனி சுகத்தையும் ஒரு அலாதி கௌரவத்தையும் தருகிறது. அழகுதானே கலை! அதைத்தான் மைசூர் சந்தன சோப் உங்களுக்கு அளிக்கிறது. நின்று மணக்கும் அதன் துல்லிய மணமும் மேனியை அழகு படுத்திக் காப்பாற்றும் அதன் குணமும் ஒப்பு உயர்வற்றவை. பண்டைக் காலம் தொட்டு, சந்தனம் ஓர் இன்றியமையாத வாசனைத் திரவியமாகக் கருதப்பட்டு வருகிறது. இன்றோ சந்தனத்தின் கந்தமும் மங்கள குணங்களும் மைசூர் சந்தன சோப்பிலேயே அமைந்திருக்கிறது.




எப்பொழுதும் எங்கும் கிடைக்கும்
தென் இந்தியாவுக்கு ஸோல் ஏஜெண்டுகள்
பெஸ்ட் & கம்பெனி லிமிடெட், சென்னை